கோகுலம்

GOKULAM

ஜூலை '88 விலை ரூ. 3.





புதியவை
கேம்ப்கோ
அளிக்கும்
சாக்கலேட் கொழிக்கும்
எக்ளேர்கள்
புதிய கேம்ப்கோ சாக்கலேட் எக்ளேர் —
பேக்கைப் பிரித்ததுதான் தாமதம், பறந்துவிடும்
அருஞ்சுவை எக்ளேர்கள். நண்பர்கள் மத்தியில் உங்கள்
புகழோ நிறைந்து விடும். உங்களது சரியான தேர்விற்குக்
கிடைப்பதோ நிறைவான
பாராட்டு
கேம்ப்கோ
சாக்கலேட் எக்ளேர்கள்
உன்னதமான சுவையை
பகிர்ந்து கொள்ளுங்கள்
இந்தியாவின் மிகப்பெரிய
அதிநவீன ஆலை அளிப்பது
கேம்ப்கோ லிமிடெட், மங்களூர்



உயிர்களிடத்தில் அன்பு வேணும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.
— பாரதியார்.

கோகுலம்

1988 ஜூலை மாத இதழ்
மலர் 6 : இதழ் 6
தனிப் பிரதி ரூ. 3/—
ஆண்டுச் சந்தா ரூ. 36/—

கௌரவ ஆசிரியர்: அழ. வள்ளியப்பா

புகைப்படம்: எம். நடராஜன்



அருமைச் சிறுவர் சிறுமியரே

கோடை விடுமுறை முடிந்தது. பள்ளிகள் திறந்தன. நீங்களெல்லாம் மேல் வகுப்பிற்குச் சென்று 'ஜம்'மென்று உட்கார்ந்திருப்பீர்கள். சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு அதிக மதிப்பெண்கள் பெற வேண்டுமென்ற ஆர்வத்தோடு படிபபீர்கள். உங்கள் அனைவருக்கும் கோகுலத்தின் நல்வாழ்த்து.

முன்பெல்லாம் 16 பக்கப் படக்கதை மட்டுமே வண்ணத்தில் வெளி வந்து கொண்டிருந்தது. இப்போது மற்றப் பக்கங்களிலும் வண்ணப்படங்களைக் கண்டு நீங்கள் மனத்தில் மகிழ்ச்சி கொண்டிருப்பீர்கள்.

கோடை விடுமுறைப் போட்டிக்கு நாள்தோறும் ஏராளமான விஷயங்கள் வந்து குவிந்துள்ளன. நீதிபதிகளின் பரிசிலனைக்கு அவற்றை அனுப்பி, கூடிய விரைவில் முடிவை அறிவிப்போம்.

ஒரு மகிழ்ச்சியான செய்தி. 'கோகுலம்' இந்த ஜூலை மாதத்திலிருந்து ஆங்கிலத்திலும் வெளிவருகின்றது.

கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர் தொகை 23,000-த்தைத் தாண்டி விட்டது. மேன்மேலும், உறுப்பினர் மனுக்கள் வந்து கொண்டிருக்கின்றன. விரைவில், உறுப்பினர் தொகை 25,000 ஆகிவிடும் என நம்புகிறோம்.

—அழ. வள்ளியப்பா—

இந்த இதழ் எழுத்தாளர்கள்



எஸ். கண்ணகி




ஆர். பி. சாரதி



காமாட்சி சுந்தரி

பிருந்தாவனக் கவிஞர்கள்


ஏ. பி. ராஜசேகரன்





எஸ். விஜயகுமார்

பிருந்தாவனக் கதாசிரியர்கள்




ஆர். அண்ணாதுரை

வி. புஷ்பா ஜெயஸ்ரீ



அட்டை வண்ணப்படம் : கே. வி. ஆனந்த்.

மின் மினிக் கதைகள்...



பழைய பாத்திரம்

"பாத்திரம் வாங்கலையோ... பாத்திரம்!" என்று கூவியபடியே வீதி வழியே சென்ற வியாபாரியை அழைத்தாள் ஒரு பாட்டி. அந்தப் பாட்டி வறுமை காரணமாக வீட்டிலே இருந்த பொருட்கள் எல்லாவற்றையும் ஒவ்வொன்றாக விற்றுவிட்டாள். கடைசியாக நீண்ட காலமாக யாருமே தொடாமல், வீட்டின் மூலையில் கிடந்த ஒரு களிம்பேறிய கறுப்புக் கிண்ணத்தை விற்க நினைத்தாள். அந்த வியாபாரியை அழைத்தாள்.

அந்த வியாபாரியோ ஒரு பேராசைக்காரன். அவன் அந்தக் கிண்ணத்தை ஓர் ஆணியால் கீறிப் பார்த்தான். அது பளிச்சென்று ஒளி வீசியதும், "அடே! இது பொற்கிண்ணம் அல்லவா!" என்று தன் மனத்திற்குள் நினைத்துக் கொண்டான்., இருந்தாலும், அவன் பேராசைக்காரனாயிற்றே! அதனால் பாட்டியிடம், "பாட்டி, இந்தக் கிண்ணத்திற்கு நான்கு ரூபாய்தான் தர முடியும்" என்றான்.

பாட்டியோ, "என்னப்பா, கிண்ணம் எவ்வளவு கனமாக உள்ளது. இருபது ரூபாய் கொடுப்பதானால் எடுத்துக் கொள்!" என்றாள்.

பேராசைக்காரன், ''காலணாக் காசு பெறாது. பாவம், கஷ்டப்படுகிறாயே, நான்கு ரூபாய் கொடுக்கலாம் என்று நினைத்தால்... 20 ரூபாய் வேண்டுமாம்! நீயே வைத்துக் கொள்!'' என்று கிண்ணத்தை வைத்து விட்டுப் போய்விட்டான்.

சிறிது நேரத்தில், அந்த வழியாக மற்றொரு வியாபாரி வந்தார். அவர் நேர்மையையே பெரும் மூலதனமாகக் கொண்டு வாழ்ந்து வந்தார். பாட்டி, அவரிடம் கறுத்துப் போன அந்தக் கிண்ணத்தைக் காட்டி, ''இதற்கு என்ன விலை கொடுப்பீர்கள்?'' என்று கேட்டாள். ஆணியால் கீறிப் பார்த்த வியாபாரி, அது பொற்கிண்ணம் என்பதை அறிந்தார். ''இது சாதாரணக் கிண்ணம் அல்ல. இது பொற்கிண்ணம் அம்மா. இதன் விலை ஐந்தாயிரம் ரூபாய் இருக்கும். என்னிடம் மூவாயிரம் ரூபாய்தான் உள்ளது. மேலும் விற்பதற்காக என்னிடம் உள்ள புதுச் சாமான்கள் அனைத்தையும் எடுத்துக் கொண்டு இந்தக் கிண்ணத்தை என்னிடம் தாருங்கள்'' என்றார். பாட்டியும் மகிழ்ச்சியுடன் மூவாயிரம் ரூபாயுடன், அவரிடம் இருந்த புதுச் சாமான்களையும் பெற்றுக் கொண்டு கிண்ணத்தைக் கொடுத்தாள். வியாபாரியும் பொற்கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டு கிளம்பி விட்டார்.

இரண்டு, மூன்று தெருக்கள் சுற்றிய பிறகு, திரும்பவும் அந்தப் பேராசைக்கார வியாபாரி, பாட்டியின் வீட்டிற்கு வந்தான். ''ஏய் பாட்டி, அந்தக் கிண்ணத்தைக் கொண்டா. மேற்கொண்டு இரண்டு ரூபாய் சேர்த்து ஆறு ரூபாயாகத் தருகிறேன்,'' என்றான்.

வேகமாய் வெளியே வந்த பாட்டி, ''என்ன! ஆறு ரூபாய் தருகிறாயா? ஐயாயிரம் ரூபாய்க்கு அந்தப் பொற்கிண்ணத்தை இப்போதுதான் ஒரு வியாபாரியிடம் விற்றேன்!'' என்றாள்.

''பாட்டியை நான் ஏமாற்ற நினைத்தேன். இப்போது நானே ஏமாந்து போனேனே!'' என்று தலையில் அடித்துக் கொண்டு தள்ளாடியபடியே நடந்தான் அந்த வியாபாரி.



பொன்னும் மண்ணும்

''அம்மா தாயே, சோறு போடுங்க... அய்யா, சாமி, காசு போடுங்க...'' என்று பிச்சை கேட்டபடியே ஒரு பிச்சைக்காரன் தெரு வழியே போய்க் கொண்டிருந்தான். அவன் கையிலே ஒட்டுப் போட்டுத் தைத்த ஒரு பழைய பை இருந்தது. அது தவிர, 5 பைசா நாணயங்கள் இரண்டு மூன்று இருந்தன. அவன் எதிர்பார்த்த அளவு சோறோ, காசோ சேராததால் மிகவும் சோர்வடைந்தான்.

வழியிலே ஒரு பெரிய மாளிகையைப் பார்த்தான். ''எவ்வளவு பெரிய வீடு! இந்தப் பணக்காரர்கள் மட்டும் எல்லா வசதியுடனும் இருக்கிறார்கள். அளவில்லாத செல்வத்தால் ஆடம்பரங்களிலும் ஆனந்தத்திலும் மூழ்கிக் கிடக்கிறார்கள். எனக்கு மட்டும் ஏன் இந்த நிலைமை?'' என்று தனக்குள்ளே புலம்பிக் கொண்டே சென்றான்.

அடிக்கடி அவன் அதிர்ஷ்டதேவதையை நினைத்து வேண்டிக் கொள்வான். ''அதிர்ஷ்ட தேவதையே! நீ கண் திறந்து என்னைப் பார்க்க மாட்டாயா? என் கவலைகளையெல்லாம் தீர்க்க மாட்டாயா?'' என்று புலம்புவான்.

ஒருநாள் அவன் முன் திடீரென்று அதிர்ஷ்ட தேவதை தோன்றியது. ''ஏழை மனிதா, நில்! நான்தான் அதிர்ஷ்ட தேவதை! உனக்கு உதவி செய்ய வந்திருக்கிறேன். இந்தா பிடி, உன் பையை! அது கொள்ளும் வரை பொற்காசுகளைக் கொட்டுகிறேன். ஆனால், ஒரு நிபந்தனை. பையை விட்டு வெளியே விழும் ஒவ்வொரு பொற்காசும் மண்ணோடு மண்ணாகிவிடும். உன் பையோ மிகவும் பழையதாகத் தெரிகிறது. எவ்வளவு தாங்குமோ அத்துடன் நிறுத்தும்படி கூறிவிடு, நிறுத்தி விடுகிறேன்,'' என்றது அதிர்ஷ்ட தேவதை.

இதைக் கேட்ட பிச்சைக்காரன் மிகுந்த சந்தோஷத்துடன் பையை விரித்துப் பிடித்தான். தேவதை பொற்காசுகளைப் பைக்குள் கொட்டியது. பை நிரம்பிவிட்டது. ஆனால், பேராசையால் பையைக் குலுக்கிக் குலுக்கிவிட்டுக் கொண்டே ''உம், இன்னும் இடமிருக்கிறது. போடு, தேவதையே, போடு'' என்றான்.

தேவதையோ, ''பை தாங்குமா?'' என்றது. ''ஏன் தாங்காது? நன்றாகத் தாங்கும்'' என்றான் பிச்சைக்காரன். தேவதை மேலும் பொற்காசுகளைச் சொரிந்தது. பை நிறைந்தும், மனம் நிறையாமல் இருந்த பிச்சைக்காரனின் பை, படீரென்று கிழிந்தது. நாணயங்கள் தரையில் உருண்டு மண்ணோடு மண் ஆயின! உடனே தேவதை மறைந்தது. பிச்சைக்காரன் கிழிந்த பையுடன் பழைய நிலையிலேயே நின்றான்.



தேர் எரிந்தது

மகாபாரதப் போர் நடந்து கொண்டிருந்தது. வெற்றி பாண்டவர்களை நெருங்கிக் கொண்டிருந்தது.

ஒருநாள், போர் முடிந்து அர்ச்சுனனின் தேர், அவர்கள் தங்கியிருந்த கூடாரத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. கண்ணன் தேரை ஓட்டி வருகிறான். அர்ச்சுனன் வெற்றிப் பெருமிதத்துடன் உள்ளே அமர்ந்திருக்

கிறான். 'என்னால்தான் பாண்டவர்களுக்கு வெற்றிமேல் வெற்றி வந்து கொண்டிருக்கிறது!' என்று கர்வத்துடன் நினைத்துக் கொண்டான் அர்ச்சுனன். ஆணவம் தலைக்கேறியது.

தேரோட்டம் நின்றது. ''அர்ச்சுனா, தேரை விட்டு இறங்கு. ஏதோ கற்பனை உலகில் மிதந்தபடி இருக்கிறாயே!'' என்றான் மாயக்கண்ணன் சிரித்தபடியே.

அதைக் கேட்ட அர்ச்சுனன், சமாளித்தபடியே, ''அதெல்லாம் ஒன்றும் இல்லை கண்ணா'' என்றான்.

பிறகு, ''நீ முதலில் இறங்கு, பிறகு நான் இறங்குகிறேன்'' என்றான்.

'நாமோ அரசன்; கண்ணனோ தேரோட்டி. தேரோட்டி இறங்கியதும் அரசன் இறங்கிச் செல்வதுதானே முறை? அதுதானே நமக்கும் கௌரவம்!' என்று உள்ளூர நினைத்துக் கொண்டான் அர்ச்சுனன். சிறிது அமைதிக்குப் பின் கண்ணன், ''நீதா ன முதலில் இறங்க வேண்டும். இறங்கு அர்ச்சுனா!'' என்றான்.


அர்ச்சுனன், ''இல்லை, இல்லை, கண்ணா. நீதான் முதலில் இறங்க வேண்டும். அதுதான் முறை'' என்றான். கண்ணன் மிகவும் கோபம் கொண்டான். ''இறங்குகிறாயா? இல்லையா?'' என்று அதட்டினான். அர்ச்சுனனும் வேறு வழியின்றி, தேரைவிட்டுக் கீழே இறங்கினான்.

கண்ணன் இறங்கிய மறுவிநாடி என்ன அதிசயம்! தேர் தீப்பற்றி எரிந்தது. ''என்ன கண்ணா இது, தேர் தீப்பற்றி எரிகிறதே!'' என்று அச்சத்துடன் கேட்டான் அர்ச்சுனன்.

கண்ணனோ அமைதியாக, ''பகைவனின் அக்னி அஸ்திரம் ஒன்று நம் தேரில் விழுந்தது. நெருப்பைக் கக்கும் அந்த பாணம், நான் தேரில் அமர்ந்திருந்ததால், தேரைச் சுட்டெரிக்கவில்லை. நான் இறங்கிய பின்னால் அது தன் வேலையைச் செய்கிறது. இப்போது புரிகிறதா, நான் ஏன் முதலில் இறங்கவில்லை என்று?'' என்று கேட்டார்.

அப்போது எரிந்து சாம்பலானது தேர் மட்டுமல்ல; அர்ச்சுனனின் ஆணவமும்தான்!

பழங்கதைகளைத் தொகுத்தவர்: தேவி நாச்சியப்பன்.



என் குழந்தைப் பருவம்

கண்ணதாசன்..



ஏஎல். எஸ். முத்தையா பிறந்தது சிறுகூடற்பட்டி என்ற ஊரில். 'கண்ண தாசன்' என்ற புனைபெயர் பிறந்தது இராமச்சந்திரபுரம் என்ற ஊரில். ஆம், புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள இராமச்சந்திரபுரத்தில் இருந்து 'திருமகள்' என்ற பத்திரிகை வெளிவந்து கொண்டிருந்தது.

அதில் சேருவதற்காகச் சென்ற முத்தையாவை, 'நீங்கள் என்ன பெயரில் எழுதி வருகிறீர்கள்?' என்று அந்தப் பத்திரிகை உரிமையாளர் கேட்டார். பாரதி தாசன், கம்பதாசன் என்ற பெயர்கள் நினைவுக்கு வரவே, 'நான் கண்ணதாசன்' என்ற பெயரில் எழுதி வருகிறேன் என்றார் முத்தையா. அன்று முதல் 'கண்ணதாசன்' என்ற பெயரே அவருக்கு நிலைத்து விட்டது.

அந்த இராமச்சந்திரபுரத்திற்கும் அதற்கு அடுத்தாற்போலுள்ள இராயவரம் என்ற ஊருக்கும் இடையிலேயுள்ள ஒற்றைப் பனைமரத்தடியில்தான் 'காலை குளித் தெழுந்து' என்ற இவரது முதற் பாடல் பிறந்தது!

அதன் பிறகு இவர் எழுதிய கவிதைகளும், திரைப்படப் பாடல்களும் பல ஆயிரங்கள் இருக்கும். புத்தகங்கள் என்று எடுத்துக் கொண்டால், அவற்றின் எண்ணிக்கை நூற்றுக்கு மேலிருக்கும்!

திரைப்படத் துறையிலே ஒரு பெரிய திருப்பத்தையே ஏற்படுத்தினார். 'கவிஞர் கண்ணதாசன்' 'கவியரசர் கண்ணதாசன்' எனப் போற்றப்பட்டார்.

ஒரு கவிதைப் புத்தக வெளியீட்டு விழாவிலே அறிஞர் அண்ணா சொன்னார்:

''கவிஞர் கண்ணதாசனை நான் பாராட்டினால், என் தம்பிமார்கள் சிலருக்குப் பிடிப்பதில்லை. 'மாற்றார் பாசறையில் இருப்பவரைப் பாராட்டுகிறீர்களே!' என்று குறைப்படுகிறார்கள். நான் கண்ணதாசனின் கவிதைகளைப் பாராட்டாத போனால், எனக்குத் தமிழ் மொழியிலே உண்மையான பற்று உள்ளதா என்பதே சந்தேகத்துக்கு இடமாகிவிடும். நல்ல தமிழ்க் கவிதைகளை அனுபவிக்கும் ஆற்றல் எனக்கு இல்லை என்று ஆகிவிடும். சிறந்த கவிஞனை எங்கிருந்தாலும் சரி, என்னால் பாராட்டாமல் இருக்க முடியாது'' என்றார்.

தமிழக முதல்வராயிருந்த எம். ஜி. ஆர். இவரை அரசவைக் கவிஞராக நியமித்தார். இவரால் அந்தப் பதவி பெருமை பெற்றது.

சிறுகூடல்பட்டி —


இவ்வூர், அன்றைய இராமநாத புரம் மாவட்டத்தைச் சேர்ந்த திருப்பத்தூரில் இருந்து புதுக்கோட்டைக்குச் செல்லும் சாலையில் ஐந்தாவது கல் தொலைவில் பிரியும் தடத்தில் உள்ள சிற்றூர்.,

பெரும்பாலும் நகரத்தாரே வாழும் இவ்வூரின் நான்கு புறமும் கண்மாய்கள். கண்மாயின் உட்தாவில் ஊர் அமைந்துள்ளது. ஊரின் கிழ்ப்புறத்தில் மலையரசி அம்மன் கோவிலும் மேற்புறத்தில் சிவன் கோவிலும் வழிபடுமிடங்கள்.

இங்கு வெள்ளையன் செட்டியார் வீடு என்றழைக்கப்படும் வீட்டில் அவரது மூத்த மகனான சாத்தப்ப செட்டியாருக்கும்விசாலாட்சி ஆச்சிக்கும் எட்டாவது மகனாக நான் பிறந்தேன். என் பெற்றோர் எனக்கு வைத்த பெயர் முத்தையா.

1927 — ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 24 — ஆம் நாள் நான் பிறந்த போது எங்கள் குடும்பம் செல்வச் செழிப்பில் ஓகோவென்றிருந்தது.

என் தகப்பனாருக்கு பர்மாவில் வட்டித் தொழில். ஒட்டன் சத்திரத்தில் என் தாத்தா வெள்ளையன் செட்டியார் ஜின்னிங் பாக்டரி ஒன்றை நடத்தி வந்தார். என் தாயார் விசாலாட்சி ஆச்சி சிவந்த நிறம்; நல்ல உயரம்; எல்லாரிடத்திலும் அன்பு செலுத்தி எளிமையாகப் பழகுவார். பள்ளியில் பயிலாத அந்த மாதரசி தாய்வழி வந்த மரபின்படி தாலாட்டுப் பாடுவதில் வல்லவர்.



ஒப்பு வைத்துப் பாடினால், அதைக் கேட்க ஊரே திரண்டு நிற்கும்.

சேற்றிலொரு செங்கழுநீர்
திங்களொரு பூப்பூக்கும்
நூற்றிலொரு பூவெடுத்து
முடிப்பார் மகனாரோ!

— என்று என் தாயாரின் தாலாட்டுப் பாடலில் கண்வளர்ந்து வளர்ந்தேன்.

ஏழு பிள்ளைகளையும் விட என் ஆத்தாளின் (தாயாரின்) செல்வாக்கு எனக்கு அதிகம். என் அப்பச்சி (தந்தை) கோபக்காரர். செலவாளி.

என் ஆரம்பக் கல்வி உள்ளூர்ப் பள்ளிக்கூடத்தில் ஆரம்பமாயிற்று.

பள்ளிப் படிப்பில் மிகச் சூட்டிக்கையாக விளங்கிய நான் சுட்டித்தனம் செய்வதிலும் அவ்வாறே இருந்தேன்.

பாடங்களானாலும் இதர விஷயங்களானாலும் படிக்கும்போதே எனக்கு மனப்பாடமாகிவிடும். அதே போல் வானொலியில் இசைக்கப்படும் பாடல்களையும் செவியில் கேட்ட மாத்திரத்திலேயே எனக்குப் பாடமாகி விடும்.

நோட்டுப் புத்தகமும் கையுமாக வானொலிமுன் அமர்ந்து, ஒலிக்கும் பாடல்களை வரிவிடாது குறித்துக் கொள்வேன். அவற்றில் எனக்கு மிகவும் பிடித்த பாடல்களின் பல்லவிகளை எல்லாம் குரலெடுத்துப் பாடுவேன்.

இப்படி நான் முழுப் பாட்டையும் பாடாது முதல் இரண்டு வரிகளை மட்டுமே பாடிக் கொண்டிருப்பதை, பக்கத்து வீட்டு ஆச்சி ஒருவர் கேட்டு விட்டு என் தாயாரிடத்தில், ''ஏன் ஆச்சி! நம்ம தம்பி முத்து பாட்டை முழுக்கப் பாடாமல் முதல் வரியை மட்டும்பாடுதே'' என்றுகேட்டார்கள்.

அதற்கு, ''அடி போடி, மருக்கோளி! எம் மகன் ஆயிரம் பாட்டுக்கு அடி எடுத்துக் கொடுப்பான்டி'' என்று பதில் சொன்னார்கள் என் தாயார்.

எதிர்காலத்தில் தன் மகன் முத்தையா, கவிஞர் கண்ணதாசனாக மாறிக் கவிதைகள் இயற்றவும், பல்லாயிரம்பாடல்களை இயற்றவும்போகின்

நான் என்று தெரிந்தோ தெரியாமலோ அன்று என் அருளன்னை கூறிய சொற்கள் பலிதமாகிவிட்டன!

காலையிலும் மாலையிலும் நெற்றியில் நீறணிந்து வீட்டிற்கு அருகில் உள்ள மலையரசி அம்மன் கோவிலுக்குச் செல்வேன்.

மாலை நேரங்களில் கண்மாய்க் கரையின் மேலுள்ள அடர்ந்த பனை மரத்தோப்புக்குள் அமர்ந்து எனக்குப் பாடமான பாடல்களைப் பாடிக் கொண்டிருப்பேன். ஆரம்பக் காலங்களில் இதுவே எனது பொழுதுபோக்காக இருந்தது.



உள்ளூர்ப் பள்ளிப் படிப்பு முடிகின்ற தருணத்தில் என் குடும்பம் வறுமைக்குள்ளானது. என் தகப்பனார் பர்மாவுக்குச் செல்வதை விட்டார். என் தாத்தா காலமானார். ஒட்டநத்தத்தில் இயங்கி வந்த ஜின்னிங் பாக்டரி கவனிக்க முடியாத நிலையில், வந்த விலைக்கு விற்கப்பட்டது.

குடும்பத்தின் இரங்கத் தக்க நிலை என்னை மிகவும் வாட்டியது. தினமும் மலையரசி அம்மன் கோவிலுக்குச் செல்லும் நான், அந்த அம்மனிடம் எங்கள் குடும்பத்தைக் காப்பாற்றி நல்வழிப் படுத்தும்படி மனமுருக வேண்டிக் கொள்வேன்.

ஒருநாள் மாலை இவ்வாறு கோவிலுக்குச் சென்ற நான், விளக்கு வைத்த பிறகும் வீட்டிற்குத் திரும்பாததைக் கண்ட என் தகப்பனார் எங்கெங்கோ தேடிவிட்டுக் கோவிலுக்கு வந்தார்.

நான் கோவிலில் இருக்கக் கண்டதும் கோபக்காரரான என் தந்தைக்கு மேலும் கோபம் வந்து விட்டது. விளக்கு வைத்தும் வீட்டுக்கு வராது தன்னைத் தேடி அலைய வைத்து விட்டானே என்ற கோபமே அது!

வீட்டுக்குஅழைத்துச்சென்றுஇடையில் அணியும் வார் பெல்ட்டால் செம்மையாக உதைத்து விட்டார்., மேனி எங்கும் பட்டை பட்டையாகச் சிவந்து தடித்து விட்டது.

அதைக் கண்ட என் தாயார், ''சின்னமுள்ள மகன் சிந்தையுருகியல்ல கோவிலுக்குப் போனான்'' என்று என்னை மடியில் கிடத்தி மஞ்சள் ஒத்தடம் கொடுத்தார்கள்.

சின்ன வயதிலேயே என் தாயாரிடத்தில் அளவு கடந்த பற்றும், பாசமும் ஏற்பட்டு விட்டது.

உள்ளூர்ப் பள்ளிப் படிப்பு முடிந்ததும் உயர்நிலைப் பள்ளியில் படிப்பதற்காக, காரைக்குடியிலிருந்து தேவகோட்டை செல்லும் சாலையில் உள்ள அமராவதிபுதூர் சுப்பிரமணியம் செட்டியார் குருகுலத்தில் என்னைச் சேர்த்தார்கள்.

அங்கு படிப்பு, உணவு, உடை, உறைவிடத்திற்காக மாதம் செலுத்திய ரூபாய் மூன்று!

அங்கே ஏழாவது வகுப்பில் படிக்கும் போது புதிதாகத் துவக்கப்பட்ட இந்தி வகுப்பிலும், தமிழ்வித்துவான் வகுப்பிலும், சேர்ந்து படித்து இந்தி நுழைவுத் தேர்விலும், வித்துவான் படிப்பில் முதலாண்டும் தேர்வு பெற்றேன்.



எட்டாவது வகுப்பில் தேர்வு பெற்ற போது படிப்பை மேலும் தொடர முடியாத நிலை குடும்பத்தில் உருவானது. என் படிப்புக்கு முற்றுப் புள்ளி வைத்தாகிவிட்டது.

குருகுலத்தில் படிக்கும் போது காரைக்குடியில் ஆண்டுதோறும் நடைபெறும் கம்பன் விழாவிற்கு மாணவர்களை ஆசிரியர்கள் அழைத்து வருவார்கள். அதில் நானும் தவறாது பங்கு பெறுவேன். அந்த விழாவில் ரசிகமணி திரு. டி. கே. சிதம்பர நாத முதலியார் கம்ப ராமாயணக் கவிதைகளை எல்லோருக்கும் எளிதில் புரியும்படி பதம்பிரித்துப் பொருள் விளங்கக் கூறுவதைக் கேட்டு அப்படியே நினைவில் பதித்துக் கொள்வேன்.

இதுவே பிற்காலத்தில் நான் கவிதை எழுதுவதற்குப் பெரிதும் உதவிற்று.

குருகுலத்தில் படித்துக் கொண்டிருக்கும் காலத்தில் தாய் — தந்தையரைக் காண வேண்டும் என்ற ஆவலில் நிர்வாகிகளுக்குத் தெரியாமல் அடிக்கடி குருகுலத்தை விட்டு ஊருக்கு வந்து விடுவேன். இரண்டு நாட்கள் சென்று என் தகப்பனார் அழைத்து வந்து மீண்டும் சேர்த்து விடுவார்.

இப்படியொரு சம்பவத்தின் போது குருகுலத்திலிருந்து என்னை வெளியேற்றி விட்டார்கள்.

குருகுலத்தில் எனக்கு ஏற்பட்ட நண்பர்கள் மூவர். ஒருவர் காலம் சென்ற கவிஞர் திரு. நாக. முத்தையா; மற்றவர் மதுரை வங்கியின் சேர்மனாக இருந்து ஓய்வு பெற்ற திரு. முத்தையா; மூன்றாமவர் இன்று மலேஷியாவில் பிரபலமான வழக்குரைஞராக விளங்கும் வெங்கடாசலம்.



நாடெங்கும் தேசபக்திக் கனல் கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்த சுதந்திரப் போராட்ட காலம் அது.

உள்ளூர்த் தேச பக்தர் காந்தி குப்பான் செட்டியாரின் தொடர்பு எனக்கு ஏற்பட்டது. என் பாட்டு அவரைக் கவர்ந்தது.

அப்போது தென் மாவட்டங்களில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மிகவும்புகழ்பெற்ற காங்கிரஸ் தலைவராக விளங்கினார். அதே மாதிரி புதுக்கோட்டை வல்லத்தரசுவும் புகழ் பெற்றவர்.

இவர்கள் இருவரையும் கொண்டு காந்தி குப்பான் செட்டியார் கூட்டம் நடத்தினார். அந்தக்கூட்டத்தின் துவக்கத்தில் நான் தலையில் மஞ்சள் குல்லா அணிந்து, அவ்வட்டாரத்தில் அப்போது மக்களின் செவிக்கினிய பாடலாக ஒலித்துக் கொண்டிருந்த 'முத்து ராமலிங்கம், எங்கள் முதுகுளத்தூர் சிங்கம்' எனத் தொடரும் பாடலைக் குரலெடுத்துப் பாடினேன்.



சட்டிச் சாமியார் என்னும் பெரியவர் ஒருவர் சிறுகூடல் பட்டியில் வாழ்ந்து வந்தார். நெற்றி நிறைய நீறும், இடையில் ஒரு துண்டுமே அவரது ஆடை. அவர் யார், எங்கிருந்து

வந்தார், என்பதெல்லாம் ஒருவருக்கும் தெரியாது. அவர் கையேந்தி வீடுகளின் முன் நிற்க மாட்டார். வீதி வழியே அவர் சித்தர்கள் பாணியில் பாடிக் கொண்டு வருவார். யாராவது நிறுத்திச் சாப்பிடுவதற்கு அழைத்தால் மட்டுமே போவார்.

அந்தச் சாமியார் பாடிக் கொண்டு வரும் போது நானும் அவரைப் பின் தொடர்ந்து செல்வேன்.

இதனை ஒருநாள் என் தகப்பனார் பார்த்துக் கண்டித்து, இனிமேல் அவர் பின் செல்லக் கூடாது என்று தடுத்து விட்டார்.

அவரது நினைவாக அவர் பாடிய பாடலை நான் பின்னாளில் பாடுவதுண்டு. அந்தப் பாட்டு:

'பட்டதுன்பம் மெத்த உண்டுங்க!' என்று தொடங்கும்.

படிப்பு முடிந்து கிராமத்திற்கு வந்த பிறகு எனக்கு எழுத வேண்டும் என்ற ஆசை படிப்படியாக வளர்ந்தது.

கிடைக்கின்ற காசுக்கெல்லாம் நோட்டுப் புத்தகங்களை வாங்கிக் கொண்டு மாலைவேளையில் ஊருக்கு இரண்டு மைல் தொலைவிலுள்ள பாப்பாத்தி ஊருணிக்கரையில் இடப்பட்டிருக்கும் படுக்கைக் கல்லில் அமர்ந்து கொண்டு ஏதாவது எழுதிக் கொண்டிருப்பேன்.

அப்பக்கம் வரும் ஊர்க்காரர்கள் இதைப்பார்த்துக்கேலி செய்வார்கள். நான் அதைப் பொருட்படுத்த மாட்டேன்.

இரவில் கூட வீட்டில் மண்ணெண்ணெய் விளக்கை வைத்துக் கொண்டு நீண்ட நேரம் ஏதாவது எழுதிக் கொண்டிருப்பேன். அதைக் கண்டு, 'மண்ணெண்ணெய் வீணாகப் போகிறதே!' என்று என் தகப்பனார் கோபித்தார். தாயாரோ, "கதை எழுதற பிள்ளையைக் கோவிக்கலாமா?" என்றார்கள்.

கதை, கவிதை என்று எதை எதையோ எழுதிக் கொண்டிருந்தேன். அப்படி எழுதப்பட்ட கதையொன்றை திருச்சியில் இருந்து வெளிவந்த 'கிரகலட்சுமி' என்ற மாத இதழுக்கு அனுப்பி வைத்தேன்.



'நிலவினிலே' என்ற தலைப்பில் அந்தச் சிறுகதை முதன் முதலில் பிரசுரமாயிற்று.

'நாமும்எழுத்தாளராகலாம்' என்ற நம்பிக்கை என் மனத்தில் திடப்பட்டது.

ஒருநாள் நான் யாருக்கும் தெரியாமல் வீட்டை விட்டுக் கிளம்பி விட்டேன்.


அப்புறம்......?

எத்தனையோ தொல்லைகளுக்கும், துயரங்களுக்கும் இடையே படிப்படியாக முன்னேறி, ஏராளமான கவிதைகளையும், திரைப்படப் பாடல்களையும் இயற்றினேன். அவற்றிற்குத் தமிழ் மக்களின் அன்பும் ஆதரவும் கிடைத்தன. மேன்மேலும் எழுதத் தூண்டின.

இதற்கு மேல் என் வாழ்க்கை வரலாற்றை அறிய வேண்டுமானால், நான் எழுதிய 'வனவாசம்,' 'மனவாசம்' படித்தால், தெரிந்து கொள்ளலாம்.

தொகுத்து எழுதியவர்:
இராம. கண்ணப்பன்.

யூகோஸ்லேவியாவில் டப்ரோவ்னிக் நகரத்தின் பகுதியில் ஒரு மணிக்கூண்டு இருக்கிறது. இதிலுள்ள கடிகாரம் ஒவ்வொரு மணிக்கும் ஓசை எழுப்புவதோடு அதன் பிறகு மூன்று நிமிஷம் கழித்தும் ஒரு முறை அடிக்கும். எதற்காக? அசமந்தமாக இருக்கும் சோம்பேறிகளுக்காக!





அரங்கத்தில் அதிசய

அந்தக் காலத்தில் பேரப் பிள்ளைகளை மடியிலிருத்தி, ''அதோ பார், வான மண்டலத்தில் செவ்வாய், வெள்ளி, புதன் கோள்கள்'' என்று எடுத்துச் சொல்லி வான சாஸ்திரத்தைப் புரிய வைப்பார்கள், தாத்தாவும் பாட்டியும். இந்தக்காலத்தில் அன்னையிடம், ''அம்மா! வானத்தில் அது என்ன நட்சத்திரம்?'' என்று வினவினால் உடனே, ''அது என்ன நட்சத்திரம் என்று தெரியவில்லை. ஆனால், இதோ பார் துருவ நட்சத்திரம்'' என்று பதில் சொல்வாள்.

விஞ்ஞானத்தில் ஆசைமிக்க சிறுவர் சிறுமிகளின் நெடுநாள் ஆசை பூர்த்தியாகியிருக்கிறது. கோட்டூர்புரம் செல்லும் காந்தி மண்டபம் சாலையில் பி. எம். பிர்லா கோளரங்கம் முதியோரிலிருந்து இளஞ்சிட்டுக்கள் வரை அதிசய விண் உலகைக் காட்டி மகிழ்விக்கக் காத்திருக்கிறது.

தமிழ்நாடு அறிவியல் தொழில் நுட்ப மையங்களின் நிர்வாக இயக்குநர் ஆர். பெரியசாமி அவர்களைச் சந்திக்கிறோம்.

''கல்கத்தா, பம்பாய் நகரங்களில் கோள் அரங்கம், விஞ்ஞானக் கண்காட்சிகள் இடம் பெற்றிருக்கத் தமிழகத்தின் தலைநகரில் இம்மாதிரி இல்லாதது பெருங்குறையாக இருந்தது. தமிழக அரசு கோள் அரங்க அமைப்புக்கு அக்கறை எடுத்துக் கொண்டது. பிரபல தொழிலதிபர் பி. எம். பிர்லா கோள் அரங்கம் நிர்மாணிக்க இரண்டு கோடி ரூபாய் வழங்க முன்வந்தார். ஜப்பான் நாட்டு கோட்டோ ஆப்டிகல் மான்யு பாக்சரிங் நிறுவனம் கோள் அரங்கக் கருவிகளை வழங்கியுள்ளது. கோள் அரங்கம் முழுவதும் குளிர் பதனம் செய்யப்பட்டுள்ளது'' என்று விவரிக்கிறார் திரு. பெரியசாமி.

பி.எஸ்.மணி

பி.எம். பிர்லா கோள் அரங்கத்தை பாரத ஜனாதிபதி ஆர். வேங்கட ராமன் 1988 மே 11 –ந்தேதி தொடங்கி வைத்தார். அறிவூட்டும் பிர்லா கோள் அரங்கத்தை அவர் குத்து விளக்கேற்றி ஆரம்பித்து வைத்த தினத்தில் சிறுவர்களிடம் ஜனாதிபதிக்குள்ள பிரியத்தைத் தெரிந்து கொள்ள முடிந்தது.

பிர்லா கோள் அரங்கம் நுழைவுக்குப் பெரியவர்களுக்கு ஐந்து ரூபாய் கட்டணமும் சிறுவர்களுக்கு மூன்று ரூபாய் கட்டணமும் வைத்திருந்தார்கள். இதைக் கேள்வியுற்ற ஜனாதிபதி, சிறுவர்களுக்கான கட்டணத்தை உடனே ஒரு ரூபாயாகக் குறைக்கும்படி கேட்டுக் கொண்டதும் அப்படியே அமுலாக்கி விட்டனர் நிர்வாகத்தினர். கோளரங்கத்திற்குத் திங்கட்கிழமை மட்டும் விடுமுறை.

கண்ட உலகம்

1913 – இல் நவீன கோள் அரங்கத்துக்கு உருவம் கொடுத்தவர் டாக்டர் ஆஸ்கார் வான்மில்லர். இரவு நேர வான மண்டலத்தைப் பூகோள மாதிரிகளில் காண்பிக்க முனைந்தார். இந்த மாதிரி கண்காட்சியில் சூரியன், சந்திரன், மற்ற கோளங்களின் நகர்வுகளைச் சுட்டிக் காட்ட இயலவில்லை. ஆகவே டாக்டர் பாஸர்பெல்ட் புதிய கோளரங்கம் நிர்மாணித்துத் தருவதில் வெற்றி பெற்றார்.


''இன்று ஞாயிற்றுக் குடும்பத்தைப் பற்றி ஆய்வு நாற்பது நிமிஷங்களில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இன்னிசைக்கு மட்டுமே கிட்டத்தட்ட ஐம்பதினாயிரம் ரூபாய் செலவழித்திருக்கிறோம். மெல்லிசை மன்னர் எம். எஸ். விசுவநாதன் இதற்கு இசை அமைத்துத் தந்திருக்கிறார். இனிய குரல் வளம் படைத்த பாத்திமாவும் எச். ராமகிருஷ்ணனும் இன்னிசைக்கு மத்தியில் வானுலகின் அதிசயங்களைத் தமிழில் வர்ணனையாக விவரித்துக் கூறுகிறார்கள். தமிழில் நான்கு காட்சிகளும் ஆங்கிலத்தில் மூன்று காட்சிகளும் இடம் பெறுகின்றன!'' என்று கூறுகிறார் நிர்வாக இயக்குநர் பெரியசாமி.

பிர்லா கோள் அரங்கம் அழகிய பூங்காவின் மத்தியில் சாரிசாரியாகப் பெரியவர்கள் குழந்தைகளுடன் க்யூ வரிசையில் ஆவலுடன் கண்டு களிக்க வரும் கண்காட்சியாகும்.

சூரியன் மறையும் காட்சி, நட்சத்திரங்கள் ஜொலிக்கும் அதிசயம், கோள்கள் வலம் வரும் நிகழ்ச்சிகள், கோள்கள், நட்சத்திரங்களைப் பற்றிய விவரங்கள் ஆகியவை எங்கோ அதிசய உலகில் சஞ்சரித்த பிரமையை ஏற்படுத்துகின்றன. கோள் அரங்கில் விசேஷமாகத் துளையிடப்பட்ட அலுமினிய விதானம் ஆகாசமாகப் பரிமளிக்கிறது. நல்ல குஷன் நாற்காலிகளில் 236 பேர்கள் சௌகரியமாக அமர்ந்து விண்ணுலகின் அற்புதங்களைக் கண்டு மகிழலாம்.

''ஞாயிறு குடும்பத்தின் ஆய்வுக் கண்காட்சி இன்னும் இரண்டொரு மாதங்கள் நடைபெறும். இதற்குப் பிறகு மற்றொரு கோள் பற்றிய ஆய்வைத் தயாரித்து விடுவோம். ஒரு கண்காட்சிக்கு, கிட்டத்தட்ட லட்ச ரூபாய் செலவிட வேண்டியிருப்பதால் அதை மூன்று மாதங்கள் நடத்திக் காட்டுகிறோம். ஒரு நாளைக்குக் கோள் அரங்கத்தில் மின் செலவே ஆயிரம் ரூபாய்க்கு மேல் ஆகிறது. அதுதவிர தினசரி ஆறேழு பணியாளர்கள் சலவைக்கல் தரையையும், உலோகங்கள் பதித்த பெரும் கதவுகளையும் துடைத்துச் சுத்தமாக வைத்திருக்கப் பாடுபடுகிறார்கள். இதனால்தான் பெரியவர்களுக்கு நுழைவுக் கட்டணம் ஐந்து ரூபாயாக வைக்க வேண்டி நேர்ந்தது!'' என்று சமாதானம் தருகிறார் நிர்வாக இயக்குநர்.

பல்லாயிரக்கணக்கான மைல்கள் தூரத்திலுள்ள கிரகங்களையும் நட்சத்திரங்களையும் அருகில் கண்டு



களிக்கக் கோள் அரங்கம் வழி செய்கிறது! இந்திர ஜாலம், மகேந்திர ஜாலம் போல் அனைத்து நட்சத்திரங்களும், கிரகங்களும் பவனி வரும் காட்சி மலைக்க வைக்கிறது.

ஞாயிற்றுக் குடும்ப ஆராய்ச்சியில் கிடைத்த ரஸத் துளிகள் இதோ:


* ஞாயிற்றுக்கு அருகிலுள்ள கோள் புதன். மற்ற கிரகங்கள் வெள்ளி, பூமி, செவ்வாய், சனி, திருதி, வருணன், குபேரன் வெவ்வேறு தொலைவுகளில் உள்ளன.


* சூரியனில் உள்ள ஹைட்ரஜன் அணுக்கள் ஹீலியம் அணுக்களாக அணுக்கரு வினையால் மாறுவதால் சூரியன் பல மில்லியன் ஆண்டுகளுக்குத் தேவையான ஒளி, வெப்பத்தைத் தரும்.

* புதன் கோளில் அதிக வெப்பமும் அதிக குளிரும் இருப்பதோடு வாயு மண்டலமும் இல்லை. இங்கே உயிர் வாழ இயலாது.

* வெள்ளிக் கோளில் வெப்பம் 48 டிகிரி செல்சியஸ். இங்குள்ள மேகங்கள் கந்தக அமில வாயுவினால் உருவானவை.

* செவ்வாய் கோளத்திலும் உயிரி






னங்கள் வாழ முடியாது.

* ஞாயிற்றுக் குடும்பத்தில் அழகான கோள் சனி. இக்கோளம் வளையங்களினுள் அமைந்திருக்கும் அதிசயத்தைக் காணலாம்!

* இதுவரை சந்திரனில் பன்னிரண்டு பேர்கள் நடந்து நூற்றுக்கணக்கான கிலோ கிராம் கற்களையும் மண்ணையும் பூமிக்கு எடுத்து வந்துள்ளனர்.

எனக்கு அருகில் தாயும் சிறுமியும் அமர்ந்து அதிசய உலகைக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தனர்! காட்சி முடிந்து வெளியேறும் போது சிறுமி அன்னையிடம்,

''அம்மா! எனக்கு இன்னொரு காட்சியும் பார்க்கணும்னு ஆசையா இருக்கு! இன்னொரு தரம் டிக்கெட் வாங்கு!'' என்று நச்சரித்ததைக் கண்டேன். பிர்லா கோள் அரங்கத்துக்கு வரும் ஒவ்வொருவருக்குமே இந்த எண்ணம் எழுந்தால் அதிசயமில்லை!





ஜூலியஸ் சீசர்



நாவலாசிரியர் ஹெமிங்வே

கிறிஸ்து பிறப்பதற்கு முன் ரோம் நாட்டில் பிறந்தவர் இவர். உலகப் புகழ் பெற்ற அரசியல் மேதைகளில் ஒருவர். இவர் ஒரு சிறந்த படைத் தலைவராகவும் விளங்கினார்.

இவர் சில தலைவர்களுடன் சேர்ந்து ரோமில் கூட்டு ஆட்சியை ஏற்படுத்தினார். இப்போது பிரான்ஸ் என்று அழைக்கிறோமே, அதற்கு அப்போது கால் (Gaul) என்று பெயர். அந்த நாட்டின் மீது படையெடுத்து வெற்றி பெற்று அதை ரோம் ஆட்சியின் கீழ் கொண்டு வந்தார். பிரிட்டன் மீதும் இரு முறை படையெடுத்து வென்றார்.

சிறந்த பேச்சாளராகவும் அரசியல் திறமைமிக்கவராகவும் திகழ்ந்த இவர், மக்களின் உரிமைகளை ஆதரித்தார். பல சீர்திருத்தங்களைச் செய்தார். இப்படி இவர் செய்ததால், இவருக்கு மக்களிடையே செல்வாக்கு அதிகரித்தது.

ஆங்கிலப் பஞ்சாங்க முறையை இப்போது உள்ளபடி அமைத்தவரே ஜூலியஸ் சீசர்தான். ஆங்கில மாதங்களில் ஏழாவது மாதத்தை 'ஜூலை' என்கிறோமல்லவா, அது இவருடைய பெயரிலிருந்துதான் வந்தது.

இவர் புகழ் நாளுக்கு நாள் பெருகி வருவதைக் கண்ட சிலர், இவரை எப்படியாவது ஒழித்துக்கட்ட வேண்டுமென நினைத்தார்கள். இவருடைய நெருங்கிய நண்பர்களில் சிலரும் இவருடைய செல்வாக்கைக் கண்டு பொறாமை அடைந்தார்கள். அவர்கள் எதிரிகளுடன் சேர்ந்து சதி செய்து சீசரைக் கொன்று விட்டார்கள்.

இவருடைய வரலாற்றை அடிப்படையாக வைத்து, 'ஜூலியஸ் சீசர்' என்ற புகழ்பெறற நாடகத்தை எழுதியிருக்கிறார் ஷேக்ஸ்பியர்.

எர்னஸ்ட் மில்லர் ஹெமிங்வே என்பது இவரது முழுப் பெயர். அமெரிக்காவைச் சேர்நத இவர், இருபதாம் நூற்றாண்டின் சிறந்த நாவலாசிரியர் எனப் போற்றப்படுபவர். 1954 — இல் இவர் எழுதிய 'The Old Man And The Sea' என்ற நாவலுக்கு நோபல் பரிசு கிடைத்தது. அந்தப் புத்தகம் பல மொழிகளில் வெளிவந்துள்ளது. 'கடலும் கிழவனும்' என்ற பெயரில் தமிழில் கூட வெளிவந்துள்ளது.

முதலாவது உலக யுத்தம் நடந்த போது, இவர் போர் வீரனாக ஆசைப்பட்டார். ஆனாலும் சிறு வயதிலே இவருக்குக் கண் நோய் வந்து அவதிப்பட்டார் என்பதை அறிந்து, இவரைப் படையிலே சேர்த்துக் கொள்ள மறுத்துவிட்டார்கள். ஏமாற்றமடைந்த இவர், செஞ்சிலுவைச் சங்கத்தில் ஆம்புலன்ஸ் டிரைவராகச் சேர்ந்தார்.

இவர் மொத்தம் ஆறு நாவல்களும் ஐம்பதுக்கும் மேற்பட்ட சிறுகதைகளும் எழுதியிருக்கிறார்.

இவரது நாவல்களில் யுத்தக் காட்சிகள், பயண அனுபவங்கள், கடல் வாழ்க்கை, போன்ற பலவற்றையும் நேருக்கு நேராகக் காண்பதுபோல் சித்திரிக்கப்பட்டிருக்கும். இவை எல்லாவற்றிற்கும் மேலாக அன்பின் பெருமையை நன்குணர்த்தக் கூடியவையாக அவை இருக்கும்.

வயதான காலத்தில் இவர் நோயினால் மிகவும் துன்பமுற்றார். ஞாபக மறதி நாளுக்கு நாள் அதிகமானது. இருமுறை மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை பெற்றார். யுத்த களத்தில் உயிரையும் மதியாமல் போராடத் துடித்த இவர், நோயுடன் போராட முடியாமல், தம்மைத் தாமே துப்பாக்கியால் சுட்டுக் கொண்டு இறந்து விட்டார்!



''காட்டிலே பெரிய காடு என்ன காடு?''
''முக்காடு!''



நீ அந்தப் பக்கம் பார்; நான் இந்தப் பக்கம் பார்க்கிறேன். எதிரிகள் வந்தால் குதறி எறிஞ்சிடலாம்.''

புகைப்படங்கள்: பார்வதீசம், ஹைதராபாத்.

பிருந்தாவனக் கவியரங்கம்



இறைவன் சிரிக்கின்றான்

காலைக் கதிரவன் ஒளியினிலே — தென்றல்
காற்றின் மெல்லிய ஒலியினிலே
சோலைப் பறவைகள் மொழியினிலே — அவை
சேர்ந்து பறந்திடும் அழகினிலே

மறைவாய் இறைவன் சிரிக்கின்றான் — அவன்
மனத்தை மகிழ்வால் நிறைக்கின்றான்.

தென்னங் கீற்றின் சலசலப்பில் — அங்கே
சிட்டுக் குருவியின் கலகலப்பில்
செந்நெல் வயலின் சிலுசிலுப்பில் — அதைச்
செழிக்கச் செய்திடும் நீர்ப்புனலில்

மறைந்தே இறைவன் சிரிக்கின்றான் — அவன்
மௌன கீதம் இசைக்கின்றான்.

மலர்ந்த மலரின் மணமாக — எழில்
மாலை நிலவில் அமுதாக
குழந்தையின் மழலை மொழியாக — அதன்
குறுகுறு கண்ணில் விழியாக

மறைந்தே இறைவன் சிரிக்கின்றான் — அவன்
மங்கல கீதம் இசைக்கின்றான்.

கடலில் அலையின் மடிப்பாக — நம்
உடலில் உயிரின் துடிப்பாக
சுடரும் உண்மை வடிவாக — இங்கு
சொல்லுக்கு அடங்காப் பொருளாக

மறைந்தே இறைவன் சிரிக்கின்றான்
மறைவாய் எதிலும் சிரிக்கின்றான்.

— எஸ். விஜயகுமார் (16,022)
வாணியகுடி அஞ்சல்.

சிட்டுக்குருவி அக்கா

சிட்டுக் குருவி அக்காவுக்குக்
கோபம் வந்ததாம்!
கோபத்தோடு கூட்டை விட்டுப்
பறந்து சென்றதாம்!

காடு, மலை, ஆறு பலவும்
கடந்து சென்றதாம்!
மாலை மறைந்து இருள் நிறையும்
நேரம் வந்ததாம்!


பறந்து சென்ற அக்காவுக்குச்
சிறகு வலித்ததாம்!
படுத்து உறங்க இடத்தைத்தேடி
அலைந்து திரிந்ததாம்!



வழியறியாப் பறவையக்கா
கதறி அழுததாம்!
வருத்தத்தோடு தவறை எண்ணி
மனம் இடிந்ததாம்.

வீடு நோக்கித் திரும்பிச் செல்ல
முடிவு செய்ததாம்!
'வீணாய்க் கோபம் கொள்ள மாட்டேன்
இனிமேல்' என்றதாம்!

— பி. காந்திமதி (4,903), சேலம்—1.



எங்கள் முருகன்

அழகின் இலக்கணமாம் எங்கள் முருகா!
ஆறுமுகம் கொண்டவனே, எங்கள் முருகா!
இன்பமயில் வாகனனே, எங்கள் முருகா!
ஈசனுக்கு உபதேசம் செய்த முருகா!
உமையவளின் இளையமைந்தா, எங்கள் முருகா!
ஊர் பலவும் மலையேறி நின்ற முருகா!
எங்கள்குல தெய்வமே நீ, எங்கள் முருகா!
ஏழைகளின் துயர்துடைப்பாய், எங்கள் முருகா!
ஐம்முகத்தோன் இளையவனே, எங்கள் முருகா!
ஒன்று பலவாய் நின்றவனே, எங்கள் முருகா!
ஓடிவந்து எனக்கருள்வாய், எங்கள் முருகா!
ஔடதம் உன் திருப்பெயரே எங்கள் முருகா!
அஃதே எம்மைக் காத்திடுமே எங்கள் முருகா!

— டி. ஆர். கிருஷ்ணகுமார் (18,843),
ஓசூர்.

என் கடமை

அம்மா, நீயும் வாராயோ — தினம்
அன்பு முத்தம் தாராயோ!
ஆராரோ நீ பாடாயோ — தினம்
ஆக்கக் கதைகள் கூறாயோ!




இன்பத் தமிழைத் தந்தாயே — தினம்
இன்சுவை பாலும் அளித்தாயே!
ஈர நெஞ்சைக் கொடுத்தாயே — உனக்கு
ஈடே இல்லை என் தாயே!

உண்மை பேசக் கற்றேனே
உழைத்து வாழக் கற்றேனே
ஊரார் மெச்சிப் புகழ்ந்திட — தினம்
ஊக்கத் துடனே உயர்வேனே!

என்றும் நற்பெயர் பெறுவேனே — தினம்
இனிதாய்க் கடமைகள் முடிப்பேனே!
ஏழை மக்கள் வாழ்வுயர — நான்
இயன்றதை யெல்லாம் செய்வேனே!

— ஏ. பி. ராஜசேகரன் (5,270)
ஆவத்திபாளையம்.



நீங்களும் வாழ்த்துங்களேன்

எனக்கொரு தங்கை இருக்கின்றாள்
என்னுடன் சேர்ந்து படிக்கின்றாள்
மணக்கும் மென்தமிழ் பேசகிறாள்
மகிழ்வுடன் ஆடித் திரிகின்றாள்.

காலையில் என்னை எழுப்புகிறாள்
கடவுளை வணங்கச் சொல்லுகிறாள்
மாலையில் விளக்கு ஏற்றுகிறாள்
மணியாய்ப் பாடம் படிக்கின்றாள்.

காதில் ஜிமிக்கி மினுமினுக்க
கண்ணில் கரு'மை' தீட்டியவள்
காலில் கொலுசு சலசலக்க
கட்டி அணைத்துக் கொஞ்சிடுவாள்.

'மைதிலி' என்பது அவள்பெயராம்
மாமியே பெயரை வைத்தாளாம்
நோய் நொடி இன்றி அவள்வாழ
நீங்களும் இன்று வாழ்த்துங்கள்.

— டி. ஆர். பார்த்தசாரதி (16,151)
சென்னை — 81.

நண்பன் செய்த உதவி



''ரவி, நீ நினைச்சால் எனக்கு ஏதாவது ஒரு வழி பண்ண முடியும். உங்கப்பா பெரிய பணக்காரரர். ஏகப்பட்ட பஸ் ஓடுது. அவர்கிட்ட சொல்லி எனக்கு ஏதாவது ஒரு வேலை வாங்கிக் கொடு.''

''நீ சொல்றது உண்மைதான் மோகன். எங்கப்பா பெரிய பணக்காரர்தான். ஆனா, தங்கிட்ட வேலை செய்யறவங்க எல்லாம் யோக்கியமான ஆளுங்களா இருக்கணும்னு நினைக்கிறார். அதனால் புதுசா யாருக்காவது வேலை கொடுக்கணும்னா நல்லா விசாரிச்சுத்தான் கொடுக்கிறார். யார் சிபார்சையும் அவர் ஏத்துகிறதில்லை. அவர் எந்த முறையிலே விசாரிப்பார்னு யாருக்குமே தெரியாது.''

''இப்படிச் சொன்னா, எப்படி ரவி?''

ரவி ஒரு கணம் யோசித்தான். ''சரி, எனக்கு ஒரு ஐடியா தோணுது. நான் சொல்ற மாதிரி நீ செய். அப்புறம் நானே உன்னை எங்கப்பாகிட்ட சிபார்சு செய்யறேன்.''

''என்ன.... என்ன.... செய்யணும்?''

''அந்த ஓட்டலுக்குப் போய் காப்பி சாப்பிடலாம், வா. அப்படியே என் பிளானையும் சொல்றேன்.''

இருவரும் எதிரே இருந்த அந்தப் பெரிய ஓட்டலுக்குள் நுழைந்தார்கள். ஒரே கூட்டம். அங்கே இங்கே தேடி கடைசியில் எதிரெதிரே இருந்த இரண்டு நாற்காலிகளில் உட்கார்ந்தார்கள்.

வேகமாக அவர்கள் முன்னால் வந்து நின்ற சர்வரிடம், ''இரண்டு காப்பி,'' என்றான் ரவி.

''மோகன், நான் சொல்றதை நல்லாக் கேளு. வேற யாரா இருந்தாலும் நான் இந்த மாதிரி உதவியெல்லாம்

— இரா. வசந்த நாகன் —

செய்ய மாட்டேன். ஆனா, நீ எங்கூட ஒன்பதாவது வரைக்கும் படிச்சவன். வசதி இல்லாததாலே, உன்னாலே படிப்பைத் தொடர முடியலை. அதனாலேதான் உனக்கு என்னாலே முடிஞ்ச உதவியைச் செய்யறதுக்கு விருப்பப்படறேன்.''

சர்வர் இரண்டு காப்பிகளை கொண்டு வந்து மேஜையின் மேல் வைத்தான். இருவரும் அவைகளைக் கைகளில் எடுத்துக் கொண்டார்கள்.

''நான் என்ன செய்யணும்னு சொல்லு. நான் அதே மாதிரி செய்யறேன்,'' என்றான் மோகன்.

''நான் சொல்றதைக் கவனமாக் கேளு. எங்கப்பா தினமும் ஆபிஸுக்கு காரிலேதான் போவார். ஆனா, வாரத்திலே இரண்டு நாள் மட்டும் பஸ்ஸிலே போவார். அந்த பஸ் எங்க பஸ். கண்டக்டர் ஒழுங்கா டிக்கட் கொடுக்கிறானா இல்லையான்னு பாத்துட்டு, அப்படியே அவர் ஆபீஸ் வந்ததும் இறங்கிக்குவாரு.''

''அதுக்கு என்ன இப்போ?'' என்ற மோகனுக்கு ரவி என்ன சொல்ல வருகிறான் என்று தெரியவில்லை.

''எந்தெந்த நாளிலே எங்கப்பா பஸ்ஸிலே போவார்னு நான் உங்கிட்டே முதலிலே சொல்லிடுறேன். நீயும் அதே பஸ்ஸிலே போ. பஸ்ஸிலே பிரயாணம் செய்யறவங்களுக்கு உதவி அது இதுன்னு செஞ்சு எப்படியாவது எங்கப்பாகிட்ட நல்ல பேர் வாங்கிக்க. ஆனா, எங்கப்பாவைத் தெரிஞ்ச மாதிரி காட்டிக்காதே. நீ எங்கப்பாகிட்ட நல்ல பேர் வாங்கின பின்னாலே, நான் ஒரு நாள் என் ஸ்கூலுக்கு காரிலே போகாமே அதே பஸ்ஸிலே வந்து, உன்னை எங்கப்பா கிட்டே அறிமுகப்படுத்தி, சிபாரிசு பண்றேன். அதுக்கு மேலே எங்கப்பா ஒத்துக்குவாருன்னு நினைக்கிறேன். எப்படி என் பிளான்?''

''ரொம்ப ரொம்ப தேங்ஸ் ரவி. உன் மாதிரி பிரண்டை அடைஞ்சதுக்கு நான் உண்மையிலேயே கொடுத்து வெச்சிருக்கணும். நீ சொன்ன மாதிரியே செய்யறேன்.''

''ஆனா மோகன், இன்னொரு விஷயத்தையும் தெரிஞ்சுக்க. எங்கப்பாவை சாதாரணமான ஆளுன்னு நினைக்காதே. ஆபீஸிலே வேலை செய்யறவங்க எல்லாம் ஒழுங்கா வேலை செய்யறாங்களான்னு பாக்கறதுக்கு, சில சமயத்தில் மாறுவேஷத்தில கூட எங்கப்பா ஆபீஸுக்குப் போயிருக்காரு. அதனாலே ஜாக்கிரதையா இரு.''

''கவலையேபடாதே. நீ சொன்ன மாதிரியே செய்யறேன். இம்மி பிசக மாட்டேன்.''

சர்வர் கொண்டு வந்த பில்லை, வாங்கிக் கொண்டான் ரவி.

அப்படி இப்படி என்று ஒரு மாதம் ஓடிவிட்டது.

ரவி சொன்ன மாதிரியே மோகன் செய்து கொண்டிருந்தான். பஸ்ஸில் ஏறும் வயதான பிரயாணி யாராவது நின்று கொண்டிருந்தால், அவரைத் தன் சீட்டில் உட்காரச் சொல்லி விட்டு, தான் நின்று கொள்வான். கர்ச்சீப், புத்தகங்கள் இவற்றைத் தவறி யாராவது கீழே போட்டு விட்டால், உடனே அவைகளை எடுத்து உரியவர்களிடம் கொடுப்பான்.

இம்மாதிரி ஒவ்வொரு உதவியைச் செய்யும் பொழுதும், இவைகளை தர்மலிங்கம் — ரவியின் அப்பா கவனிக்கிறாரா என்பதை ஓரக் கண்ணால் தெரியாமல் பார்ப்பான். அவர் இவைகளைக் கவனிப்பதைப் பார்த்தால், அவனுக்கு மிகுந்த மகிழ்ச்சியாக இருக்கும்.

அன்று வியாழக்கிழமை.

''மோகன், நாளைக்கு நானும் எங்கப்பா கூட பஸ்ஸிலே வரப் போறேன். நீயும் அதே பஸ்ஸிலே ஏறு. அகஸ்மாத்தா சந்திச்சது போலப் பேசு. எங்கப்பாகிட்டே உன்னைப் பத்திச் சொல்லி, சிபாரிசு செய்யறேன்.''

''உன் உதவியை என்றைக்குமே மறக்க மாட்டேன், ரவி.''

மறுநாள்.

பஸ்ஸின் கடைசி சீட்டில் தர்மலிங்கமும் ரவியும் உட்கார்ந்திருந்தார்கள். நான்கைந்து சீட்டுகளுக்கு முன்னால் மோகன் உட்கார்ந்திருந்தான்.

''மோகன்.''

ரவியின் குரலைக்கேட்டுத் திரும்பிப்

பார்த்த மோகன், ரவி உட்கார்ந்திருந்த சீட்டுக்குப் பக்கத்தில் வந்து நின்று கொண்டான். ''ரவியா, சௌக்கியமா?'' என்று இயல்பாகக் கேட்டான். ''இவங்க யாரு?'', என்று தர்மலிங்கத்தைக் காட்டி எதுவுமே தெரியாதவன் போலக் கேட்டான்.

''இது எங்கப்பா.''

''வணக்கம் ஐயா'', என்று பணிவோடு சொன்னான் மோகன்.

''ஓ! இந்தப் பையன் உன் பிரண்டா?'', என்று கேட்ட தர்மலிங்கத்தின் குரலில் ஏகப்பட்ட மகிழ்ச்சி இருந்தது.

''ஆமாப்பா. எங்கூட ஒன்பதாவது வரைக்கும் படிச்சான். அதுக்கு மேலே குடும்பக் கஷ்டத்தாலே படிக்க முடியலை. ரொம்ப நல்லவன். நம்ப கம்பெனிலே ஏதாவது வேலை இருந்தா இவனுக்குப் போட்டு கொடுங்கப்பா. ஒழுங்கா செய்வான்'', என்றான் ரவி.

''வேலையா.... இன்னும் கொஞ்ச நாளிலே நம்ப பிராஞ்ச் ஆபீஸிலே பியூன் வேலைக்கு ஒரு ஆள் தேவைப்படுது. அப்ப நானே சொல்றேன். உன் பிரண்டை அந்த வேலைக்குப் போட்டுக்கலாம்'', என்று சொன்ன தர்மலிங்கத்தின் குரலில் நிறையத் திருப்தி இருந்தது.

''ஹையர் செகண்டரி ஸ்கூல் ஸ்டாப்பிங்'', கண்டக்டர் கத்தினான்.

''எங்க ஸ்கூல் வந்துடிச்சி. நான் வரேன்னு,'' சொன்ன ரவி பஸ்ஸை விட்டு இறங்கினான்.

மோகன், தான் உட்கார்ந்திருந்த பழைய சீட்டில் போய் உட்கார்ந்து கொண்டான்.

பஸ் ஏகப்பட்ட புகையைத் துப்பி விட்டுக் கிளம்பியது.

ஒரு மாதம் ஓடிவிட்டது.

மோகனுக்கு பியூன் வேலை கொடுப்பது பற்றி தர்மலிங்கம் ஒன்றுமே சொல்லாமல் இருப்பது ரவிக்கு ஆச்சர்யத்தைக் கொடுத்தது. இன்றைக்கு எப்படியும் அவரைக் கேட்டு விட வேண்டும்.

''அப்பா.''

''என்ன ரவி? என்ன விஷயம்?,'' கைகளில் இருந்த நியூஸ் பேப்பரை டேபிளின் மேல் வைத்தார் தர்மலிங்கம்.

''என் பிரண்டுக்கு பியூன் வேலை தர்றேன்னு சொன்னீங்களே, அதைப் பத்தித்தான்......''

''அந்த வேலைக்கு வேறே ஆளைப் போட்டுட்டேன். இது தெரிஞ்சா நீ கஷ்டப்படுவியேன்னுதான் இத்தனை நாள் சொல்லலை.''

ரவிக்குத் தலையில் இடி இறங்கியது போல இருந்தது.

''அப்பா, நீங்க செஞ்சது கொஞ்சம் கூட சரியில்லை. மோகனுக்கு ஏன் இந்த வேலையைத் தரலை?'' கோபமாகக் கேட்டான் ரவி.

''ரவி, நான் சொல்றதைக் கேளு. உன் பிரண்டு நாணயமான பையனே இல்லை. முதலில், பஸ்ஸிலே அவன் மத்தவங்களுக்கு செஞ்ச உதவியைப் பாத்து, அவன் ரொம்ப நல்ல பையன்னு நான் தவறா நினைச்சுக்கிட்டேன்.''

''அவன் மோசமான பையன்னு எப்படிக் கண்டுபிடிச்சீங்க?'' ஆச்சர்யமாகக் கேட்டான் ரவி.

''அன்னைக்கு பஸ்ஸிலே உன் பிரண்டைப் பத்தி சொல்லிட்டு உன்

பாலுவைப் பாரேன்

''அம்மா! இந்த பாலுவைப் பாரேன்! என்னோட பலூனையும் தூக்கிண்டு போறான்...''

— சுதர்ஸன்.





ஸ்கூல் வந்ததும் நீ இறங்கிட்டாய். உடனே நான் ஒரு யோசனை பண்ணினேன். இந்தப் பையனுக்கு வேலை கொடுக்கிறதுக்கு முன்னாலே, இவனுக்கு ஒரு டெஸ்ட் வச்சுப் பாக்கலாம்னு வச்சேன். ஆனா, அந்த டெஸ்ட்டிலே அவன் தோத்துப் போய், தான் ஒரு நாணயம் இல்லாத பையன்னு நிரூபிச்சிட்டான். ஆனா, நான் அவனுக்கு என்ன டெஸ்ட் வெச்சேன்னு, அவனுக்கே இது வரைக்கும் தெரியாது.''

``என்ன டெஸ்ட் வெச்சீங்க?'' ஆச்சர்யமாகக் கேட்டான் ரவி.

``நீ பஸ்ஸை விட்டு இறங்கினதும் நம்ப பஸ் கண்டக்டரைக் கூப்பிட்டேன். உன் பிரண்டைக் காட்டி அவன் டிக்கட் வாங்கியாச்சான்னு மெதுவாக் கேட்டேன். ``வாங்கிட்டான். 75 காசு டிக்கெட்டுக்கு 5 ரூபாய் தந்தான். மீதி அப்புறம் தர்ரேன்னு சொல்லியிருக்கிறேன்'' என்றான். ``சரி, அவனுக்கு மீதிப் பணம் கொடுக்கும் போது, இரண்டு ரூபா தெரியாத மாதிரி சேத்துக் கொடுன்னு கண்டக்டர்கிட்டே ரகசியமாச் சொன்னேன். கண்டக்டரும் அதே மாதிரி செஞ்சான். உன் பிரண்டு நாணயமான பையனா இருந்திருந்தா, அந்தப் பணத்தைக் கண்டக்டர்கிட்டே திருப்பிக் கொடுத்திருக்கணும். ஆனா, அவன் கொடுக்கவே இல்லை. இன்னொரு நாளும் இதே மாதிரி அதிகச் சில்லறையை உன் பிரண்டுக்குக் கொடுக்கச் சொன்னேன். அப்பவும் உன் பிரண்டு நாணயமா நடந்துக்கல்லே. அதனாலே தான் வேறே ஒரு நாணயமான பையனை நல்லா சோதிச்சி, அவனை பியூன் வேலைக்குப் போட்டுட்டேன். இப்ப நீயே சொல்லு. நான் செஞ்சது தப்பா?'' என்றார் தர்மலிங்கம்.

ரவிக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை. ஆனால், உண்மையும் நேர்மையும் இல்லாத காரணத்தால் மோகன் ஒரு நல்ல நிரந்தர வேலையை இழந்து விட்டான் என்ற உண்மை மாத்திரம் அவனுக்குத் தெள்ளத் தெளிவாகப் புரிந்தது.

பிருந்தாவனம்



எந்த உடையில் சென்றார்?

பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் சோவியத் நாட்டிற்குச் செல்வது என்று முடிவானதும், உடைப் பிரச்னைதான் முதல் பிரச்னையாக எழுந்தது.

''ரஷ்யாவில் குளிர் மிக அதிகம். எனவே, கோட்டும் பாண்டும் போட்டுக் கொண்டு செல்ல வேண்டும்''

''ஓவர் கோட் இல்லாமல் அங்கு போவதா? அது எப்படி சாத்தியம்?''

''அவர் கம்பளித் துணிகளை நிறைய எடுத்துக் கொள்ள வேண்டும்.''

— இப்படி நண்பர்கள் பலரும் பலவித ஆலோசனைகளைக் கூற ஆரம்பித்தார்கள். ஆனால், காமராஜ் வழக்கமாக அணியும் அதே வேஷ்டி சட்டையுடன்தான் ரஷ்யா சென்றார். நலமாகத் திரும்பி வந்தார்.

ஆதாரம்: 'சோஷலிச நாடுகளில் மக்கள் தலைவர்'

தகவல்: ஏ. டி. காசி, மதுரை.

(உ1301)

உயரமான தபால் நிலையம்

உலகிலேயே மிகவும் உயரமான இடத்தில் அமைந்துள்ள தபால் நிலையம் எங்கிருக்கிறது தெரியுமா? இந்தியாவில்தான். ஆம், ஜம்மு காஷ்மீரில்



14,000 அடி உயரத்திலுள்ள சகூல் என்ற ஊரில்தான் அந்தத் தபால் நிலையம் இருக்கிறது.

— எஸ். மாதவன் (204), திருச்சி 14.



இவையெல்லாம் என்ன? என்ன?

தாவா டாம்பா, தாவா நிப்பா,
தாவா ஷும்பா, தாவா சிப்பா,
தாவா நாபா, தாவா டுப்பா,
தாவா டிங்பா, தாவா கேபா,
தாவா கூபா, தாவா குபா,
தாவா சுக்சிபா, தாவா சுனிப்பா.
இவையெல்லாம் என்ன?

வேறொன்றுமில்லை. திபேத்தியரின் ஒரு வருடத்திய பன்னிரண்டு மாதங்களின் பெயர்களே!

— சு. இளங்குமாரன் (17,707)
நாமக்கல்.



வார முதல் நாள் திங்கள்

சோவியத் காலண்டர்களில் ஒரு புதுமை. ஞாயிற்றுக் கிழமையிலிருந்து வாரத்தைத் தொடங்காமல், திங்கட் கிழமையிலிருந்து தொடங்குகிறார்கள். காரணம் என்ன தெரியுமா? அந்த நாடு உழைப்பிற்கு முதலிடம் கொடுக்கும் நாடு. தொடக்க நாளே விடுமுறை நாளாக இல்லாமல் வேலை நாளாக இருக்க வேண்டும் என்பதற்காகவே இந்த மாற்றம்.

— ச. நைட்டிங்கேல் (2,090),
ஊட்டி.



புத்தகப் பயன்

புத்தகத்தின் பயன்களைப் பற்றிப் பல அறிஞர்கள் கூறியிருக்கிறார்கள். ஆயினும் மார்க் ட்வெயின் கூறும் பலன்கள் வேடிக்கையாக இருக்கின்றன.

"புத்தகங்கள் அறிவை மட்டும் வளர்க்கவில்லை. கனமான புத்தகங்கள் பூனையை அடித்து விரட்டவும், மெல்லிய புத்தகங்கள், கால்கள் சரியில்லாமல் ஆடும் மேஜை நாற்காலிகளைச் சரி செய்யவும், தோல் பைண்ட் செய்த புத்தகங்கள் கத்தியைத் தீட்டவும் பயன்படுகின்றன. உண்மையிலே புத்தகங்கள் சிறந்த துணையாகும்.

— எஸ். அபூபக்கர் சித்தீக்,
(13,026), சென்னை — 108.




கட்டணமின்றி அனுப்பலாம்

ஆரம்ப காலத்தில் தபால்களை அனுப்புகிறவர்கள் ஸ்டாம்புகளை ஒட்டவோ கட்டணம் எதுவும் செலுத்தவோ தேவையில்லையாம். தபால்களைப் பெறுகிறவர்களே கட்டணம் செலுத்திப் பெற்றுக் கொள்வார்கள். இதுவே நீண்ட நாள் வழக்கமாக இருந்தது.

— ஆ. கணேஷ் (9,532)
அட்டகட்டி

"மை"யில் சிறந்தவை

* நம் நாட்டுக்குத் தேவை
— ஒற்றுமை.



* காந்தித் தாத்தா போதித்தது
— உண்மை.
* முயற்சியால் முன்னேறுவது
— திறமை.
* நாம் ஒவ்வொருவரும் ஆற்ற
வேண்டியது — கடமை.
* பிறருக்கு நாம் உதவுவது
— நன்மை.
* மனத்தாலும்நினைக்கக்கூடாதது
— தீமை.

— ஆ. நடராஜன் (22,726),
அயோத்தியாப்பட்டணம்.



பெயர் தெரியுமா?

1. சூரியன் பூமியைச் சுற்றுகிறது எனக் கூறியதற்காக, சிறையில் வைக்கப்பட்ட அறிவியல் மேதை யார்?
2. 'மனம் ஒரு நல்ல வேலைக்காரன்: ஆனால், மோசமான எஜமானன்' என்று கூறிய சிந்தனைச் சிற்பி யார்?
3. 'ஆடாக இருந்து நூறு ஆண்டுகள் வாழ்வதைக் காட்டிலும், புலியாக இருந்து ஒரே ஒரு நாள் உயிர் வாழ்வேன்' எனக் கூறியவர் யார்?

விடை: 1. கலீலியோ, 2. சாக்ரடீஸ், 3. திப்பு சுல்தான்.

— நா. அண்ணாமலை (19,200),
உத்தமபாளையம்.



சந்திரனது உற்பத்தி

பாற்கடலைத் தேவர்களும் அசுரர்களும் கடைந்த போது, அதிலிருந்து சந்திரன் பிறந்ததாக நமது புராணம் கூறுகிறது. வான சாஸ்திரத்திலும், பூதத்துவ சாஸ்திரத்திலும் ஆராய்ச்சி மிக்க இக்கால விஞ்ஞானப் புலவர்கள், சந்திரன் பூமியின் ஒரு பாகமாகவே ஒரு காலத்தில் இருந்ததென்றும், பூமி வேகமாகச் சுழலும் போது அதிலிருந்து தெறித்து வேறாகப் பிரிந்ததென்றும் கூறுகிறார்கள். இவ்வாறு பிரிவதற்கு முன்பு சந்திரன் பூமியிலே படிந்து கிடந்த இடந்தான் இப்போது பசிபிக் மகா சமுத்திரமாக இருக்கிறது என்றும் சிலர் சொல்லுகிறார்கள்.

ஆதாரம்: பெ. நா. அப்புஸ்வாமியின் அற்புத உலகம்.
தகவல்: எம். கவிதா (19,351),
காரைக்குடி.




எரிப்பதும் இல்லைத் புதைப்பதும் இல்லை.

'பார்சி இன மக்கள் இறந்தவர்

களின் சடலங்களை எரிக்கவோ, புதைக்கவோ மாட்டார்கள். 'மௌன கோபுரம்' எனப்படும் உயரமான கோபுரத்தின் மீது வைத்து பறவைகள் தின்ன விட்டு விடுகிறார்கள். அவர்கள் தங்களின் சார தூஷ்டிர மதத்தைப் பின்பற்றி இன்றும் அப்படியே செய்கிறார்கள்.

— சிவ. அய்யப்பன் (12,088)
இராஜாக்கமங்கலம்.



எத்தனை மீட்டர்?

இரண்டு தந்திக் கம்பங்களுக்கு இடையே உள்ள தூரம் 100 மீட்டர். பதினோரு தந்திக் கம்பங்களுக்கு இடையே உள்ள தூரம் எத்தனை மீட்டர்?

விடை: 1000 மீட்டர்.

— கு. சபீர் அகமது (18,953),
சோழபுரம்.



சாயிபாபாவின் விளக்கம்


பகவான் சத்திய சாயிபாபா அவர்கள் WATCH என்ற சொல்லிற்கு அளித்த விளக்கம்.

W — Watch your Words.
A — Watch your Actions.
T — Watch your Thoughts.
C — Watch your Character.
H — Watch your Heart.

— ஜி. ஆர். நாராயணன்,
திருவண்ணாமலை.

கண்டு பிடியுங்கள்

1. ஒரு மனிதனால் எத்தனை வாரங்கள் உணவில்லாமல் உயிர் வாழ முடியும்?
2. மனிதனுக்கு அடுத்தபடி மூளையுள்ள பிராணி எது?



3. முன்னோக்கியும் பின்னோக்கியும் பறக்கக் கூடிய பறவையின் பெயர்....?
4. வெடி மருந்தை முதல் முதலாகப் பயன்படுத்திய நாடு எது?

விடை: 1. 6 வாரங்கள், 2. சிம்பான்ஸி, 3. 'ஹம்மிங்' பறவை, 4. சீனா.

— நா. அண்ணாமலை (19,200),
உத்தமபாளையம்.



கடவுளுக்குக் கடிதம்!



வீட்டிற்குக் கவலையுடன் வந்தார் ராமநாதன். அவர் மனைவி கமலா 'இன்னிக்கும் வேலை கிடைக்கலயா?' என்று கேட்டாள்.

'ஆமா, கமலா. நான் என்ன குற்றம் செய்தேன்? அன்னிக்கி மேனேஜர் லஞ்சம் வாங்கினார்னு தெரிஞ்சதும், இது தப்புன்னு எடுத்துச் சொன்னேன். உடனே, அவர் என் பேரிலே இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி வேலையை விட்டே நீக்கிட்டாரு. அதனாலென்ன? நேர்மையும் நாணயமும் இருக்கிற வரை கவலையே இல்லை. இன்னிக்கி இல்லாத போனால், இந்த வாரமோ இந்த மாதமோ வேலை கிடைக்காமலா போகும்?'' என்றார் ராமநாதன்.

''முருகனைத்தான் நம்பியிருக்கோம். அவரு நம்மைக் கைவிட மாட்டாரு'' என்றாள் அவரது மனைவி கமலா.

இவர்கள் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த இரண்டாம் வகுப்பு படிக்கும் ஏழு வயதுச் சிறுவன் ராமு, ''ஏனம்மா, நம்ப கஷ்டங்களெல்லாம் முருகக் கடவுளுக்குத் தெரிஞ்சால் போக்கிடுவாரில்லையா?'' என்று கேட்டான்.

அம்மா அவனை அணைத்துக் கொண்டு 'ராமு, நிச்சயம் போக்கிடுவாரப்பா'' என்று கூறினாள்.

வெளியே வந்த ராமு சிறிது நேரம் யோசித்து விட்டு, தான் சேர்த்து வைத்த காசிலிருந்து ஐம்பது பைசா எடுத்து வீட்டின் அருகிலுள்ள ஸ்டோரில் ஒரு இன்லேண்டு லெட்டர் வாங்கினான். அதில் தன் குடும்பக் கஷ்டங்களையெல்லாம் தட்டுத் தடுமாறிக் குண்டு குண்டாக எழுதினான். முகவரி என்ன எழுதுவது? யோசித்தான். பிறகு, 'முருகக் கடவுள், S/o பரமசிவன், மேலோகம்' என்று எழுதினான். கடிதத்தை அஞ்சல் பெட்டியில் போடுவதற்காக அஞ்சலகத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தான்.

அப்போது செல்வந்தரான பெரியவர் ஒருவர் அவ் வழியே சென்று கொண்டிருந்தார். அப்போது ஒருவன் அவரிடம் மிக அருகில் சென்று, ''போஸ்ட் ஆபீஸ் எங்கே இருக்கிறது'' எனக் கேட்பது போலக் கேட்டு, அவருடைய கோட்டுப் பாக்கெட்டிலுள்ள பர்ஸை எடுத்தான். அதைப் பார்த்து விட்ட ராமு, 'திருடன், திருடன்' எனக் கூச்சலிட்டான். அக் கூச்சலைக் கேட்ட அக்கம் பக்கத்தினர் திருடனைப் பிடித்து பர்ஸை மீட்டனர்.

பெரியவர், 'தம்பி! நல்ல நேரத்தில் என் பணத்தைக் காப்பாற்றினாய். மிக்க நன்றி. உனக்கு ஏதேனும் உதவி வேண்டுமானால் கேள். நிச்சயம் செய்கிறேன்'' என்றார்.

''ஐயா, ஒரே ஒரு சின்ன உதவி செய்ய வேண்டும். நான் பள்ளி செல்ல வேண்டும். நேரமாகி விட்டது. ஆதலால், இந்தக் கடிதத்தை தபால் பெட்டியில் போட வேண்டும் செய்வீர்களா?'' எனக் கேட்டான்.

கதையரங்கம்

பெரியவர் மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொண்டு கடிதத்தை வாங்கினார். அஞ்சலகத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்தார்.

பொழுது சாய்ந்த நேரத்தில் ராமு பள்ளியிலிருந்து வீட்டிற்கு வந்து சேர்ந்தான். அப்போது அவன் அம்மா, ''ராமு, உன் அப்பாவிற்கு வேலை கிடைத்து விட்டது! முருகன் அருளாலே நம் கஷ்டங்கள் எல்லாம் தீர்ந்தது'' என்றாள்.

முருகனுக்கு நான் எழுதின கடிதம் கிடைச்சவுடனே உதவிட்டாரே!'' என்றான் ராமு. அதைக் கேட்ட அவன் அம்மாவும் அப்பாவும் அவர்களுடன் இருந்த இன்னொருவரும் சிரித்தார்கள். அந்த இன்னொருவரைப் பார்த்த ராமு திகைத்தான். அவர் வேறு யாருமில்லை. காலையில் பார்த்த அந்தப் பெரியவரே தான்!

அப்போதுதான் அப் பெரியவர் சொன்னார்: 'தம்பி, நான் அஞ்சலகத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த போது முகவரியைப் பார்த்தேன் முருகக்கடவுள், S/o பரமசிவன், மேலோகம்' என எழுதியிருந்ததைக் கண்டேன். இந்தக் கடிதம் நிச்சயம் போய்ச் சேராது என்று தெரிந்து கொண்ட நான், அக் கடிதத்தைப் பிரித்துப் பார்த்தேன். உங்கள் குடும்பத்தின் கஷ்டங்களையெல்லாம் அதில் நீ எழுதியிருந்தாய். அப்புறம் தான் நான் உன் வீட்டைத் தேடிக் கண்டுபிடித்து இங்கு வந்தேன்' என்றார்.

''ஆமாம் ராமு, உன் கடிதத்தைப் படித்து விட்டு, உன் அப்பாவுக்கு ஒரு நல்ல வேலையை இவர் கம்பெனியில் தருவதாகக் கூறி, இதோ வேலைக்கான உத்தரவையும் தந்திருக்கிறார்'' என்றாள் அவன் அம்மா.

அப்போது ராமு அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.



ஒரு வாய்க்காலின் கரையில் ஒரு கரும்புத் தோட்டம் இருந்தது. அந்தக் கரும்புத் தோட்டத்திற்கு அருகில் ஒரு வயதான வேப்பமரம் இருந்தது. அந்த வேப்பமரத்திற்கு அருகில் இருக்கும் ஒரு இளம் கரும்பிற்குத் தற்பெருமை அதிகம்.

அது ஒருநாள் வேப்பமரத்திடம், ''எங்கள் இனத்தைத்தான் மனிதர்கள் விரும்புகிறார்கள். நாங்கள்தான் மனிதனுக்குப் பல வகையில் பயன்படுகிறோம். உன்னால் மனிதனுக்கு ஒரு நன்மை கூடக் கிடையாது. நான் எவ்வளவு இனிமையாக இருக்கிறேன். நீயும் உன் கசப்பும்! உம், நினைத்தாலே குமட்டுகிறது. உன்னை எந்த மனிதனும் விரும்ப மாட்டான். அதோ ஒரு சிறுவன் வருகிறான் பார். அவன்கூட எங்கள் இனத்தைத்தான் ஒடித்துக் கடித்து ருசித்துத் தின்னுவான். நீ பகல் கனவு காணாதே! உன்னை எவனும் கடித்துக் கூடப் பார்க்க மாட்டான். அவ்வளவு ஏன்?

தப்பித் தவறிக் கூட வாயில் வைக்க மாட்டான்!'' என்று சொல்லிவிட்டு கேலிச் சிரிப்பு சிரித்தது.

''தற்பெருமை அடித்துக் கொள்கிற கரும்பிடம் நமக்கென்ன பேச்சு?'' என்று நினைத்தபடி பேசாமலிருந்தது வேப்பமரம்.


அந்தச் சிறுவன் வேப்பமரத்திற்கு அருகில் வந்தவுடன் சற்றுத் தயங்கி நின்றான். அவனுக்கு வேப்பமரத்தைப் பார்த்ததும், தன்னுடைய பற்களின் ஞாபகம் வந்தது.

''உம். பல்லெல்லாம் சொத்தை விழுந்து விட்டது. அளவுக்கு அதிகமாக இனிப்பைத் தின்று தின்றுதான் இப்படி ஆகி விட்டது. இனி தினந்தோறும் வேப்பங்குச்சியைக் கொண்டுதான் பல் துலக்க வேண்டும்!'' என்று கூறியபடி ஒரு வேப்பங்குச்சியை ஒடித்துப் பல் துலக்கியபடி சென்றான்.

இதைக் கேட்டதும் கரும்புக்குத் தூக்கி வாரிப் போட்டது. அதன் முகமே மாறி விட்டது. மனமும் திருந்தி விட்டது. தனது அகந்தையை விட்டொழித்தது.

''அன்பு மிக்க வேப்பமரமே! உன் பொறுமையையும் நல்ல குணத்தையும் பாராட்டுகிறேன். ஒவ்வொருவரிடமும் ஒரு திறன், ஓர் ஆற்றல் இருக்கிறது! நீயும் மனிதனுக்குப் பயன்படுகிற விதத்தை அறிந்து கொண்டேன். இனி நமக்குள் எந்த ஏற்றத் தாழ்வுமில்லை!'' என்று கரும்பு வேப்பமரத்திடம் கூறியது. வேப்பமரமோ, மௌனமாகப் புன்னகை பூத்தது!

அம்மாவின் ஆசை



''அம்மா இன்னையிலிருந்து சரியாக இரண்டு மாதம் கோடை விடுமுறை'' என்றான் கண்ணன்.

''கண்ணா, தேர்வுகளை எப்படி எழுதியிருக்கிறாய்?'' என்று கேட்டாள் அவனுடைய தாய் பார்வதியம்மையார்.

''நல்ல முறையில் எழுதியிருக்கிறேனம்மா'' என்று மறுமொழி பகர்ந்தான். இருவரும் பேசியபடியே அந்தக் குடிசைக்குள் நுழைந்தார்கள்.

பாவம்! அவர்கள் அந்தக் குடிசையை விடப் பெரிய வீட்டில் வாழ்ந்திருக்கலாம். கண்ணனுக்கு ஒரு வயது ஆகும் போது அவனுடைய அப்பாவுக்கு எல்லோருக்கும் வரும் காய்ச்சலாகத்தான் வந்தது. அதுவே அவருக்கு எமனாகி விட்டது. பார்வதியம்மையாரும் தன் கணவன் போன இடத்திற்கு அன்றே போயிருப்பாள். ஆனால், அவளை நம்பி ஒரு உயிர் இருக்கிறதே! அதற்காகத்தான் இன்னும் உயிரோடு வாழ்ந்து வருகிறாள். வயிறு இருக்கிறதே? அதற்காகப் பார்வதியம்மையார் பக்கத்து வீடுகளில் பாத்திரம் தேய்த்து அதில் கிடைக்கும் வருவாயில் குடும்பம் நடத்தி வருகிறாள். பார்வதியம்மையாருக்குச் சொத்து சுகமெல்லாம் கண்ணன்தான். அதனால்தான் கண்ணன் மேல் உயிரையே வைத்திருந்தாள் பார்வதியம்மையார்.

''அம்மா, நான் இந்த விடுமுறையில் சும்மா இருக்க போவதில்லை. வேலைக்குப் போகப் போகிறேன்''

''என் கண்மணி, நான் இருக்கும் வரைக்கும் நீ எதுக்குடா வேலைக்குப் போகணும்?''

''அம்மா! உனக்கு ஒரு மாற்றுச் சேலை கூடக் கிடையாது. இருக்கிறது ஒரு சேலை. அதிலும் ஆயிரம் தையல். நான் வேலைச் செய்து சம்பாதித்து, அந்தப் பணத்திலே உனக்கு ஒரு சேலை வாங்கித் தரணும். அதுதானம்மா என் ஆசை'' என்றான்.

அப்போது வாசலில் சைக்கிள் மணிச் சத்தம் கேட்கவே வெளியே வந்தான் கண்ணன். அங்கு ஓர் இனிய அதிர்ச்சி காத்திருந்தது. அவனுடைய தலைமையாசிரியர் நின்று கொண்டிருந்தார். "வணக்கம் சார், உள்ளே வாங்க" என்று அன்போடு அழைத்தான் கண்ணன்.

"கண்ணா!, போன வருடம் நீ ஒரு தேர்வு எழுதினாயே, நினைவிருக்கிறதா?" என்று கேட்டார் தலைமையாசிரியர்.

"நன்றாக நினைவுயிருக்கிறது ஐயா"

"அந்தத் தேர்வில் நீ முதலாவதாகத் தேர்ச்சி பெற்று விட்டாய். இனி மேல் நீ எது வரையில் படிச்சாலும், அரசாங்கமே செலவழிக்கும். அதோடு இந்த வருஷப் படிப்புச் செலவுக்கு 500 ரூபாயை அரசு அனுப்பியுள்ளது. அதைக் கொடுத்து விட்டுப் போகலாமென வந்தேன்" என்றார்.

எல்லாம் உங்கள் அறிவுரையைக் கேட்டு நடந்ததால்தான் சார்" என்று கூற, அவர் காலடியில் விழுந்து வணங்கினான் கண்ணன்.

"கண்ணா! நீ சற்று முன்பு உன் அம்மாகிட்டே பேசினதெல்லாமே கேட்டுக்கிட்டுத்தான் நின்றேன். உன்னை மகனாகப் பெற்ற உன் தாயார் ரொம்பக் கொடுத்து வைச்சவங்க கண்ணா. முதலிலே உங்கம்மாவுக்கு இந்தப் பணத்திலே ஒரு நல்ல சேலை வாங்கிக் கொடு"

"அப்படியே செய்கிறேன் சார். உள்ளே வந்து ஒரு டம்ளர் மோர் சாப்பிட்டு விட்டுப் போங்க சார். அப்பத்தான் என் அம்மாவுக்கும் எனக்கும் திருப்தியாயிருக்கும்"

"சரி, கண்ணா!" என்று கூற உள்ளே வந்து மோரை அருந்திய பின், "இன்னொரு நாள் சாவதானமாக வாரேன். இன்னிக்கு ஒரு அவசர வேலையா வெளியூர் போகிறேன்" என்றார்.

"போயிட்டு வாங்க சார்" என்று விடை கொடுத்தார்கள் கண்ணனும் அவன் அம்மாவும்.

"கண்ணா! உன் ஆசையை நிறைவேற்றி விட்டாய். ஆனால், இந்த ஏழைத் தாயோட ஆசையை நிறைவேற்றி வைப்பாயா?" என்று கேட்டாள் பார்வதியம்மையார்.

"நிச்சயமாக நிறைவேற்றி வைப்பேனம்மா. தாய் தந்தையரின் ஆசையை நிறைவேற்றுவதுதான் ஒரு நல்ல தனையனுக்கு அழகு. அம்மா! தயங்காமல் உங்கள் ஆசையைச் சொல்லுங்க. நிறைவேற்றி வைக்கிறேனம்மா" என்று கூறினான் கண்ணன்.

"நீ நல்லாப் படிச்சுப் பேரோடும் புகழோடும் விளங்கணும். அதுதாணப்பா இந்த ஏழைத் தாயோட ஆசை. நிறைவேற்றி வைப்பாயா? கண்ணா?"


"அம்மா, நான் நல்லாப் படிப்பேன். ஆண்டவன் அருளாலும் உங்க ஆசியாலும் பேரும் புகழும் பெறுவேன்" என்று கூறினான் கண்ணன். அப்போது கோவில் மணியோசை காற்றில் மிதந்து வந்து கொண்டிருந்தது.

அடுத்த தொடர்கதை


● அதன் பெயரென்ன?


● யார் எழுதுகிறார்?

அடுத்த இதழில் அறிவிப்பு வரும்



கூடம்
முதியோர் கல்விக் கூடம்
மாலா






மேலே உள்ள இரு படங்களும் எந்த எந்தப் பழமொழிகளை உங்கள் நினைவுக்குக் கொண்டு வருகின்றன?

விடை **61** ஆம் பக்கம்.

புதுப் பேனா

த.கி. இராமசாமி



காலை நேரம். படுக்கையில் எழுந்து உட்கார்ந்திருந்த சுந்தரின் கண்கள் சுவரில் மாட்டப்பட்டிருந்த அப்பாவின் வெள்ளைச் சட்டையை நோக்கிச் சென்றன.

மின் விசிறியின் வேகத்தில், சுவரில் மாட்டப்பட்டிருந்த அப்பாவின் சட்டை இங்கும் மங்கும் அசையவே — அந்தச் சட்டைப் பையிலிருந்த அப்பாவின் புதுப் பேனா — பளிச்சென்று காட்டிக் காட்டி மறைந்தது.

நேற்றைக்குக் காலையில்தான் சுந்தர், அந்தப் பேனாவைப் பார்த்தான். பார்த்தவுடனே அவனுக்கு அதன் மேல் ஆசை ஏற்பட்டது.

''அப்பா. அப்பா நான் பார்த்துட்டு தரேனே. ஆசையா இருக்கே'' என்று அதைப் பிடுங்கப் போனான்.

அப்பாவோ, அந்தப் பேனாவை இறுக்கிப் பிடித்துக் கொண்டு, ''போடா.. ராஸ்கல். கொடுத்த பேனா ஒன்னைக் கூட ஒழுங்கா வைச்சுக்கத் தெரியல்லே. எல்லாத்தையும் போய்த் தொலைச்சுட்டு வர்ரே. இல்லேன்னா உடைச்சுட்டு வர்ரே. உனக்குப் பேனாவும் கிடையாது. ஒரு மண்ணும் கிடையாது'' என்று எரிந்து விழுந்தார்.

சுந்தருக்கு இதைக் கேட்டு முகம் சுருங்கிப் போச்சு.

அந்தச் சமயத்தில் பக்கத்து வீட்டிற்குப் போயிருந்த மைதிலி சிலேட்டையும் குச்சியையும் தூக்கிக் கொண்டு ஓடி வந்தாள்.

''அப்பா. அப்பா எப்படி எழுதியிருக்கேன் பாரேன். சிலேட்டைக் காண்பித்து நின்றாள். அதே சமயம், அப்பாவின் கையிலிருந்து புதுப் பேனாவை' மைதிலியின்' கண்கள் பார்த்து விட்டன.

அவ்வளவுதான்..

''அப்பா.. அப்பா, எனக்கப்பா'' என்று சொன்னவள், விருட்டென்று அவர் கையிலிருந்து அந்தப் பேனாவைப் பிடுங்கிக் கொண்டாள்.

இதற்காக சுந்தரின் தந்தை — மைதிலியின் மீது கோபித்துக் கொள்ளவும் இல்லை. எரிந்து விழவும் இல்லை.

சுந்தர் கண்கொட்டாமல் இந்த

நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டே இருந்தான்.

கண்ணை உறுத்திய அந்தப் பேனாவைப் பற்றி நினைத்ததும், சுந்தருக்கு நேற்று நடந்த இந்தச் சம்பவம் நிழலாகத் தோன்றியது.

கைக்கெட்டும் தூரத்தில் இருந்த மைதிலியின் பள்ளிக் கூடப் பையை, மெள்ள எடுத்தான்.

உள்ளே இருந்த காட்பரிஸ் சாக்லெட் டப்பாவிற்குள், அந்தப் புதுப் பேனா பளபளத்தது.

சுவரில் இருந்த அப்பாவின் 'சட்டைப் பையைப் பார்த்தான். அதுவும் அதே மாதிரி புதுப் பேனா.

அப்படியென்றால்நாலாங்கிளாஸ் படிக்கிற தனக்குப் புதுப் பேனா கிடையாது. எல்.கே.ஜி. படிக்கிற மைதிலிக்கு மட்டும் புதுப் பேனாவா?

சுந்தருக்கு அழுகையே வந்து விட்டது. 'இனிமேல் நம் அப்பாவிடம் எதுவுமே கேட்கக் கூடாது. நண்பர்களிடம் வேணும்னா கேட்கலாமே தவிர — வீட்டிலே கேட்கக் கூடாது' — என்று ஒரு வைராக்கியம் சுந்தரின் மனத்தில் பிறந்தது.

அதே போல் அன்று பள்ளிக்குச் செல்லும்பொழுது—வேண்டுமென்றே 'பேனா' டப்பாவை வீட்டில் வைத்து விட்டுச் சென்றான். ஆனால், அவனது தாயோ, தந்தையோ யாரும் இதைச் சரியாகக் கவனிக்கவே இல்லை.

"ஏன் பேனா இல்லாமல் ஸ்கூலுக்கு வந்தே?" என்று மிரட்டிய ஆசிரியைக்குப் பதில் சொல்ல முடியாமல் தலை குனிந்து நின்றான் சுந்தர்.

"கையை நீட்டு"

நீட்டினான்.

'பளிச் பளிச்' என்று நாலு அடி பலமாக விழுந்தது. சுந்தர் இதற்காக அழவில்லை; பதறவில்லை.

அவன் கண்முன் —

கொஞ்ச நேரத்திற்கு முன்பு தன் நண்பர்கள் எல்லோரும் சேர்ந்து பேனாவை இரவல் தராதது மட்டுமல்ல, "உழைச்சு சம்பாதிக்கணும். உங்கப்பா உனக்குப் பேனா தரலேன்னா, அதுக்கு ஏன் எங்கிட்ட வந்து கேட்கறே? நீயே சம்பாதித்து வாங்கு" — என்று மோகனும் மூர்த்தியும் பேசி அவமானப்படுத்தி விட்டது தான் நினைவுக்கு வந்தது.

'சே... நண்பர்களும் இப்படியா? இவர்களுக்காக நான் எத்தனை தடவை, வீட்டிலிருந்து முறுக்கு, வடை எல்லாம் எடுத்து வந்து கொடுத்திருப்பேன். கிரிக்கெட் பேட்டை எடுத்துண்டு போய் உடைச்சானே மோகன் அப்போது கூட நான் வாயைத் திறக்கவே இல்ல.... என் மூணு கால் சைக்கிளை எடுத்து, இந்த மூர்த்தி எத்தனை தடவை ரவுண்ட் அடிச்சிருப்பான். மைதிலிக்குக் கூடக் கொடுக்காமே, அவ கிட்டேயிருந்து சைக்கிளைப் பிடுங்கி இவங்கிட்ட எத்தனை தடவை கொடுத்திருப்பேன். ஒரே ஒரு நாளைக்கு— அதுவும் ஒரு வீம்புக்காக 'பேனா கொடுடா'ன்னு கேட்டதுக்கு எல்லோரும் எப்படி ஏமாத்திட்டாங்க!' சுந்தரின் மனசு கொதித்தது!

கண்ணைத் திறந்து பார்த்த போது — சுவரில் மாட்டியிருந்த பிள்ளையார், தும்பிக்கையை தூக்கி ஆசீர்வாதம் செய்வது போலிருந்தது.

"பிள்ளையாரப்பா — என்னை நீதான் காப்பாத்தணும். எல்லோரும் என்னைத் திட்டறாங்க. யாரும் உதவி செய்ய மாட்டேங்கிறாங்க. நான் அவ்



வளவு கெட்டவனா...? நீ சொல்லேன். மைதிலிக்கு மட்டும் புதுப் பேனாவை அப்பா கொடுத்தாரே. எனக்கு ஏன் தரமாட்டேனுட்டார்.. எனக்கும் அதே மாதிரி பேனா வேணும் பிள்ளையாரப்பா'' என்று சொல்லிச் சொல்லிப் புலம்பினான்.

சுந்தரின் இந்த மனநிலையை வேறு யாரும் அவ்வளவு சூசகமாக அறியவில்லை.

ஜன்னல் லேசாக திறந்திருந்ததால் காலை இளங்காற்று 'ஜில்லென்று' முகத்தில் அடித்தது.

படுக்கையிலிருந்து ஜன்னல் வழியே பார்த்த சுந்தருக்கு – ஒரு காட்சி தென்பட்டது.

சுந்தரைப் போலவே வயசிருக்கும். ஒரு சிறு பையன், கிழிசல் சட்டையும், அரைக்கால் டிரௌசருமாகப் போட்டுக் கொண்டு, பின்புற முதுகில் ஒரு பெரிய கோணிப்பையை மாட்டிக் கொண்டு, குப்பைத் தொட்டியிலிருந்த வெறும் பேப்பர்களைப் பார்த்து பார்த்து பொறுக்கிக் கொண்டிருந்தான்.

அந்தப் பையனை இதற்கு முன்பு பல தடவை சுந்தர் பார்த்திருக்கிறான். ஆனால் அப்போதெல்லாம் அவனைப் பற்றி அவ்வளவு நுணுக்கமாகச் சிந்தித்தது கிடையாது.

இவன் ஏன் குப்பையைப் பொறுக்கணும்? இவனுக்கு அப்பா, அம்மா இல்லையா...? இல்லே இருந்தும், எங்கப்பா மாதிரி பேனா வாங்கித் தர மாட்டேனுட்டாரா... பேனாவுக்குக்காகத்தான் – அவனே இப்படி சம்பாதிக்க அலையறானா?

சுந்தரின் மனத்தில் இந்த மாதிரி சந்தேகம் கிளம்ப – மெதுவாக, பின்புறக் கதவை திறந்து அம்மாவுக்குத் தெரியாமல் அந்தப் பையனருகே சென்றான்.

''ஏ... பையா.''

குனிந்து கொண்டு குப்பையைப் பொறுக்கிக் கொண்டிருந்த அந்தப் பையன் நிமிர்ந்து பார்த்தான்.


''ஏன் இப்படி குப்பையைக் கிளறரே...?''

''இதைக் கொண்டு போய்க் கொடுத்தா காசு தருவாங்க''

''எவ்வளவு தருவாங்க?''

''சில சமயம் அஞ்சு. சில சமயம் மூணு ரூபா..''

''அந்தக் காசை வைச்சு என்ன





செய்வே? பேனா வாங்குவியா?''

''பேனாவா...?''

''ஆமாம். உங்கப்பா உனக்கு பேனா தரமாட்டேனுட்டாரா..? உன் தங்கச்சிக்கு மட்டும் பேனா கொடுத்துட்டாரா, அதான் ஸ்கூலுக்குப் போக மாட்டேனுன்னு வந்துட்டியா...?''

சுந்தரின் இந்தச் சந்தேகத்திற்கு அந்தப் பையனால் பதில் சொல்ல முடியவில்லை.. திகைத்துப் போய்ச் சுந்தரையே பார்த்து நின்றான்.

''இதோ பார். உன் பெயர் என்ன?''

''முத்துன்னு பெயரு. வீட்டிலே சின்னக்கண்ணுன்னு கூப்பிடுவாங்க...''

''இதோ பாரு முத்து. எங்கப்பா என்னை எப்போதும் திட்டறார். எது வாங்கினாலும் மைதிலிக்குத்தான் கொடுக்கிறார். வாங்கிக் கொடுத்த பேனாவை நான் உடைச்சிடுறேனாம். நானும் உன் கூட வந்தா, எனக்கும் பேப்பர் பொறுக்கித் தருவியா? அதை வைச்சு காசு வாங்கி ஒரு புதுப் பேனா வாங்கணும். நானே சம்பாசிச்சு வாங்கணும். என்ன... உங் கூட வரட்டுமா...?''

முத்துவுக்கு ஒன்றும் புரியவில்லை.

''நாங்க ஏழைங்க.. எனக்கு அப்பா கிடையாது. அம்மாவுக்கு உடம்பு சரியில்லை. அதனால்தான் நான் படிக்கல்லே. நீ ஏன் என் கூட குப்பை பொறுக்க வரணும்? வராதே. எங் கூட வந்தா உங்க அப்பா, அம்மா எல்லோரும் என்னைத்தான் போட்டு அடிப்பாங்க...''

''பரவாயில்லை முத்து. யாருக்கும் தெரியாமே நான் வந்துடறேன்'' சுந்தர் துடியாய்த் துடித்தான்.

''அய்யய்யோ... என்னை விட்டுடு.. நான் உன்னைக் கூட்டிக்கினு போக மாட்டேன்!'' முத்து பளிச்சென்று சொல்லிவிட்டு மேலே நகர்ந்தான்.

பின்புறக் கதவு இடுக்கு வழியே அவர்கள் பேசுவதைக் கேட்டு, சுந்தரின் தந்தை திகைத்துப் போனார்.

'சுந்தரின் மனத்தில் இப்படியொரு எண்ணமா? இது நாளுக்கு நாள் வளர்ந்தால் அவனது எதிர்காலம்

என்னவாகும்?' என்று நினைத்து பயந்து போனார். தான் மைதிலியிடம் அன்பு காட்டுவதும் அவளுக்கு வேணுங்கிறதை வாங்கித் தருவதும், அவளைப் போலவே, சுந்தரும் படிக்க வேண்டும் என்பதற்காகத்தானே!

'நாமொன்று நினைக்க — சுந்தர் வேறு விதமாக நினைத்து விட்டானே!' என்று குழம்பிப் போனார். அவரது மனம் எங்கெங்கோ அலைபாய்ந்தது.

''சுந்தர் இங்கே வா! நீ போய்ப் பல்லைத் தேய்த்து விட்டு வா. உனக்கொரு பரிசு கொண்டு வந்திருக்கேன்.''

''அப்படியா...!''

''ஆமாம். போய் சீக்கிரம் பல்லைத் தேய்த்து விட்டு வாயேன்' — என்று தட்டிக் கொடுத்து அனுப்பிய தந்தையைப் பற்றிப் புளகாங்கிதம் அடைந்தான் சுந்தர்.

இரண்டு நிமிஷத்தில் ஓடி வந்தான் சுந்தர்.

'காப்பி சாப்பிடு' — என்று தானே அவனுக்குக் காப்பியை ஆற்றிக் கொடுத்தார்.

'மடக் மடக்' என்று ஒரு செகண்டில் குடித்தான்.

''இதோ பார்த்தாயா'' என்று தன் சட்டைப் பையிலிருந்து ஒரு மை எழுதற பேனாவையும் பால் பாயிண்ட் பேனாவையும் எடுத்து — சுந்தரிடம் காட்டினார்.

சுந்தரின் விழிகள் ஆச்சரியத்தால் அகல விரிந்தன.

''இந்த இரண்டும் உனக்குத்தான். வைச்சுக்கோ. தொலைக்காம பார்த்துக்கோ. அப்படியே தொலைச்சாக் கூடப் பரவாயில்ல. நான் இன்னும் நிறைய பேனா விதம் விதமா வாங்கித் தரேன்.''


சுந்தரின் பிஞ்சு மனம் சந்தோஷத்தால் ஆகாயம் போல் விரிந்தது.

''கீழே விழுந்து உடைஞ்சு போனா?'' சந்தேகத்தோடு அப்பாவிடம் கேட்டான்.

''பரவாயில்லை. அப்போ கூட உன்னைத் திட்ட மாட்டேன். வேறு ஒண்ணு புதுசா வாங்கித் தரேன்.'' என்றார் சுந்தரின் தந்தை.

''நேற்று ராத்திரியே உங்கிட்டே கொடுக்கணும்னு நெனைச்சேன். அதுக்குள்ளே நீ தூங்கிப் போயிட்டே' என்று மேலும் சொன்னார்.

'அப்பா இவ்வளவு நல்லவரா — நமக்கே ரெண்டு பேனா வாங்கிண்டு வந்திருக்காரே — இவரைப் போய் நாம் தப்பா நெனைச்சோமே! மோகன் கிட்டே கேட்டு ஏமாந்தோமே — மிஸ் கிட்ட அடி வாங்கினோமே — குப்பை பொறுக்கிற முத்து கூட போகணும்னு நெனைச்சோமே — என்று சுந்தர் தன் தவறை நினைத்து வருந்தினான்.



ஒரு நாக்கின் கதை

நீங்க ஒரு பேச்சு பேசறதுக்குள்ளே நான் எப்படியெல்லாம் நெளிந்து வளைந்து சர்க்கஸ்காரன் போல பல்டி கில்டியெல்லாம் அடிச்சுக் கஷ்டப்பட ணும் தெரியுமா?

ஹலோ. நான்தான் நாக்கு பேசு கிறேன். ஊம் — நாக்கு என்றாலே என்ன மதிப்பு இருக்குது? கண்ணுக்கு இருக்கிற மரியாதையிலே பாதி கூட எனக்குக் கிடையாது.

அதாவது பரவாயில்லே. தலைமுடிக் கும் நகத்துக்கும் இந்த மனுஷங்க செய் கிற அலங்காரங்களும் அலட்டல் களும் எனக்கு எரிச்சலா வருது!

என்னைப் போல உபயோகமான உறுப்பு — ஆயுசு பூராவுக்கும் மனுஷங் களுக்கு உழைக்கிற உறுப்பு வேறே எதுவுமே இல்லேன்னு நான் அடிச்சுச் சொல்வேன்?

பார்வை — குறைஞ்சிடும். காது — கேட்காது. முடி நரைச்சிடும்; கொட்டி டும். நகம் — தேஞ்சிடும்; சொட்டையா யிடும்! தோலு கூடச் சுருங்கிடும்!

ஆனால், நான் சாகிற வரைக்கும் 10 செ. மீ. நீளம்தான்; 57 கிராம் எடை தான்! நான் இல்லாமே உங்களாலே இருக்க முடியுமா?

பேசாமே இருப்பீங்க. சாப்பிடாமே இருப்பீங்களா? சேச்சே — நான் ஒரு விநாடி புரண்டுட்டேன் பாருங்க, இனி நான் புரள மாட்டேன். 'சாப்பி டாமே இருக்கலாமே, பேசாமே எப்படி இருப்பது?' என்றுதானே கேட் கிறீங்க? அதுவும் சரிதான்!

அதுவும் எப்படிப்பட்ட ஜெயிலுக் குள்ளே இருக்கேன்னு கொஞ்சம் யோசிச்சுப் பாருங்க. கூற்றியும் கூரிய பற்கள். அப்பப்பா! ஒவ்வொரு விநாடியும் எவ்வளவு கவனமாயிருக்க வேண்டும்? இல்லேன்னா... நீங்க பேசும் போதெல்லாம் — சாப்பிடும் போதெல்லாம் நாக்கைக் கடிச்சுப் பீங்க. வலியிலே துடிதுடிச்சிப் போயிடு வீங்க. ஊம், என் கஷ்டத்தை நீங்க புரிஞ்சுக்கிட்டால் சரி!

தவளைங்க போல நாக்கை வெளியே நீட்டிப் பூச்சியெல்லாம் பிடிக்க மாட்டேன்! பாம்புங்க போல இருட்டிலே வழியை நாக்காலே தடவிப் பார்த்து உணர மாட்டேன். ஏன்னா, நான் மனுஷ நாக்கு!

ஆனாலும், நாக்கை வெளியே நீட்டி அழகு காண்பிக்கிறீங்க. என் மனசு என்ன கஷ்டப்படறது? நான் என்ன அப்படி அசிங்கமாகவா இருக் கிறேன்?

அதுமட்டுமா? என்னைப் பற்றி அத்தனை கேவலமாப் பேசறீங்க? பொய் பேசினா — புழுத்துப் போன நாக்கு; அபசகுனமாப் பேசினா, கரி நாக்கு; அதிகமாப் பேசினா... நீளமான நாக்கு!



ருசியறிஞ்சு சாப்பிட்டா, வக்கணை யான நாக்கு; இதை எல்லாமே நானா கவா செய்கிறேன்? நீங்க நினைப்பதை மூளை எனக்குக் கட்டளையிடுவதைத் தானே நான் செய்கிறேன்?

எலும்பில்லா நாக்குத்தான். ஆனால் ருசி காட்டும் நரம்பு மொட்டுக் கள் இருக்கின்றன. நுனி நாக்கில் உப்புச் சுவை, நடு நாக்கில் இனிப்புச் சுவை, கடைசிப் பகுதியில் கசப்புச் சுவை, இரு பக்கங்களிலும் புளிப்புச் சுவை இருக்கிறது என்று சில விஞ்ஞா னிகள் நினைக்கிறார்கள். வேறு சிலர் எல்லாப் பகுதியும் எல்லா ருசிகளை யும் அறியும் என்கிறார்கள்.

கசப்பு, புளிப்பு, இனிப்பு, உப்பு — இந்த நான்கும்தான் அடிப்படை ருசி கள். சிவப்பு, மஞ்சள், நீலம் போன்ற அடிப்படை நிறங்களிலிருந்து வேறு வேறு நிறங்களை உண்டாக்குவது போல, அடிப்படை ருசிகளிலிருந்து வகை வகையான எண்ணற்ற சுவை கள் ஏற்படுகிறதாம். ஏற்படுத்துவது யார்? அடியேன் — நாக்குத்தான்.

நாக்குக்கு ருசியறியும் சக்தி இல்லை யென்றால்... மனிதருக்கு நேரக் கூடிய ஒரு வகை நோயாம் அது. ருசியில்லா மல் எப்படிச் சாப்பிட முடியும்? ஊம், ''அப்பத்தான் இந்த மனுஷங்களுக்கு என் அருமை தெரியும்!''

நாக்கு நோய் காட்டும் கண்ணாடி என்பார்கள். சிவப்பு, கறுப்பு, வெளுப்பு, மஞ்சள்னு நான் நிறம் மாறியிருப்பதைப் பார்த்து ஜீரணக் கோளாறா, மஞ்சள் காமாலையா, ரத்த சோகையா, தொற்றுக் கிருமிகள் இருக்கிறதா என்று டாக்டர்கள் சுலப மாகக் கண்டுபிடிச்சிடுவாங்க. அதுக் குத்தானே நாக்கை நீட்டுன்னு சொல் றாங்க?


என் மேலே மாவு போலப் படிஞ் சிருப்பது அரைபட்ட உணவுத் துணுக் குகள்தாம்.


ஒரு விஷயம் சொல்ல மறந்துட் டேனே! நீங்க கட்டிமுட்டியா இடமா சாப்பிடற பொருளை, நான் எச்சி லைக் கூட்டித் திரவமாக்கினால்தான் உங்களுக்கு ருசியே தெரியும். போதும், சுயபுராணம் என்கிறீர்களா? சரி, நிறுத்திக் கொள்கிறேன். ஆனால்...

உங்களுடைய ஆரோக்கியத்திற்கு மட்டுமல்ல; சமூகத்தில் உங்களுக்குப் பெரும் புகழும் ஏற்படக் கூட எங்கோ உள்ளேயே முடங்கிக் கிடக்கும் இந்த நாக்குத்தான் உறுதுணையாயிருக்கும் என்பதை மட்டும் நல்லா நினைவு வெச் சுக்கோங்கோ.


நாக்குக்கு ஈடு நாக்கேதான்!


— காமாட்சி சுந்தரி —


பஞ்சாபில் ஒரு கிராமம். காலு தம்பதிக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது...
எவ்வளவு அழகான குழந்தை! நானக் என்று பெயர் சூட்டுவோம்!
நானக் வளர்ந்தான். அவனைப் பற்றி கவலைப்பட்ட காலுவுக்கு மனைவி ஆறுதல் சொன்னாள்...
படிக்கவே மாட்டேனென்கிறானே...
விளையாட்டுப்புத்தி... ஆனால் புத்திசாலி...
ஒரு நாள்...
படிப்புதான் வரலே; மாடுகளையாவது மேய்த்து வா!...
வீரச் சீக்கியரின் அன்புக்
குரு: நானக்
கதை: ஆனந்தி படம்: வினு!
அன்று மாலை, ஒரு நண்பர் வந்து...
காலு! மரத்தடியில் நானக் தூங்கிக் கொண்டிருந்தான்...
வரட்டும், நன்றாய் உதைக்கிறேன்!
அவசரப்படாதே! முழு விவரமும் கேள்! நானக் முகத்தில் வெய்யில் படாமலிருக்க ஒரு நல்ல பாம்பு படமெடுத்துக் குடை பிடித்துக் கொண்டிருந்தது!


ஆ! அப்படியா!
காலூ! உன்பிள்ளை பெரிய மகானாக விளங்குவான்!
ஒரு நாள்...
ஏய்! நானக்! மாடுகளைக் கவனி! கஜையாலால் வயலில் புகுந்து மேய்கின்றன...
அன்று மாலை....
காலூ! கஜையாலால் ரொம்பக் கோபமாயிருக்கிறார்! நானக் அவரிடம் உதை வாங்கத்தான் போகிறான்!
அவர் என்ன உதைப்பது? அதற்கு முன் நானே தண்டிப்பேன்! வரட்டும் அவன்!
கேட்டுக் கொண்டே வந்த நானக்...
பயிருக்கு ஒரு சேதமும் இல்லை அப்பா! வேணுமானால் காலையில் போய்ப் பாருங்களேன்!
மறு நாள் காலை கஜையாலால், வயலுக்கு வர.....
அட! பயிர்கள் முன்னைவிடச் செழிப்பாக இருக்கே...! நானக்கிடம் ஏதோ தெய்விக சக்தி இருக்கத்தான் செய்கிறது.....!


நானக் காட்டில் உலவுவான்......
இறைவன் படைப்பில் எத்தனை அழகுகள்!
மழைக் காலத்தில்...
இடியோசை கேட்டு, மழையை எதிர்பார்த்து இந்த மயில் சிலிர்க்கிறது......
மர்தனன் என்ற வேலைக்காரச் சிறுவன் பாடுவதைக் கேட்பான்...
மர்தனா! கோடானு கோடி நட்சத்திரங்களைப் படைத்த இறைவன் புகழைப் பாடு!
சந்நியாசிகள், சாதுக்கள் கிராமத்துக்கு வந்தால் அவர்களைக் கேள்விகளால் துளைத்தெடுப்பான்....
மனிதன் எதற்காகப் பிறக்கிறான்? இறந்த பிறகு எங்கே போகிறான்?
ஒருநாள் தாழ்ந்த ஜாதி சிறுவன் கையைப் பற்றி வீட்டுக்கு அழைத்து வந்தான். தாய் திகிலடைந்து....
நானக்! அவனைத் தொடாதே! அனுப்பி விடு!
ஏன்?


அவன் கீழ் ஜாதி. அவனுடன் நீ பழகினால் நம்மையும் ஜாதியிலிருந்து தள்ளி விடுவார்கள்!
மற்றொரு நாள்...
நானக் சாப்பிட வா!
இன்று நான் ரஹீம் வீட்டில் சாப்பிடப் போகிறேன். என்னை விருந்துக்கு அழைத்திருக்கிறான்.
முஸ்லிம்கள் வீட்டில் நாம் சாப்பிடக் கூடாது! நாம் ஹிந்துக்கள்!
இந்த வேறுபாடுகள் நானக்குக்குப் புரியவில்லை...
இறைவன் தான் எல்லா மனிதர்களையும் படைத்தார் என்கிறார்கள், அப்புறம் உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதி... வேறு மதம்... என்கிறார்கள்... என்ன குழப்பம்!
நானக்குக்குப் பூணூல் போட நாள் குறித்தார்கள்...
இந்த நூலை நான் ஏன் அணிய வேண்டும்?
வேதியர்களின் தர்மம் இது.



நானக் திருப்தி அடையவில்லை...
இந்த நூலில் என்ன தர்மம் இருக்க முடியும்? ஒரு கொள்ளைக்காரன் கூட இந்த நூலை அணிய முடியுமே?
தர்மம் இந்த நூலில் இல்லை. சத்தியம், கருணை, ஆசையைத் துறந்து மனத்தைக் கட்டுப் படுத்துதல் ஆகிய வற்றில்தான் தர்மம் இருக்கிறது!
கூடியிருந்தவர்கள் பிரமித்து...
ஆ! இந்தச் சிறுவன் என் அகந்தையைப் போக்கி விட்டான்!
இவன் மகானாக விளங்கப் போகிறான்!
ஆனால் நானக்கின் தந்தைக்கு ஏமாற்றம்....
பூணூல் போட்ட பிறகாவது நானக் திருந்துவான் என்று பார்த்தேன். படிப்பதுமில்லை; உழைப்பதுமில்லை. கூரை மோட்டைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறான்...
...இல்லாவிட்டால் சாது-சந்நியாசிகள் பின்னால் சுற்றுகிறான்!...
கல்யாணம் பண்ணி வைப்போம்; பொறுப்பு வந்து விடும்.


காலாகாலத்தில் நானக்குக் திருமணம் நடந்தது!...
ஸுலக்கினியும் நானக்கும் மகிழ்ச்சியாக வாழ்ந்தார்கள்...
அவர்களுக்கு இரு ஆண் குழந்தைகள் பிறந்தன...
இறைவன் தந்த செல்வங்கள்!
ஒரு நாள் தந்தை...
நானக்!..நீ குடும்பஸ்தனாகி விட்டாய். கை நிறைய சம்பாதிக்க வேணும்...
இந்தா, இந்தப் பணத்தை வைத்துக் கொண்டு வியாபாரம் செய்...
நானக் பணத்துடன் புறப்பட்டான். சில சந்நியாசிகளைப் பார்த்தான்...
இவர்கள் ஆசிகளைப் பெற வேண்டும்.


அடி பணிகிறேன்; ஆசீர்வதிக்க வேணும்....
உலகம் புகழ வாழ்வாய்...!
நாங்கள் சாப்பிட்டுப் பல நாட்கள் ஆயிற்று. ..இந்த ஊரில் அன்னதானம் செய்பவர் யார்..?
தந்தை கொடுத்த பணத்தைச் சாதுக்களுக்கு உணவிடுவதி லேயே செலவழித்து விட்டான் நானக்...
வயிறார உணவிட்டாய்! நெஞ்சார வாழ்த்துகிறோம்..!
நானக் வீடு திரும்பினான்...
என்ன, வியாபாரம் தொடங்கினாயா?
அழியும் பணத்தைச் செலவிட்டு அழியாத ஆசிகளைப் பெற்றேன். ...நல்ல லாபம்!
தந்தை, நானக்கை அடிக்கப் போனார்... நானக்கின் சகோதரி தடுத்தாள்...
அப்பா! நில்லுங்கள்...!



சகோதரி நானகி கூறினாள்....
அப்பா! தம்பியை சுல்தான்பூருக்கு அழைத்துப் போகிறேன். என் கணவர் நானக்குக்கு ஏதாவது வேலை கற்றுத் தருவார்...
ஒரு முஸ்லிமிடம் கணக்கு எழுதினான் நானக்...
நீ ஹிந்து, நான் முஸ்லிம். ஆனாலும் நண்பர்களாயிருப்போம்
அதற்கென்ன, நாம் அனைவரும் ஆண்டவன் குழந்தைகள் தானே...!
நானகியிடம் அவள் கணவர்...
உன் தம்பி ஒழுங்காய் வேலை செய் வதாகக் கேள்வி...
அப்பாவுக்கு எழுதுகிறேன்; சந்தோஷப்படுவார்.
சுல்தான்பூருக்கு நானக்கின் அன்புத் தோழன் மர்த்தனன் வந்து சேர்ந்தான்...
மர்த்தனன்!
நானக்!
நண்பன் ஆனந்தமாக வாத்தியம் இசைக்க, நானக் தம்மை மறந்து பாடினார்...
ஆ! அருள்வாக்குகளாகப் பெருகுகின்றன, இவரிடம்!



நானக்கின் புகழ் பரவியது... சென்றவிடமெல்லாம்...
வரவேணும் குரு நானக்ஜி!
அருள் வாக்கு பெருகட்டும்!
சில ஹிந்துக்களுக்கு அவர் போக்கு பிடிக்கவில்லை...
முஸ்லிம்களுடன் சிநேகம் கொண்டாடுகிறீர்களே... அவர்கள் வேறு மதம்...
நாம் அனைவரும் சகோதரர்கள். இறைவன் நம் தந்தை.
ஒரு நாள் ஹிந்து புரோகிதர் போல் உடையணிவார் நானக்...
குருதேவா, வணங்குகிறேன்!
மறுநாள் முஸ்லிம் மௌல்வி போல் தோற்றமளிப்பார்!
மௌல்வி சாகப், ஸலாம்!
நானக் தலயாத்திரை கிளம்பினார். மர்த்தனாவும் பாலா என்ற இளைஞனும் உடன் வந்தனர்...
என்னுடன் வருவதானால் உடைமைகளையெல்லாம் தானம் செய்துவிட்டுப் புறப்படவேண்டும்...
எல்லாவற்றையும் கொடுத்தாகிவிட்டது...



கிராமம் கிராமமாகச் சென்று நானக் பாடினர். பஞ்சாப் முழுவதும் அவை எதிரொலித்தன.
பெரிய மகான்!
அன்பு மதத்தைப் போதிக்கிறார்....
கங்கைக் கரையை அடைந்தார் நானக்....
என்ன செய்கிறீர்கள்?
பித்ருக்களுக்கு நீர்க் கடன் அளிக்கிறோம்.
நானக் மேற்கு நோக்கி நின்று நீர் சொரிந்தார்....
நீ என்ன செய்கிறாய்?
பஞ்சாபில் மழை இல்லை. அதனால் நீர் விடுகிறேன்!
அசடே! இது எப்படி பஞ்சாபுக்குப் போகும்?
பித்ருலோகத்துக்கு உங்கள் நீர் போகுமானல், நான் விடும் நீர் பஞ்சாபுக்கு ஏன் போகாது?
சடங்குகளைச் செய்தவர் வருந்தினர்.
உங்களைப் பரிகசிப்பது என் நோக்கமல்ல. சடங்குகளால் மட்டும் பயனில்லை. சடங்குகள் நம் உள்ளத்தில் அன்பை, கருணையைப் பெருக்க வேண்டும். மூதாதையரைக் கௌரவிக்கும் முறை அதுவே!



தவமிருந்த ஒரு யோகியைக் கண்டார் நானக்...
சுவாமி! என்ன செய்கிறீர்கள்?
இறைவனைத் தரிசிக்க விரும்பிப் புலனடக்கம் பயில்கிறேன்....
உடலை வருத்தி, பட்டினி கிடந்தால் பகவானைப் பார்க்க முடியுமா? சத்தியமும் கருணையுமே கடவுளைக் காண வழி. கனிந்த இதயத்தில் இறைவன் குடி கொள்கிறான்...
நானக் லாகூரை அடைந்தார். துக்னி சந்த் - பெரும் பணக்காரன் - வரவேற்கிறான்...
தங்களுக்கு எது வேணுமானாலும் தருவேன்; கேளுங்கள்...
மறு உலகில் நாம் சந்திக்கும் போது இந்த ஊசியைக் கேட்பேன்... கொடு!
என்ன மறு உலகிலா? இந்த ஊசியை எப்படி எடுத்துப் போவது?
ஊசியையே கொண்டு போக முடியாத போது, உன் செல்வத்தையா கொண்டு போக முடியும்?



நற்பணிகளுக்குச் செல்வத்தைச் செலவிடு. ஏழைகளின் துயர் நீக்கு...
அப்படியே செய்கிறேன்.
நானக்கும் மர்த்தனவும் இருந்த ஊரை பாபரின் மொகலாயப் படைகள் கைப்பற்றின....
அகப்பட்டவர்களையெல்லாம் சிறையில் தள்ளினார்கள். ... மாவரைக்கச் செய்தார்கள்.
உம்... சீக்கிரம்! மொகலாயப் படை வீரர்களின் ரொட்டிக்கு மாவு வேண்டும்...
சிறைப்பட்ட நானக்கும் மர்த்தனவும் மாவரைத்தார்கள்....
வேகமாய்ச் சுற்றுகிறாயா? சவுக்கைச் சொடுக்கவா?
மாலை நேரமானதும் நானக், வழக்கம் போல் பிரார்த்தனை செய்தார்...
ஏய்! என்ன இது! அரைப்பதை நிறுத்தி விட்டாய்! உதை கேட்கிறதா?



மாவு இயந்திரம் தானகவே சுற்றத் தொடங்கியது!
இதென்ன அதிசயம்!
பாபருக்குச் செய்தி எட்டியது...
இப்படிப்பட்ட புண்ணிய புருஷரைத் தரிசிக்க வேண்டும்....
பாபர் நேரில் வந்து...
நானக்கை விடுதலை செய்யுங்கள்...
எல்லாரையும் விடுவித்து உடைமைகளைத் திருப்பித்தந்தாலொழிய நான் மட்டும் விடுதலை பெற விரும்பவில்லை.
பாபர் அப்படியே செய்தார்.
எங்களை வாழவைத்த தெய்வம் நீங்கள்....
லாலு என்ற தச்சன் வீட்டில் நானக் தங்கியிருந்தார்.... அப்போது...
மாலிக் பாகோ தங்களை விருந்துக்கு அழைத்து வரச் சொன்னர்.
லாலுவின் ரொட்டியே எனக்குப் போதும்...


செல்வந்தன் மாலிக்பாகோ நேரில் வந்தான்...
என் விருந்துக்கு வர மறுத்துக் காய்ந்த ரொட்டி சாப்பிடுகிறீர்களே... இந்தாருங்கள்....
லாலுவின் ரொட்டியை ஒரு கையிலும் பாகோவின் லட்டுவை ஒரு கையிலும் எடுத்துப் பிழிந்தார் நானக்.... ..
ஆ! ரொட்டியிலிருந்து பால் வழிகிறது!
ஐயோ! என் லட்டுவிலிருந்து ரத்தம் சொட்டுகிறது!
பாகோ! லாலுவின் ரொட்டி உழைத்துச் சம்பாதித்த உணவு. உன் லட்டு ஏழைகளைக் கசக்கிப் பிழிந்து சம்பாதித்தது....
என்னை மன்னித்துக் காப்பாற்றுங்கள்...
நாம் அனைவரும் சகோதரர்கள். ஏழைகளுக்கு உதவு; கருணை காட்டு.
ஸஜ்ஜன் என்று ஒரு பெரிய திருடன் இருந்தான்.... தோழர்களிடம்...
ஹிந்து, முஸ்லிம் இருவரும் நமக்கு ஒன்றுதான்! கொன்று போட்டேனும் பொருள்களைப் பறிப்போம்!


ஸஜ்ஜன் மசூதி, கோயில் இரண்டும் கட்டினான். மக்கள் ஏமாந்தார்கள்.
ஸஜ்ஜன் பணக்காரன்; ஆனால் பரந்த மனம் படைத்தவன்!
தர்மப்பிரபு!
ஓரிரவு ஸஜ்ஜன் வீட்டில் நானக் தங்கினார்...
பாடுகிறேன், கேட்கிறாயா?
சரி!
வேண்டா வெறுப்பாகக் கேட்க ஆரம்பித்த ஸஜ்ஜன், மனமுருகிப் போனான்....
கொக்குகள் தவமிருக்கின்றன- ஆனால் கொத்துகின்றன மீனைக் கண்டால்! பழக அழகான மனிதன் - ஆனால் பாழான மனமோ கொடூரம்!
சுவாமி என்னை மன்னியுங்கள்!
ஸஜ்ஜன், இறைவனிடம் மன்னிப்புக் கேள். திருடியதையெல்லாம் தானம் செய்!
ஸஜ்ஜன் மனம் திருந்தி நானக்கின் சீடனானான். முதல் சீக்கிய குருத்வாராவைக் கட்டினான்..
ஸஜ்ஜன் உண்மையே பரம்பொருள்! அன்பே தெய்வம்! சத்தியமே நிலைக்கும்!



நானக் சமய ஒற்றுமையை உணர்த்த மெக்கா-மெதினா சென்றார்... அங்கிருந்த முஸ்லிம்கள் வரவேற்று...
நாங்கள் ஒரு நாளில் ஐந்து முறை பிரார்த்தனை செய்கிறோம்......
பிரார்த்தனை நல்லதுதான்; கருணை அதைவிட நல்லது...
குருநானக் பாரதம் திரும்பினார். அவர் மறையும் நேரம் நெருங்க...
ஹிந்துக்கள் வழக்கப்படி ஈமக் கிரியைகள் செய்வோம்...
இல்லை; முஸ்லிம்கள் வழக்கப்படிதான் காரியங்கள் நடக்க வேண்டும்!
நானக் இருதரப்பினரையும் அழைத்து...
என் உடலில் ஹிந்துக்கள் வலப்புறமும் முஸ்லிம்கள் இடப்புறமும் மலர் தூவி வையுங்கள், நாளை எந்தப் பக்க மலர்கள் வாடாமல் உள்ளனவோ, அவர்கள் எனக்கு அந்திமக் கிரியைகள் செய்யலாம்!
நானக் உயிர் பிரிந்தது... மறு நாள்...
ஆ! இருபக்க மலர்களும் இன்று பூத்ததுபோல் உள்ளனவே!
சமய ஒற்றுமையை வலியுறுத்துகின்றன...
குருநானக்கின் பாடல்கள், வேறு மகான்களுடைய பாடல்களுடன் குருகிரந்த் சாஹிப் என்ற புத்தகத்தில் இடம் பெற்றுள்ளன. அமிர்தசரஸ் பொற்கோயிலில் சீக்கியர்களால் வணங்கப் படுகிறது இந்நூல்.

கொடியும் மனசும்

3

''அதானே (மெதுவாக) யோவ், மானத்தை வாங்காதீர்... சரி, சரி, நீ வாம்மா, என்ன சாப்பிடறே? காப்பியா? டீயா? டிபனா?''

''எனக்கு முதல்லே நான் உங்ககிட்ட கொடுத்த கொடியைக் காட்டுங்க போதும். எந்த டிராயர்லே வெச்சிங்கன்னு சொல்லுங்க. நானே தேடறேன்.''

''நீ தேட வேண்டாம்.''

''ஏன் தேட வேண்டாம்?''

''தேடினாக் கிடைக்காது!''

''ஏன் கிடைக்காது? நல்லாத் தேடினாக் கிடைக்கும்.''

''எப்படித் தேடினாலும் அந்தக் கொடி கிடைக்காது. நான்தான் அந்த டிராயர்லேயே வைக்கலியே!''

''என்ன! மேஜை டிராயர்லே வைக்கலியா?''

''பாரததேவி, கொடியை எங்கே வெச்சேன்னு தெரியலை. காணோம். தேடிக்கிட்டு இருக்கேன்.''

''என்ன, நம் தேசியக் கொடியைத் தொலைச்சிட்டீங்களா?'' பாரத தேவி என்னை உற்றுப் பார்த்தாள். அவளைத் தலைநிமிர்ந்து பார்க்கும் சக்தி எனக்கில்லை. என்ன தோன்றியதோ? பாரத தேவி விர்ரென்று புறப்பட்டுப் போய்விட்டாள்.

''பேபி! தேவி! பேபி! பாரத தேவி, நில்லு! நில்லு!'' — கூப்பிடக் கூப்பிடத் திரும்பிப் பாராமலேயே போய் விட்டாள். எனக்கு என்ன செய்வதென்றே தோன்றவில்லை. நானும் அவளைப் பின்தொடர்ந்தேன். அதற்குள் வீதியில் இறங்கியவள் வேகமாக நடைபாதையின் மேலேஏறிஓடினாள். பிறகு மாயமாய் மறைந்து விட்டாள். நேராக வீட்டிற்குத்தான் போய்ச் சேர்ந்தாள்.

வீட்டை அடைந்ததும் பலத்த குரலில்,

''பொய் பேசற இந்த வீட்டிலே காந்திப் படம் இருக்கலாமா? பெரியவங்க பொய் பேசலாமா? இப்போ நான் என்ன பண்ணுவேன்?'' பாரத தேவி விர்ரென்று ஒரு நாற்காலியைப் போட்டு அதன் மேலே ஒரு கூடையைப் போட்டு, அதன் மேலே மெதுவாக எப்படியோ ஏறிவிட்டாள். சுவரில் மாட்டியிருந்த காந்தி படத்தையும் கையில் எடுத்துக் கொண்டு விட்டாள். கீழே இறங்க முயன்றாள். கூடையோடு நாற்காலியும் சாய்ந்துவிட கையில் காந்தி படத்துடன் ''அம்மா!'' என்று அலறியபடி பாரததேவி கீழே விழும் சமயம், வெளியே இருந்து நான் ஓடி வரவும் வீட்டினுள்ளே அடுக்களையில் வேலையில் ஈடுபட்டிருந்த என் மனைவி ஓடி வரவும் சரியாக இருந்தது. வந்த இருவரும், சொல்லி வைத்தாற் போல் பாரத தேவியைப் பிடித்துக் கொண்டோம்.

''என்னம்மா இது? உனக்கு என்னாச்சு? அடிகிடி படலியே?''

''காந்தி படத்துக்கு ஒண்ணும் ஆகல்லே. அதுவே போதும் எனக்கு.''

''எதுக்காக இப்போ மாட்டியிருக்

கூத்தபிரான்

கிற காந்தி படத்தைக் கழட்டினே?''

''மாமி, பொய் பேசற வீட்டிலே எங்க தாத்தா ஏன் இருக்கணும்? அதான் எடுத்தேன்.''

''இதோ பாரு பாரத தேவி.''

''நான் உங்க கூட இனிமே பேசத் தயாராயில்லே. உங்களைப் பார்க்கக் கூடப் பிடிக்கல்லே. என் கூட இனிமே நீங்க பேச வேண்டாம். பொய் பேசறவங்களோடு எனக்கு என்ன பேச்சு?''

''பாரத தேவி! இதோ பாரு நீ கொடுத்த கொடி. நல்லாப் பாரு. என் கிட்டே பத்திரமா இருக்கு. கைதவறி எங்கேயோ வைச்சுட்டேன். சமாளிக்க ஏதேதோ சொன்னேன். அது தப்புத்தான். கோவிச்சுக்காதே! கண்ணைத் துடைச்சுக்க. இந்தா நீ எனக்கு வரைஞ்சு கொடுத்த மூவர்ணக் கொடி'' — கொடியை நீட்டினேன். பாரத தேவி மிகவும் சந்தோஷத்துடன் கைநீட்டி அதை வாங்கினாள். ஆனால், வாங்கிய மறுகணமே அவள் முகத்தில் மலர்ந்த மகிழ்ச்சி மறைந்து விட்டது. திரும்பத் திரும்பக் கொடியின் இரு பக்கங்களிலும் பார்த்தாள்.

''நீ வரைஞ்ச கொடிதான். நல்லாப் பாரு.''

''நல்லாப் பார்த்தேன் மாமா! இது நான் வரைஞ்ச கொடியே இல்லை. நான் வரைஞ்ச கொடி நடுவே ராட்டை போட்டு இருந்தேன் இது லே காணோமே?''

''அதை யாராவது நூல் நூற்க எடுத்துப் போயிருப்பாங்க.''

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. ஓர் ஆளிடம் தேசியக் கொடியைச் சின்னதாய் அழகாய் வரைந்து கொடுக்கச் சொன்னேன். கொடி நடுவே எதையோ வரைஞ்சு கொடுத்திருக்கான்.


''பாரத தேவி, நீ இது வந்து... நீ போட்ட... நீ போட்ட...''


''பேசாதீங்க. நான் வரைஞ்ச மூவர்ணக்கொடியின் நடுவே ராட்டை உண்டு. நான் போட்டேன். அதே கொடியைப் போல ஒரு பக்கம்தான் வரைஞ்சேன். மறுபக்கத்திலே இந்தியான்னு எழுதியிருக்கேன். நான் வரைஞ்ச மற்ற கொடிகளையும் கொண்டு வந்து காட்டுறேன். பிறகு பேசுங்க.''

அந்தக் கொடியைத் தயார் பண்ணிக் கொடுத்தவன் ஒரு மடையன். அதைச் சரியாய்ப் பார்க்காமல் வாங்கி வந்த நான் ஒரு மடையன். என்ன பண்றது?

இன்றோடு சரியாக மூன்று மாதங்கள் ஆகின்றன, பாரத தேவி என்னோடு பேசி! அவள் என் எதிரில் கூட வர மாட்டாள். நான் நிற்கிற இடத்திலே கூட நிற்க மாட்டாள். இந்த மூன்று மாதங்களில் நான் அந்தக் கொடியைத் தேடித் தேடி எனக்குப் பைத்தியமே பிடித்துவிடும் நிலைக்கு வந்துவிட்டது. வீட்டில் உள்ளவர்கள், அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள், வீட்டுக்கு வந்து போவார் என்று பலரும் எங்கள் இருவரையும் சமாதானம் செய்து வைக்க முயன்று அடைந்தது தோல்வியே. ஒரே வீட்டில் மூன்று மாதங்களாக ஒரு குழந்தையுடன் என்னால் பேச முடியவில்லை என்பதை நினைக்கும் போது சில சமயம், நான் எதற்காக உயிருடன் இருக்க வேண்டும் என்று கூட நினைக்கிறதுண்டு, நான் உயிரோடு இருக்கிறதே பாரத தேவியைக் கண்ணால் பார்த்துக் கொண்டு இருந்தாலே போதுமேன்னுதான். எது எப்படியோ தேசியக் கொடியைக் கொடுக்கும் போதே குழந்தை சொன்னாள். அதைப் பத்திரமா பார்த்துக்கணும், அதுக்கு ஒரு வில்லங்கமும் வரக் கூடாதுன்னு. அதை நினைக்கும் போது இந்தத் தண்டனை நியாயமானதுன்னு கூடச் சில சமயம் நான் நினைப்பேன்.

இப்போ எனக்கு இன்னொரு பெரிய கவலை வந்திருக்கு. நான் என் அலுவலக விஷயமா வெளிநாடு போகப் போறேன். அதுவும் இன்னும் இரண்டு நாட்களிலே. அதுக்குள்ளே அந்தக் குழந்தை என்னை ஒரு தரம் மாமான்னு ஆசையாக் கூப்பிடாதான்னு தவிக்கிறேன். வேண்டாத தெய்வமில்லே. நானே இந்த மூன்று மாதத்திலே வலுவில் போய்ப் பல தடவை பேசிப் பார்த்தேன். பதிலுக்கு ஒரு வார்த்தை, ஒரே ஒரு வார்த்தை என் கிட்டே பேசினாத்தானே? இன்னிக்குக் கடைசித் தடவையாப் பேசலாம்னு இருக்கேன். என் அதிர்ஷ்டம்





''எனக்கு ஒண்ணும் வேண்டாம்! டாக்டர் சர்க்கரையை சேர்க்கக் கூடா துன்னு சொல்லியிருக்கிறார். அதனாலே வரும் போதே கரும்புச்சாறு சாப்பிட்டுட்டு வந்துட்டேன், வேறே ஒண்ணும் வேண் டாம்!

— மா. தா. நந்தகுமார்.

எப்படியோ, பார்க்கலாம். நான் பாரத தேவின்னு கூப்பிட்டவுடனே என்ன மாமான்னு கேட்டாப்போதும். வேறே எதுவும் பேச வேண்டாம். முயற்சி பண்ணிப் பார்க்கட்டுமா? இதுக்கு அனைவரின் நல்லாசி தேவை.

''அதோ பள்ளிக்கூடம் விட்டுக் குழந்தை பாரததேவிதான் வருகிறாள். வரட்டும். ''பாரத தேவி, பாரத தேவி, நான் உன் மாமா கெஞ்சிக் கேட்கிறேன். என் கூடப் பேசும்மா. நான் நாளை மறுநாள் அயல்நாட்டுக் குப் போகப் போகிறேன். திரும்பி வர ரொம்ப நாட்களாகும். அதைப் பற்றிக் கூட நான் கவலைப்படவில்லை. இதோ பாரும்மா! உன்கூடப் பேசா மல் போறேனே, அதைத்தான் என் னாலே தாங்கிக்க முடியல்லே. நான் பொய் சொன்னது தப்பு. அதைவிடப் பெரிய தப்பு நீ வரைஞ்சு கொடுத்த தேசிய மூவர்ணக் கொடியைப் பத்திரமா வெச்சுக்கா தது. அதனாலே, நான் நாட்டை மதிக் கல்லே, நம்ப கொடியை வணங்க லேன்னு அர்த்தமில்லை. நீ இப்போ இன்னொரு கொடியைக் கொடு. அதை நான் பத்திரமா வெச்சுக்கி றேனா, இல்லையான்னு பாரு. அதிலே, நான் தவறி விட்டால், நீ எனக்கு என்ன தண்டனை வேணும் னாலும் கொடு. இதுக்கும் மேலே நீ பேசாத போனா, பைத்தியம் மாதிரி நான் மட்டும் உன்னோடு பேசினேங் கிற சந்தோஷமே எனக்குப் போதும். பேசு, பாரத தேவி. பிளீஸ்.''

பாரத தேவி வாயைத் திறக்கல்லே. ஒரு வார்த்தை என்னோட பேசல்லே.

நான் வெளிநாடு கிளம்பற நாளும் வந்தாச்சு. அன்றைய தினம் பாரத தேவியும் வீட்டிலே காரணமில்லாமே, அங்கேயும் இங்கேயும் வேடிக்கை பார்த்துக்கிட்டு இருக்கிறாள். என்னை ஏற்றிக் கொண்டு கார் கிளம் புகிறது. வண்டியிலிருந்து நான் அனைவருக்கும் கை ஆட்டினேன். பாரத தேவியிடம் மட்டும் 'டாடா' என்றேன். பதில் இல்லை. திரும்பவும் டாடா என்றேன். இரு முறை சொல் லியும் வாயைத் திறந்தாத்தானே! நான் மிகவும் வருத்தத்துடன் புறப் பட்டுப் போனேன். வீட்டில் இருந்த வர்கள் முணுமுணுத்தார்கள்.

அது நிச்சயம் பாரததேவி நடந்து கொண்ட விதம் பற்றித்தான். நான் புறப்பட்டுப் போய் 1 மணி நேரமிருக் கும். நான் விமான நிலையத்தில் என் கைப்பையிலிருந்து விமான டிக்கெட் டுகளை எடுக்கும் போது, பையின் ஒரு மூலையில் ஒரு மூவர்ண தேசியக் கொடி, பளிச்சென்று கண்ணில் பட்டது. எனக்கு ஒரே ஆச்சர்யம்! உடனே அங்கிருந்த தொலைபேசி மூலம் வீட்டிற்குத் தொடர்பு கொண்டு அவசரமாக,

''ஹலோ! யாரு? நான்தான் மணிக் கொடி பேசறேன். பாரத தேவி கொடுத்த கொடி கிடைச்சுட்டுது. என் கைப்பையிலேயே இருக்கு! நான் உடனே அவகிட்டே பேசணும். அவளைக் கூப்பிடு'' என்றேன் என் மனைவியிடம்.

''இதோ கூப்பிடறேன்'' என்று பதில் வந்தது. உடனே சிறிது நேரத் துக்கெல்லாம் ''ஹலோ'' என்ற குரல் கேட்டது. அது பாரத தேவியின் குரலேதான்!

''அம்மா, பாரத தேவிதானே? குழந்தை! நான் மணிக்கொடி மாமா பேசறேன். பேசுறது யார்? பாரத தேவிதானே?'' பலத்த குரலில் கேட் டேன்.

பக்கத்தில் இருந்த என் மனைவி,

''ஆமான்னு'' சொல்லு. பேசாமே ரிசீவரைக் காதிலே வெச்சுக்கிட்டு யிருந்தா எப்படி? பேசு, பாரத தேவி, பேசு'' என்பது மட்டும் லேசாக என் காதிலே விழ, பரவாயில்லை, அவ பேச வேண்டாம். நானே மறுபடியும் பேசறேன். இதோ பாரு பாரததேவி! நான் நிஜமாச் சொல்றேன். நீ எனக்குக் கொடுத்த கொடி கிடைச்சுடுத்து. இதை நீ நம்பியாகணும். நம்ப மாட்டேன்னாவது ஒரு வார்த்தை சொல்லு. என் பயணத்தை ரத்து செய்து விட்டு வந்து, அந்தக் கொடியைக் காட்டிட்டு அப்புறம் போறேன். அதையாவது செய்யட்டுமா? சொல்லு பாரததேவி.'' என்று சத்தம் போட்டுப் பேசினேன்.

''வேண்டாம் மாமா! மாமா, நான் உங்களை நம்பறேன். இத்தனை நாள் நான் பேசாமே இருந்தது தப்புத் தான். அதுவும் வெளிநாடு போகிறப்போ நான் இப்படி நடந்து கொண்டது ரொம்பத் தப்பு. என்னை மன்னிச்சுடுங்க மாமா. என்னை மன்னிச்சுடுங்க. மாமா, நீங்க நல்ல படியா போயி திரும்பி வரணும்னு நான் கடவுளை தினம் வேண்டிக் கிட்டேயிருப்பேன்.''

''அம்மா! குழந்தை! நீ என் கூடப் பேசினியே அதுவே போதும்.''

''மாமா! போனை வெச்சுடாதீங்க.. உங்ககிட்டே பேசணும், பேசணும்னு துடிச்சுக்கிட்டே நான் பேசாமேயிருந்திட்டேன் மாமா. இப்போ பேசத் துடிக்கிறேன் மாமா.''

''அப்படியாம்மா. எனக்குத் தெரியும்.''

''மாமா! வெளிநாட்டிலே நீங்க போறயிடத்திலே எல்லாம் நம்ம தேசியக் கொடியைக் காட்டி, இது எங்க நாட்டுக் கொடி, எங்க நாட்டுக் கொடின்னு பெருமையாச் சொல்லுங்க. நான் போட்ட கொடின்னு கூடச் சொல்ல வேண்டாம். இந்திய நாட்டின் மூவர்ணக் கொடின்னு மட்டும் சொல்லுங்க மாமா. அது போதும். செய்வீங்களா மாமா?''

''கட்டாயம் சொல்லுவேன். அதை விட வேறே எனக்கு என்ன வேலையிருக்கு? அம்மாடி,நீ என்கிட்டே பேசினியே, அது போதும்! நேரமாச்சு. போனை வெச்சுடட்டுமா?''

''ஒரு வார்த்தை மாமா. நீங்க திரும்பி வரும் போது நான் உங்களை வரவேற்க விமான நிலையத்திலே காத்துக்கிட்டு இருப்பேன்.''

''நான் உன்னைத் தலையிலே தூக்கி வெச்சுக்கிட்டு ஆட ஓடி வருவேன். போனை வெச்சிடட்டுமா?''

''இன்னும் ஒரு வார்த்தை மாமா''

''என்ன பாரததேவி''

''என்னை மன்னிச்சுடுங்க மாமா?''

''எதுக்கு, எதுக்கம்மா? என்ன போன் கட் ஆயிடுத்தே. பரவாயில்லை.''

போனைக் கீழே வைத்த பிறகு பாரத தேவி கூறுகிறாள்: ''வேறே ஒரு தேசியக் கொடியை நான்தான் மாமாவுக்குத் தெரியாமே அவர் கைப் பையிலே வெச்சேன்னு அவருக்கு எப்படித் தெரியப் போகிறது? மாமா நல்லபடியாத் திரும்பி வந்தவுடனே நானே சொல்லப் போறேன்.''

(முற்றும்)

பழமொழிப் புதிர்—விடை

புதிர் — 39: கைப்புண்ணுக்குக் கண்ணாடியா?

புதிர் — 40: குன்றின்மேலிட்டவிளக்குப் போல.

குப்புசாமியின் இல்லம் பெரியது. ஆனாலும், அவருடைய உள்ளம்சிறிய தாகவே இருந்தது. தானம், தர்மம் எதுவும் செய்ய மாட்டார். தமக்கு லாப மில்லாத எந்தக் காரியத்திலும் அவர் ஈடுபட மாட்டார். அவர் தன்னைப் போலவே தன் மகனையும் இரக்கமில் லாதவனாக வளர்த்து வந்தார். அவர் மகன் அப்புசாமி தன் நண்பர்களுக்கு எந்த உதவியும் செய்ய மாட்டான். தான்தான் உயர்ந்தவன் என்ற எண் ணத்துடனே வாழ்ந்து வந்தான்.

குப்புசாமி வீடு இருந்த அதே தெரு வில், சக்திவேலு என்ற ஏழை விவசாயி வாழ்ந்து வந்தார். அவருக்குத் தங்க் வேலு என்ற பன்னிரண்டு வயது மகன் இருந்தான். சக்திவேலு ஏழையாக இருந்தாலும், இரக்கம்

பெரிய இல்லம் சிறிய உள்ளம்

உள்ளவராகவும், தர்மச் சிந்தனை உள்ளவராகவும் இருந்து வந்தார். அவர் தம்மைப் போலவே தம் மகனை யும் கருணையுள்ளவனாகவும், உண்மை பேசுபவனாகவும் வளர்த்து வந்தார்.

ஒருநாள், இரவு நேரம். அந்த ஊரில் பலத்த மழை பெய்து கொண் டிருந்தது.

அந்தத் தெரு வழியாக நடந்து போய்க் கொண்டிருந்த சன்னியாசி ஒருவர் குப்புசாமியின் வீட்டுத் திண் ணையில் உட்கார்ந்தார். வெளியில் வந்த குப்புசாமி அந்தச் சன்னியாசி யைப் பார்த்ததும் சினத்துடன் முறைத் தார்.

"ஐயா, நான் ஒரு வழிப்போக்கன். இந்த மழையில் என்னால் மேற் கொண்டு நடக்க முடியவில்லை. இன் றிரவு மட்டும் இந்தத் திண்ணையில் தங்க அனுமதியுங்கள். விடிந்ததும் சென்று விடுகிறேன்..." என்றார் சன்னியாசி.

"யோவ்! வழிப்போக்கர் எல்லாம் தங்குவதற்கு இது ஒன்றும் சத்திர மில்லை. முதலில் இடத்தைக் காலி பண்ணு!" என்று கத்தினார் குப்பு சாமி.

தன் தந்தையின் சத்தத்தைக் கேட்டு வீட்டுக்குள்ளிருந்து வெளியில் வந்த அப்புசாமியும் சன்னியாசியை விரட்டி னான்.

"போய்யா போ. எங்காவது சத்தி ரத்தில் போய்ப் படு..."

தந்தையும், மகனும் மாறி மாறித் துரத்தினதால், வேறு வழியில்லாமல் சன்னியாசி மழையில் நனைந்து கொண்டே நடந்தார்.


மழை மேலும் மேலும் வலுவ டைந்து கொண்டிருந்தது.

சன்னியாசியால் மேற்கொண்டு நடக்க முடியவில்லை. சற்றுத் தூரத்தி லிருந்த ஒரு குடிசையின் ஓரத்தில் ஒதுங் கினார்.

அந்தக் குடிசை சக்திவேலுவினுடை யது.

குடிசை வாசலில் சன்னியாசி ஒரு வர் நிற்பதைக் கண்ட சக்திவேலு, "ஐயா, உள்ளார வந்து

இ.ஜே.தீன்



உட்காருங்கள். மழை விட்டதும் போகலாம்'' என்று அன்புடன் அழைத்தார்.

தங்கவேலு ஓடோடிச் சென்று ஒரு துண்டை எடுத்து வந்து அவருடைய உடம்பைத் துடைக்கச் சொன்னான். பிறகு, பாயை விரித்து சன்னியாசி அமர்வதற்கு வசதி செய்து கொடுத்தான்.

''ஐயா, தங்களைத் தங்க வைப்பதற்கு இந்த ஏழையின் குடிசையில் போதிய வசதியில்லாமல் இருக்கிறதே'' என்று வருத்தப்பட்டார் சக்திவேலு.

''குடிசை சிறியதாக இருந்தால் என்னப்பா, உங்கள் மனசு மிகவும் விசாலமாக இருக்கிறதே! அதுதான் முக்கியம். நல்ல மனமுள்ள உனக்குக் கடவுள் நல்ல வாழ்க்கையைக் கொடுப்பார்...'' என்ற சன்னியாசி, அன்றிரவு, அந்தக் குடிசையில்தங்கி உணவருந்தினார். பிறகு நிம்மதியாகத் தூங்கி விடிந்ததும் நன்றி கூறி விடை பெற்றுச் சென்றார்.

காலம் உருண்டோடியது.

சில வருடங்களுக்குப் பிறகு, சன்னியாசி அந்த ஊர் வழியாக வந்தபோது, சக்திவேலுவின் குடிசையைத் தேடிச் சென்றார்.

சன்னியாசி அந்தக் குடிசையின் ஓரமாக ஒதுங்கியதும், உள்ளேயிருந்து ஒரு முரட்டுக் குரல் பாய்ந்து வந்தது.


''யாரடா அவன் குடிசை வாசலில்?'' என்று கேட்டுக் கொண்டே வெளியில் வந்தான், ஓர் இளைஞன்.

சன்னியாசிக்குத் தூக்கி வாரிப் போட்டது. 'கடவுளே! இது என்ன சோதனை! முன்பு மிகவும் பணிவுள்ள பையனாக இருந்த சக்திவேலுவா இப்படி மாறிப் போய்விட்டான்!' என்று மனம் நொந்தவாறு சன்னியாசி வீதியில் இறங்கி நடந்தார்.

சற்றுத் தூரத்தில் புதிதாகக் கட்டப்பட்டிருந்த ஒரு வீட்டுத் திண்ணையில் போய் அந்தச் சன்னியாசி அமர்ந்தார்.

திண்ணையில் யாரோ உட்கார்ந்திருப்பது தெரிந்ததும், ஓர் இளைஞன் கதவைத் திறந்து கொண்டு வெளியில் வந்தான்.

சன்னியாசியைக் கண்டதும்



உள்ளே வந்து அமரும்படி அழைத்தான். சன்னியாசி மறுத்தும் அவன் விடுவதாக இல்லை.

அவன் மிகவும் வற்புறுத்தியதால், சன்னியாசி உள்ளே வந்து உட்கார்ந்தார். அந்த இளைஞன் அவருக்கு மோர் கொண்டு வந்து கொடுத்தான்.

சன்னியாசி அவனை இமைக்காமல் பார்த்தார்.

"தம்பீ, உன் பெயர் என்னப்பா?"

"தங்கவேலு."

"உன் அப்பா பெயர்?"

"சக்திவேலு."

சன்னியாசி மிகவும் ஆச்சரியப்பட்டுப் போனார்.

"தம்பி, நீங்கள் குடிசையில் வாழ்ந்தீர்கள் அல்லவா?" என்றார்.

"ஆமாம் ஐயா, முன்பு நாங்கள் வசித்த குடிசையில்தான், தற்போது அப்புசாமியின் குடும்பம் இருந்து வருகிறது!" என்ற தங்கவேலு, தன் தந்தை கடினமாக உழைத்து, மெல்ல மெல்லப் பொருள் சேர்த்து இந்தப் புதிய வீட்டைக் கட்டியது பற்றியும், முன்பு வசதியோடு வாழ்ந்த குப்புசாமி பலவகையிலும் நஷ்டப்பட்டு அவர் வாழ்ந்த பெரிய வீட்டை விற்று விட்டது பற்றியும் வீடு இல்லாமல் துன்பப்பட்ட குப்புசாமியின் குடும்பத்தினருக்காக, இவர்கள் முன்பு வசித்த குடிசையைக் கொடுத்திருப்பது பற்றியும் விவரமாக எடுத்துரைத்தான்.

அவன் சொன்னதைக் கேட்டதும், சற்று முன்பு குடிசைக்குள் இருந்து தம்மை விரட்டிய இளைஞன் குப்புசாமியின் மகன் அப்புசாமிதான் என்பதைச் சன்னியாசி புரிந்து கொண்டார்.

தங்கவேலுவின் நிலைமாறாத குணத்தைக் கண்டு சன்னியாசி பூரித்துப் போனார்!

எதிலே வந்தது?


"டேய் மணி, நீ அனுப்பிய கதை நேற்று எதிலேயோ வந்தது என்று சொன்னாயே. எதிலேடா வந்தது?"

"புக் போஸ்டிலே திரும்பி வந்தது"



ஆண்டவன் அனுப்பினர்

அ. சுப்பையன்



முத்து, பள்ளியிலிருந்து தன் அம்மாவின் நினைவாகவே, வீடு திரும்பிக் கொண்டிருந்தான்! உடம்புக்குச் சௌகரியமில்லையென்று அம்மா படுத்திருந்தாள். இப்பொழுது எப்படி இருக்கிறார்களோ? போனதும் டாக்டரிடம் அழைத்துச் சென்று காட்ட வேண்டும்! பணத்திற்கு எங்கே போவது?

அம்மாவின் நினைவாகவே, சாலையின் இடது பக்கமாகவே, வந்துகொண்டிருந்தபொழுது, ஓர் ஓரத்தில் தோல் பை ஒன்று கிடந்தது! சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, ஆவலுடன் அதை எடுத்துப் பிரித்தான்! என்ன ஆச்சரியம்! அவ்வளவும் கரன்சி நோட்டுக்கள்!

பையின் முகவரிப் பகுதியில் இருந்த முகவரியைப் பார்த்ததும் ஆச்சரியப் பட்டுப் போனான்! ஆம்! அது சில தினங்களுக்கு முன்பு, தான் பள்ளியின் முதல் மாணாக்கன் என்பதற்காகப் பரிசு கொடுத்துப் பாராட்டிய பிரபல தொழிலதிபரின் பையல்லவா!

எந்தநேரத்தில், எந்தஉதவிவேண்டுமானாலும் தயங்காமல் வந்து கேள் என்று சொன்ன பரோபகாரி அல்லவா? நன்றி மறத்தல் நன்றன்று! தன்னை அறியாமலேயே அவன் கால்கள், அவர் பங்களாவை நோக்கி நகர்ந்தன!

தன் காணாமற் போன பணப் பையைக் காணவும் ஆனந்தப்பட்டார்! ஆச்சரியப்பட்டார்! இந்தக் காலத்தில் இப்படியும் ஒரு பையனா?

தட்டிக்கொடுத்து, அவனுக்குவேண்டிய பணத்தை எடுத்துக் கொள்ளுமாறு பையைத் திறந்து காட்டினார்! கைமாறு கருதிச் செய்யும் உதவி, உதவியே அல்ல என்று எதுவும் எடுத்துக்கொள்ள மறுத்து விட்டான்!

அந்நேரம், பக்கத்துத் தெருப் பையன் ஒருவன் ஓடிவந்து, ''முத்து, உன் அம்மாவுக்கு உடம்புக்கு ரொம்பவும் முடியலியாம்! அவசரமாக வரச் சொன்னார்கள்!'' என்று சொல்லிவிட்டு ஓடிவிட்டான்!

''சரி தம்பி! சீக்கிரம் போய் உன் அம்மாவைக் கவனி! போ! இந்தா, வைத்தியச் செலவுக்கு இதை வைத்துக் கொள்!'' என்று நூறு ரூபாய் நோட்டை நீட்டியதைக் கூட அவன் பார்க்கவில்லை. ஒரே ஓட்டமாக ஓடினான்.

அங்கே எடுத்த ஓட்டம் வீட்டில் வந்துதான் நின்றான்! அம்மாவின் நிலை கண்டு அழுதான்! அவசரமாக டாக்டரிடம் அழைத்துச் சென்றால்தான் நல்லது! கையில் ஒரு காசும் இல்லாத நிலையில் அவன் என்ன செய்வான், பாவம்!

அனாதரட்சகனாய், அந்நேரம் அவன் வீட்டு வாசலில் கார் ஒன்று வந்து நின்றது! எட்டிப் பார்த்தான். பிரபல தொழிலதிபரின் கார்தான் அது!

''தம்பி! உன் அம்மாவைக் கைத்தாங்கலாக நம்ம வண்டியில் ஏற்றுவோம்! சீக்கிரம் டாக்டரிடம் போவோம்!''

அவன் கண்களை அவனால் நம்ப முடியவில்லை. ஆண்டவனாய்ப் பார்த்து அனுப்பி வைத்துள்ளான் எனக் கண்களில் கண்ணீர் மல்க, அவரைக் கையெடுத்துக் கும்பிட்டுவிட்டு, அம்மாவை அழைத்துவர வீட்டிற்குள் நுழைந்தான்!

பிரிட்டிஷ் கதை



அன்பு செய்த அற்புதம்!

இங்கிலாந்து தேசத்திலே ஒரு சின்னக் கிராமம். அதைச் சுற்றிலும் அழகான பசுமையான வயல்கள்.

அந்த வயல்களுக்குத் தண்ணீர் தருவதற்காக அதற்கப்பால் ஒரு பெரிய ஏரி. அந்த ஏரி வெகு தூரத்திற்கு வளைந்து வளைந்து கிடந்தது.

ஏரியின் கரையோரம் முழுவதும் நீர்க் கோரைகளும் நாணல் புதர்களும் மண்டிக் கிடந்தன.

ஏரிக்குள் பெரிய பெரிய லில்லி இலைகள் படர்ந்து கிடந்தன.

அந்த இலைகளில் ஒன்றின் மீது, ஒருநாள் காலைவேளையில், 'ஜம்' மென்று உட்கார்ந்து வெயில் காய்ந்து கொண்டிருந்தது ஒரு தவளை. கால் மீது காலைப் போட்டுக் கொண்டு ரொம்பப் பெரிய மனிதன் மாதிரி அது உட்கார்ந்து கொண்டிருந்தது.

அதைச் சுற்றிலும் லில்லிப் பூக்கள் பூத்துக் குலுங்கின. தண்ணீருக்குள் ஏராளமான மீன்களும் தவளைகளும், மற்ற நீர்ப் பிராணிகளும் சஞ்சரித்துக் கொண்டிருந்தன.

திடீரென்று ஏதோ சலசலப்புச் சத்தம் கேட்டுத் திடுக்கிட்ட தவளை திரும்பிப் பார்த்தது.

கரையோரத்தில் தலை நரைத்த ஒரு கிழவி கோரைப் பூக்களைப் பறித்துக் கொண்டு நின்றிருந்தாள்.

அவள் தலையில் முக்காடு சரிந்திருந்தது. அவள் முகம் செத்தவர்கள் முகம் போல விகாரமாக இருந்தது. அதைப் பார்த்ததுமே ஓர் அச்சம் தோன்றியது. அவள் மூக்கு முன்னால் நீண்டு ஏதோ ஒரு பறவையின் மூக்குப்

தமிழில்:
சந்திரநாத்

போல வளைந்து இருந்தது. அவள் தோளில் பூக்களைப் பறித்துப் போட்டுக் கொள்ள ஒரு கூடை தொங்கிற்று.

பார்த்த உடனேயே அந்தக் கிழவி யார் என்பது தவளைக்குத் தெரிந்து விட்டது.

அவள் அந்தக் கிராமத்தில் வசிக்கும் மந்திரக் கிழவி! பேய், பிசாசுகளுக்கு இரவிலே பூஜை செய்கிறவள். வின்னி என்பது அவள் பெயர். கோரைப் பூக்களைக் கொண்டு அவள் மந்திர மை தயாரிப்பவள். ஊரில் யாருக்கும் அவளைக் கண்டால் பிடிக்காது. தவளைக்கும் அவளைப் பிடிக்கவில்லை.

''இந்த ஏரி என் சாம்ராஜ்யம். இங்கே இவளுக்கு என்ன வேலை?'' என்று நினைத்தது, தவளை. ஆத்திரமாக எழுந்து இலைக்கு இலை தாவிக் குதித்துக் கொண்டே போய்க் கிழவியின் முன் உள்ள இலையில் நின்றது.

''துஷ்டக் கிழவியே, என் ஏரியில் உனக்கு என்ன வேலை?'' என்று, அதட்டியது.

கிழவி சாவகாசமாகத் திரும்பிப் பார்த்தாள். அவள் கண்கள் இரண்டும், இரண்டு நெருப்புத் துண்டங்கள் போல் சுடர்விட்டன.

''ஓ, நீயா...?'' என்றாள் அவள் எகத்தாளமாக. ''மண்டைக்கர்வமிக்க தவளை பிரடெரிக் என்கிறார்களே, அது நீதானே?'' — என்று கேட்டாள். ''இந்த ஏரியிலே இருக்கிற எல்லாப் பிராணிகளையும்விட அதிபுத்திசாலி என்கிற கர்வம்தானே உனக்கு?'' என்று கேட்டாள்.

''ஏன், இருக்கக் கூடாதா?'' என்று கேட்டது தவளை. ''என் அளவு அறிவாளி யார் இந்த ஏரியில்?'' என்றது.

வின்னிக் கிழவி தலைநிமிர்ந்து நின்று தவளையைப் பார்த்தாள். அவளும் இந்த மண்டைக் கர்வத் தவளையைப் பார்க்க ரொம்ப நாட்களாகவே ஆசையாக இருந்தாள். ஊரில் எல்லோருக்குமே இந்தத் தவளையைத் தெரியும். 'தலைகுப்புற விழப் போகிறது, பார், ஒருநாள் — அதனால் தான் இப்படித் தலைக்கர்வம் பிடித்து அலைகிறது' என்று மக்கள் பேசுவது வின்னிக்கு இப்போது நினைவுக்கு வந்தது.

'ஓ, உனக்கு அழிவு காலம் வந்துவிட்டது. அதனால்தான் என்னிடம் வந்து இன்று மாட்டிக் கொண்டாய்' என்றுநினைத்துச் சிரித்தாள் அவள்.

''ஏன் சிரிக்கிறாய்?'' என்று அதட்டியது தவளை.

''இந்த ஏரிக்குள் கால் எடுத்து வைக்கக் கூட என் அனுமதி வேண்டும். போ! போய்விடு உடனே. உன் மூஞ்சியைக் காணவே எனக்குப் பிடிக்கவில்லை'' என்று கத்தியது தவளை.

''உன் மூஞ்சி ரொம்ப அழகு என்று உனக்கு நினைப்போ?'' — என்று கோபமாகக் கேட்டாள் கிழவி.

''சந்தேகமென்ன? என்னைவிட சுந்தர ரூபன் யார்?'' என்று நிமிர்ந்து நாலாபுறமும் பார்த்தது தவளை.

''அந்தக் கர்வம்தான் உன் கண்ணை மறைத்துவிட்டது. இல்லாவிட்டால் உன் மீது உயிரையே வைத்திருக்கும் அழகி பரீதாவைக் கூடத் திரும்பிப் பார்க்காமல் இருப்பாயா?'' என்றாள் கிழவி.

பரீதா என்பது ஒருபெண் தவளை. அதுவும் அந்தப் பெரிய ஏரியில்தான் வசித்து வந்தது. அந்த ஏரியில் உள்ள அத்தனை பெண் தவளைகளிலும் பரீதாதான் பேரழகி.

''அடடா, மிகப் பெரிய அழகி!'' என்று எகத்தாளமாக நகைத்தது பிரடெரிக். ''இந்த ஏரியிலே இருக்கிற ஆயிரக்கணக்கான முட்டாள்களிலே அவளும் ஒருத்தி. வேறு என்ன?'' என்று அலட்சியமாகச் சிரித்தது.

''என் கண்ணுக்கு அவள் எவ்வளவு அசிங்கமாகத் தெரிகிறாள், தெரியுமா? — உன்னைப் போல'' என்றது.

''என்னைப் போலவா? அசிங்கமாகவா?'' என்று கத்தினாள் கிழவி. ''என்ன துணிச்சல் உனக்கு?''

''உலகிலேயே மகா அசிங்கமானவள் நீ ஒருத்திதான் — அதில் என்ன சந்தேகம்?'' என்றது பிரடெரிக்.



''என் வாழ்நாளில் உன்னைப் போல ஒருகோரமான முகத்தை நான் பார்த்ததே இல்லை.''

''ஹா!'' என்று ஒரு துள்ளுத் துள்ளினாள் கிழவி. ''என்னை அவமதித்து விட்டாய். என்னைச் சீண்டி விட்டாய், பார் அதன் பலனை'' — என்றாள்.

பாம்புகள் போல நெளியும் தன் விரல்களை ஆகாசத்தில் உயர்த்தி இரண்டுதடவைஆட்டினாள்.சொடுக்கினாள். 'அப்ரா — கா — டப்ரா!'' என்று ஏதோ மந்திரம் போட்டாள்.

''கர்வம் பிடித்த தவளையே, இப்போது உன்னைத் தண்ணீரில் பார்'' என்றாள்.

பிரடெரிக் இலையின் விளிம்புக்கு வந்து தண்ணீரில் தெரிந்த தன் உருவத்தைப் பார்த்தது. அப்போதுதான் தான் எவ்வளவு பெரிய பிசகு செய்து விட்டோம் என்பதை அது உணர்ந்தது.

''ஓ, கடவுளே!'' என்று அது கதறியது.

இளமையும் அழகும் நிறைந்த அதன் முகம் இருந்த இடத்தில் வழுக்கைத் தலையும், பெரிய காதுகளும் சப்பை வாயும் கொண்ட ஒரு கிழட்டு முகம் தென்பட்டது.

''ஐயோ, நானா இப்படி ஆகிவிட்டேன்!'' என்று சிறுகுழந்தை போலக் கதறியது பிரடெரிக்.

''நீ ஏதோ மந்திரம் போட்டு விட்டாய். என்னை மாற்றி விட்டாய். உன்னோட இரண்டு மடங்கு அசிங்கமாக என்னைச் செய்து விட்டாய்'' — என்று அழுதது.

''அது உனக்கு ஒரு முக்கியமான பாடத்தைக் கற்றுத் தரும்'' என்றாள் கிழவி வின்னி. பிறகு அவள் திரும்பிப் பாராமலே கிராமத்தை நோக்கிச் சென்று விட்டாள்.

மண்டைக் கர்வத் தவளை இப்போது சோகமாக உட்கார்ந்திருந்தது.

அதன் முகம் இப்படி அசிங்கமாக ஆனதும் ஏரியில் இருந்த மற்ற உயிரினங்களுக்கு அதனிடம் இருந்த பயம் விட்டுப் போய்விட்டது. முன்பு கிட்ட வரவே அஞ்சிய அவை எல்லாம்

இப்போது தைரியமாக அதன் அருகில் வந்து அதைப் பரிகாசமாகப் பார்த்து, 'களுக்' என்று சிரித்துவிட்டுப் போயின.

அவைகளை பிரடெரிக்கால் ஒன்றும் செய்ய முடியவில்லை. "நான் இனிமேல் அவர்களுடன் சிநேகமாக இருந்துதான் தீரவேண்டும்" என்று நினைத்தது அது.

ஆனால் அந்திகப் பிராணிகள், பிரடெரிக்,முன்பு தங்களைச் செய்த அலட்சியத்தை அவ்வளவு சீக்கிரம் மறந்து விட விரும்பவில்லை.

பிரடெரிக் எவ்வளவு முயன்றும் அவை அதனுடன் சகஜமாகப் பழக முன் வரவில்லை. "அது ஒதுக்கப் பட்டே இருக்கட்டும். அப்போதுதான் அதற்குப் புத்தி வரும்" என்று அவை நினைத்தன.

ஒருமீன் குஞ்சு, தைரியமாக அதன் எதிரிலேயே வந்து, "உன்னைப்போல அசிங்கம்பிடித்த ஆள் எங்களிடையே இருந்தாலே அவமானம். எங்கே யாவது போய்த் தொலையேன்" என்று கூடச் சொல்லிவிட்டது.

பிரடெரிக்குக்கு அழுகையே வந்து விட்டது. 'எவ்வளவு கேவலமாகப் போய்விட்டேன்" என்றுவருந்தியது.

தன்னந்தனியாக, தன் சொந்த, வில்லி இலை வீட்டில் உட்கார்ந்து துயரத்தோடு பொழுதைக் கழித்தது.

இப்போது அதற்கு,சிந்திக்க நிறைய அவகாசம் கிடைத்தது. தன் தவறுகளை உணர்ந்தது.

"ஐயோ, கொஞ்சம்கூட யாரிடமும் அன்பே காட்டாமல், எல்லோரிடமும் எத்தனை முரட்டுத்தனமாக இத்தனை நாள் இருந்து விட்டேன்! இப்போது என்னிடம் யாரும் அன்பு காட்ட மாட்டேன் என்கிறார்களே" என்று வருந்தியது அது. "தவறு என் மீது தான்," என்று தலையில் அடித்துக் கொண்டது. "எல்லோரும் என்னை ஒதுக்கி வைத்து விட்டார்களே! பேசக் கூட எனக்கு ஆள் இல்லையே— ஏதாவது ஒரு புழு, ஒரு பூச்சியாவது என்னிடம் வந்து பேசாதா?" என்று கதறியது.

வெகு நாட்களுக்குப் பிறகு, ஒரு நாள் அதன் பெரிய வில்லி இலை வீட்டின் அருகே, ஒரு சின்னக் குரல் கேட்டது.

தவளை ஆச்சரியமும், சந்தோஷமு மாக வெளியே வந்து பார்த்தது. "யார் பேசியது இங்கே?" — என்று கேட்டது.

இலைகளுக்கிடையில் இருந்து அந்த மெலிந்த குரல் நடுக்கத்துடன், "ஓ, தவளை அண்ணா — நீயா?" என்று கேட்டது. பிரடெரிக் கூர்ந்து பார்த்தது.

அது ஒரு குட்டி மீன். "ஓ, குட்டித் தம்பியா,— வா, வா" என்று துள்ளிக் குதித்தது பிரடெரிக்.

"வந்து உட்கார்ந்து, பேசி, மகிழ எனக்கு அவகாசம் இல்லை. நான் வழி தவறி வந்துவிட்டேன். என் வீடு எங்கே இருக்கிறது என்றே தெரிய வில்லை. என்னைக் காணாமல் என் அம்மா கவலைப்பட்டுக் கொண்டிருப் பாள்" என்றது குட்டி மீன்.

பிரடெரிக்குக்கு உற்சாகமே வந்து விட்டது, 'நம்முடைய உதவியும் யாரோ ஒருவருக்குத் தேவைப்படு கிறதே' என்று. 'என்னால் இந்தக் குட்டி மீனுக்கு உதவ முடியும்!' இந்த நினைப்பே அதற்குப்புத்துயிர் அளித்து விட்டது.

"கவலைப்படாதே, குட்டியப்பா' — என்றது பிரடெரிக். "எங்கே இருக் கிறது உன் வீடு?" என்று கேட்டது.

"வில்லி லேன் — நூற்று இருபத் தொன்றாம் நம்பர்" என்றது குட்டி மீன்.

"எனக்குத் தெரியும், அது எங்கே இருக்கிறது என்று. வா, பின்னால்" என்று ஒரு தாவு தண்ணீரில் தாவி, நீந்திக் கொண்டே முன்னால் போயிற்று பிரடெரிக். அதற்குக் குஷியே வந்துவிட்டது.

"என் அருமை மகனே, என் பின் னாலேயே வா. சீக்கிரத்தில் உன்னை உன் அம்மாவிடம் கொண்டு போய்ச் சேர்த்து விடுகிறேன். நீ வழக்கமாக வீடு திரும்புகிற நேரத்திற்குள்ளாகவே நாம் போய்ச் சேர்ந்து விடலாம். உன் அம்மா கவலைப்பட ஆரம்பிக்கும் முன்பே நாம் போய் அவள் முன் நின்று விடுவோம்" என்றது.

ஜோராக, தன் புதிய சிநேகிதனுக்கு நீந்தி வழிகாட்டிக் கொண்டு முன்னால் போயிற்று பிரடெரிக்.

இதுவே முன்பாக இருந்திருந்தால், ''அட, போ, உனக்கெல்லாம் வழிகாட்டத்தான் நான் வேலையில்லாமல் இங்கே உட்கார்ந்திருக்கிறேனோ?'' என்று எரிந்து விழுந்திருக்கும்.

பிரடெரிக்குக்கே தன் மனமாற்றம் ஆச்சர்யத்தை அளித்தது. 'ஓ, எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது! மற்றவர்களுக்கு உதவுவதில் கூட இத்தனை சந்தோஷம் இருக்கிறதா?— இத்தனை நாள் எனக்குத் தெரியாமல் போய்விட்டதே! என்று நினைத்தபடியே சின்ன மீனுக்கு வழிகாட்டிக்கொண்டு போயிற்று பிரடெரிக்.

அது பின்னால் வருகிறதா? என்று அடிக்கடி திரும்பிப் பார்த்துக் கொண்டே போயிற்று அது. அது கவலைப்படாதிருக்க, வழியில் இரண்டு தடவை குட்டிக்கரணம் போட்டு அதைச் சிரிக்க வைத்தது. ஒரு தடவை, மல்லாந்து நீந்திக் காட்டியது.

''இது நம்முடைய ஏரி. இதை விடப் பெரிய சொர்க்கம் ஏதும் கிடையாது. என்ன சொல்கிறாய், நீ?'' என்று கேட்டது, பிரடெரிக்.

'சின்ன மீன் சொல்லிற்று ''அன்பு என்கிற காற்று வீசுகிற இடம்தான் சொர்க்கம் என்று என் அம்மா சொல்வாள்.''

பாட்டியின் ஆசை

''எங்க பாட்டிக்கு ஒரு ரோபோட் வேணுமாம்...''

''எதுக்கு...?''

''கையாலே பாக்கு இடிக்கக் கஷ்டமா இருக்காம்...!''

— ஏ. ஆர். வீரராகவன்



''ஆமாம். அது உண்மைதான். இங்கும் அந்தக் காற்றை நாம் வீசச் செய்வோம்'' என்றது பிரடெரிக்.

''என் அம்மா சொல்வாள்'' என்று மீண்டும் ஆரம்பித்தது சின்ன மீன். ''காற்று இல்லாவிட்டால் கடல் எத்தனை பெரிதாக இருந்தாலும், கப்பலின் பாய்மரங்கள் சிறிதுகூட நகராதாம்.''

''ஆமாம், குழந்தாய். அதுதான் உண்மை''—பிரடெரிக்கின் கண்களில் நீரே துளிர்த்துவிட்டது. அது பின்னால் திரும்பி,''அதோ,நாம்புறப்பட்ட இடத்தில் இருந்ததே பெரிய லில்லி இலை, அதன் மீதும் இன்று வரை ஒரு பெரிய பாய்மரக் கப்பல் நகராமல் கிடந்தது. இன்றுதான் காற்றின் அருமையை உணர்ந்து அது லேசாக நகர ஆரம்பித்திருக்கிறது'' என்றது.

''நான் அங்கே எந்தப் பாய்மரக் கப்பலையும் பார்க்கவில்லையே, தவளை அண்ணா'' என்றது சின்ன மீன்.

''அதை நீ பார்க்க முடியாது'' என்றது பிரடெரிக்.

சின்ன மீனின் அம்மா தன் வீட்டு வாசலிலேயே கவலையுடன் காத்துக் கொண்டு நின்றிருந்தது.

''ஆ, மகனே, வந்தாயா?'' என்று ஓடிவந்து கட்டிக் கொண்டாள். ''எவ்வளவு பயந்து விட்டேன், தெரியுமா?'' என்றது. அதன் கண்களிலிருந்து நீர் ஆறாகப் பெருகி வழிந்தது.

இதை எல்லாம் மௌனமாகப் பின்னால் நின்று பார்த்துக் கொண்டிருந்தது பிரடெரிக்...

தாயும் மகனும் சேர்ந்த காட்சி அதன் மனத்தை உருக்கி விட்டது.

''வழி தவறிவிட்டது, அம்மா. திக்கு திசை தெரியவில்லை. ரொம்பத் திண்டாடிப் போய்விட்டேன். கடைசியில், அதோ அந்தப் பெரிய அண்ணா தான் என்னைக் காப்பாற்றி, இங்கே கொண்டு வந்து விட்டார்'' என்று பிரடெரிக்கைச் சுட்டிக் காட்டியது சின்ன மீன்.

அப்போதுதான் பிரடெரிக் அங்கே இருப்பதை அம்மா மீன் கவனித்தது. 'அட, இது பிரடெரிக் இல்



லையா?'' என்று கூவியது அது. தன் கண்களையே அதனால் நம்ப முடியவில்லை. 'இந்த மண்டைக் கர்வத் தவளையா இப்படி ஓர் உதவி செய்தது? என்ன ஆச்சர்யம்!' என்று அது நினைத்தது.

''எஸ், மேடம்'' என்று அடக்கமாக, பணிவாக அம்மா மீனுக்கு வணக்கம் செலுத்திற்று பிரடெரிக்.

''ஓ, இது பழைய பிரடெரிக் இல்லை. ரொம்ப மாறிவிட்டது'' என்று தெரிந்து கொண்டது அம்மா மீன்.

''வா, உள்ளே பிரடெரிக்! நீ இன்று எங்களுக்குப் பெரிய உதவி செய்திருக்கிறாய். என் மகனைக் காப்பாற்றியிருக்கிறாய். உள்ளே வந்து ஒரு கப் தேநீர் அருந்திவிட்டுப் போ'' என்று அழைத்தது.

''தாங்க் யூ மேடம்'' என்று தயங்கி அங்கேயே நின்றது பிரடெரிக்.

''சும்மா உள்ளே வா பிரடெரிக்.''

இவ்வளவு நட்புரிமையுடன் பிரடெரிக்கை இதுவரை யாருமே அழைத்ததில்லை. அந்த அன்பில் உள்ள அத்தனை சந்தோஷத்தையும் நன்றாக அனுபவித்தது அது.

''வா, பிரடெரிக்.''


பிரடெரிக், சின்ன மீன் வழிகாட்ட வீட்டினுள் சென்றது. வீடு மிக அழகாக இருந்தது. மேஜை மீது தேநீர் கோப்பைகளும், ஜாடிகளும் தயாராக இருந்தன.

மூவரும் மூன்று நாற்காலிகளில் உட்கார்ந்ததும் அம்மா சில பிஸ்கட்டுகளைப் பிரித்து முன்னால் வைத்தது. ''சாப்பிடு, தம்பி'' என்று உபசரித்தது. தேநீரை மணக்க மணக்கக் கோப்பைகளில் ஊற்றியது.

பிரடெரிக் அதுபோன்ற தேநீரை அதுவரை அருந்தியதே இல்லை. அதை இப்படி யாரும் உபசரித்ததும், இவ்வளவு மரியாதை காட்டியதும் இல்லை! இவை எல்லாம் எனக்கு எப்படிக் கிடைத்தன? நான் இந்தச் சின்ன மீனிடம் அன்பாக நடந்து கொண்டதால்தானே! அதற்கு உதவி செய்ததால்தானே'' என்று நினைத்தது.

''வருகிறேன் மேடம், — வருகிறேன் சின்னப் பையா'' என்று விடைபெற்றுக் கிளம்பும் போது பிரடெரிக் அடியோடு மாறிவிட்டிருந்தது.

'இதுவரை நான் என்னைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தேன். எனக்கே உதவிக் கொண்டிருந்தேன்; அதனால்தான் எனக்கு சந்தோஷம் இல்லை. இன்றுதான் முதல்



தடவையாக அடுத்தவருக்கு உதவினேன். அது எனக்கு எவ்வளவு ஆனந்தத்தை அளித்துவிட்டது! எனக்கு நானே உதவிக் கொண்டிருந்த போது அந்த ஆனந்தம் ஏன் ஏற்படவில்லை?' என்று தன்னையே கேட்டுக் கொண்டு அது வீடு நோக்கிச் சென்றது.

வீட்டை நெருங்கும் போது அது ஒரு முடிவுக்கு வந்துவிட்டது. "இந்த ஆனந்தம், எனக்கு தினம் தினம் கிடைக்க வேண்டும். எல்லா இடங்களிலும் கிடைக்க வேண்டும். அப்போது என் முகத்தின் விகாரம் கூட யார் கண்ணிலும் படாது போய் விடும். ஹா! நான் கண்டுபிடித்து விட்டேன், வின்னி கிழவியின் மந்திரம் பொய்த்துப் போகிற வழியை" என்று துள்ளிக் குதித்தது பிரடெரிக்.

"இனி யார் எந்த உதவி கேட்டாலும் செய்யத் தயங்க மாட்டேன். எவ்வளவு பேருக்கு முடியுமோ, அத்தனை பேருக்கும் உதவுவேன். அதை அன்புடனும் துணிவுடனும் செய்வேன்."

சீக்கிரத்திலேயே அந்த ஏரியில் இருந்த நீர் வாழ் பிராணிகள் எல்லாம் பிரடெரிக் வெகுவாக மாறிவிட்டதை உணர்ந்தன. பழைய மண்டைக் கர்வ பிரடெரிக் இல்லை அது. இப்போது பணிவு நிரம்பிய, பிறருக்கு உதவக் காத்திருக்கும் ஊழியன்!

"சின்ன மீனுக்கு வழிகாட்டி உதவி விட்டு வந்த மறுநாளே அந்த மாறுதல் பனிச்சென்று ஒரு நிகழ்ச்சி மூலம் வெளிப்பட்டது.

பிரடெரிக் வாழ்ந்த அந்தப் பெரிய லில்லி இலை மீது குளிரால் நடுங்கிக் கொண்டு ஒரு வாத்து உட்கார்ந்திருப்பதை எல்லா நீர்ப் பிராணிகளும் பார்த்தன.

அந்த லில்லி இலைதான் பிரடெரிக்கின் அரண்மனை. அதன் அருகில் கூட எதையும் அது அனுமதிப்பது வழக்கமே இல்லை. அப்பேர்ப்பட்ட இடத்தில் ஒரு நோயுற்ற வாத்தா? பிராணிகளால் நம்பவே முடியவில்லை.

அதுமட்டுமல்ல; குளிரால் நடுங்கிக் கொண்டு வந்த வாத்துக்கு, தன் இலை மீது இடம் அளித்துவிட்டு பிரடெரிக் தான் தண்ணீரில் நின்றிருந்தது.

"கவலைப்படாதே, வாத்து மாமா.

இதோ, சூரிய கதிர்கள் வருகின்றன. உன் குளிரை விரட்டி விடும் அவை. நீ பழையபடி ஆகிவிடுவாய் உன் உடம்பிலே பழைய சக்தி வந்துவிடும். மீண்டும் நீ நீந்த ஆரம்பித்து விடுவாய். பாரேன்''—என்றது பிரடெரிக்.

''பிரடெரிக், ரொம்பக் குளிருகிறதே எனக்கு'' என்றது வாத்து. ''நான் இந்த அதிகாலையில் வீட்டை விட்டு வெளியே வந்தே இருக்கக் கூடாது'' என்றது.

''இந்தா, இதை வைத்துத் துடைத்துக் கொள்'' என்று ஒரு கோரைப் பூவைப் பறித்து வந்து நீட்டியது பிரடெரிக்.

இதன்பின் அக்கம்பக்கத்து நீர்ப் பிராணிகள் எல்லாம் வந்து கூடிவிட்டன. 'அட, நம்ம மண்டைக் கர்வ பிரடெரிக்கா இப்படிச் செய்கிறது!'' என்று கண்களைக் கசக்கிக் கொண்டு பார்த்தன.

சீக்கிரத்திலேயே சூரியன் முழு மூச்சுடன் மேலே எழுந்து வந்துவிட்டது. அதன் சூடான கதிர்கள் வாத்தின் குளிரை விரட்டி விட்டன.

''ரொம்ப நன்றி பிரடெரிக். நீ இடம்தந்து உதவியிராவிட்டால், நான் தண்ணீரில் மூழ்கி இறந்தே போயிருப்பேன். உனக்கு ரொம்பக் கருணை மனசு'' என்று கூறிவிட்டுக் கிளம்பிற்று வாத்து.

''போய் வா, வாத்து மாமா,'' என்று மனநிறைவுடன் அதற்கு விடை கொடுத்தது பிரடெரிக்.

பிரடெரிக் மேலும்மேலும் தேவைப் பட்டவர்களுக்குத் தன்னால் ஆன உதவிகளைச் செய்து கொண்டே போயிற்று.

பக்கத்து மரத்தில் ஒரு பெண் ஆந்தை இருந்தது. அதற்கு குஞ்சு குஞ்சாக ஏழெட்டுக் குழந்தைகள். இரவுகளில், அவை தூங்காமல், அம்மாவைப் பாடாய்ப் படுத்தி வந்தன.

ஒருநாள் ஓர் இனிய கானம் மரத்தடியில் கேட்டது. அதைக் கேட்டுக் கொண்டே சமர்த்தாகக் குழந்தைகள் தூங்கிப் போயின. ''பிரடெரிக்! நீயா வந்து பாடி என் குழந்தைகளைத் தூங்க வைத்தாய்?'' என்றது அம்மா ஆந்தை.



தெரிய ஆரம்பித்தது!

''தண்ணீருக்காக ஆழமாக கிணறு வெட்டினீங்களே... கிடைத்ததா தண்ணீர்...?''

''கொஞ்சம் கொஞ்சமாக அமெரிக்கா தெரிய ஆரம்பித்தது... மூடிட்டோம்...''

— ஏ. ஆர். வீரராகவன்.

''நீயும் கொஞ்சம் தூங்கு அம்மா — எத்தனை நாளாகிவிட்டது தூங்கி'' என்றது பிரடெரிக்.

''நன்றி, ரொம்ப நன்றி'' என்றது ஆந்தையம்மா.

''இனி தினமும் நீ நிம்மதியாகத் தூங்கலாம். உன் குழந்தைகளைத் தாலாட்டுப் பாடித் தூங்க வைக்கத் தான் நான் வந்து விடுவேனே'' என்றது என்றது பிரடெரிக்.

''நீ எவ்வளவு நல்லவன்! உனக்கு எப்படி நன்றி சொல்வது என்றே எனக்குத் தெரியவில்லை. இதோ இந்த அத்திப் பழத்தை எடுத்துக் கொண்டு போ. அப்போதுதான் மகிழ்ச்சியாக இருக்கும்'' என்றது ஆந்தையம்மா.

''தாங்க்ஸ் மேடம். நான் கூலிக்குப் பாட வரவில்லை. என் சந்தோஷத்தைத் திரும்ப எடுத்துக் கொள்ளப் பார்க்கிறீர்களே! பிரதிபலனை எதிர் பாராத உதவிதான் சந்தோஷம்'' என்றது பிரடெரிக்.

''ஆமாம், மகனே, உனக்கு இனி தினமும் மகிழ்ச்சி கிடைக்கும்'' என்றது ஆந்தையம்மா.

திருப்தியுடன் தன் வீடு திரும்பியது பிரடெரிக்.

ஒரு நாள் காலையில், பிரடெரிக் தன் வீட்டு முன்னறையில் அமர்ந்து சுகமாகத் தேநீர் பருகிக் கொண்டிருந்த போது, ''உதவி, உதவி. ஐயா, யாராவது எனக்கு உதவ வாருங்களேன்'' என்று யாரோ கூவும் சத்தம்

கேட்டது. பிரடெரிக் தேநீர்க் கோப்பையை அப்படியே வைத்துவிட்டு, இரண்டே தாவலில் வாசலுக்கு வந்து பார்த்தது.

அடுத்த கணம் அதன் ரத்தமே உறைந்து விடும் போலாகி விட்டது! ஏரிக் கரையில் ஒரே கூட்டமாக இருந்தது. ஏரியில் வாழ்ந்த அத்தனை தவளைக் குடும்பங்களும் அங்கே கூடி கூச்சலிட்டுக் கொண்டிருந்தன.

அவற்றின் நடுவில், தவளைக் கிராமத்தின் பேரழகி பரீதாவை ஒரு முரட்டு எலி பற்றி இழுத்துக்கொண்டு போய்க் கொண்டிருந்தது.

"ஐயோ, என்னைக் காப்பாற்றுங்களேன்," என்று கத்திக் கொண்டே எலியுடன் போராடிக் கொண்டிருந்தது பரீதா.

அந்த எலியை பிரடெரிக்குக்குத் தெரியும். ஏரிக்கரையில் ஒரு பொந்தில் வசித்து வந்த அது அந்தக் கிராமத்திற்கே பெரிய தலைவலியாக இருந்தது. ஏரியிலிருந்து தப்பித் தவறி வெளியே வரும் தவளைகளை அது பிடித்துக் கொண்டு போய் விடுவது வழக்கம். ஏரியில் உள்ள தவளைகளுக்கெல்லாம் அதை நினைத்தாலே நடுக்கம்.

'நாசமாகப் போகிற இந்தத் துஷ்டன் சாக மாட்டானா? நிம்மதியாக வாழ மாட்டோமா?' என்று அவை பிரார்த்திக்காத நாளே கிடையாது. ஆனால், எதற்கும் அந்த எலியுடன் மோதத் தைரியமில்லை.

இப்போது அதே கிராமத்தின் பேரழகிக்கே அந்த எலியால் ஆபத்து வந்துவிட்டது! பரீதா எலியிடம் மாட்டிக் கொண்டு விட்டது என்று தெரிந்ததும் அத்தனையும் வந்து கூடிவிட்டன!

"ஐயோ, நம் கிராமத்தின் செல்லக் கிளியைத் துஷ்டன் பிடித்துக் கொண்டு போகிறானே! கேட்பார் இல்லையா, இந்த அக்கிரமத்தை?" என்று பெண் தவளைகள் எல்லாம் கத்தின.

பிரடெரிக் இதை எல்லாம் தன் இலை வீட்டு வாசலில் நின்று அரைக் கணத்தில் பார்த்துத் தெரிந்து கொண்டு விட்டது. ஆனால், மாட்டிக் கொண்டிருப்பது பரீதா என்பதை முதலில் அது கவனிக்கவில்லை. யாரோ எலியிடம் மாட்டிக் கொண்டு விட்டார்கள்; உதவி கேட்கிறார்கள். பிரடெரிக் உதவிக்குப் போக வேண்டும்; அது அதன் கடமை.

ஆனால், பிரடெரிக்கால் எப்படி ஓர் எலியுடன் போராடி ஜெயிக்க முடியும்? அதுவும் ஒரு தவளைதானே!

என்ன செய்யலாம் என்று யோசித்துக்கொண்டிருந்தபோது, "ஐயா, என் மகள் பரீதாவை இழுத்துக் கொண்டு போகிறானே, இந்தத் துஷ்டன்! அவளைக் காப்பாற்ற யாருமே இல்லையா?" என்று பரீதாவின் அம்மா கதறுவது கேட்டது. 'என்ன, பரீதாவா மாட்டிக் கொண்டு இருப்பது?' என்று தூக்கி வாரிப் போட்டது பிரடெரிக்குக்கு.

மந்திரக் கிழவி வின்னி, அன்று, "உன்னை நேசிக்கும் அழகி பரீதாவைக் கூட நீ அலட்சியமாக நினைக்கிறாய்" என்று சொன்னது அதன் காதில் ஒலித்தது.

"அட, என் பரீதாவா இப்போது ஆபத்தில் சிக்கிக் கொண்டிருக்கிறாள்! அவளுக்கு நான் உதவியே தீர வேண்டும்" என்று ஒரே தாவலில் அது கரைக்குத் தாவியது.

வெகு நாட்களுக்கு முன்பு கிராமத்துப் பெண் ஒருத்தியின் தொப்பியைக் காற்று அடித்துக் கொண்டு வந்து பிரடெரிக்கின் இலை வீட்டினருகில் இருந்த புதருக்குள் போட்டு விட்டது.

எது பெரிது?


மகன்: அப்பா ஒன்று பெரிதா பத்தொன்பது பெரிதா?

அப்பா: ஏன்? உனக்கு அப்படி ஒரு சந்தேகம்? பத்தொன்பதுதான் பெரியது.

மகன்: நான் கிளாஸில் பத்தொன்பதாவது ராங்க் வாங்கி இருக்கிறேன். அதனால் தான் கேட்டேன்.

அப்பா: !...!...!...

— த. ஜெயபிரகாஷ் (17,387)



அந்தத் தொப்பியிலே அலங்காரத்திற்காகக் குத்தப்பட்டிருந்த ஒரு கொண்டை ஊசி இருந்தது. இப்போது நினைவு வந்தது அதற்கு.

ஒரே பாய்ச்சலில் அது அந்தப புதருக்குப் போயிற்று: அந்தக் கொண்டை ஊசியை உருவி எடுத்தது. ஊசியின் முனை நீளமாகவும் கூர்மையாகவும் இருந்தது.

அடுத்த கணம் பிரடெரிக் கூட்டத்தை விலக்கிக் கொண்டு, எலியின் முன் தோன்றியது. அதன் கையில் ஊசியின் முனை பளபளத்தது.


''துஷ்ட எலியே, விடு அவளை'' என்று கம்பீரமாக உத்திரவை முழங்கியது பிரடெரிக். அதன் குரல் கேட்டதும் அத்தனை பிராணிகளும் 'கப்—சிப்' என்று அடங்கி விட்டன. 'ஐயோ, பிரடெரிக்கும் ஆபத்தில் மாட்டிக் கொள்கிறதே' என்று அவற்றில் பல பிராணிகள் நினைத்தன.


'சரி, தொலைந்தது பிரடெரிக் இன்றோடு. பரீதாவை விட்டு விட்டு பிரடெரிக் மீது பாயப் போகிறது எலி'' என்றே எல்லாம் தீர்மானித்து விட்டன.

பிரடெரிக்கின் குரலைக் கேட்டதும் எலி பரீதாவை இழுத்துக் கொண்டு போவதை நிறுத்தி விட்டு 'யாரடா அவன் என்னைத் தடுப்பது?' என்பது போலத் திரும்பிப் பார்த்தது. பிரடெரிக்கைக் கண்டதும், ''ஓ, நீயா?'' என்றது.

அதற்குப் பெரிய கோபமே வந்து விட்டது. ''பிசாசுப் பையா — போய் விடு இங்கிருந்து. இல்லையோ தொலைந்தாய் முட்டாளே. சாக விரும்புகிறாயா? என் கையால்? பரீதாவுக்குப் பதிலாக நீ இரையாகத் தயாரா?'' என்று கேட்டது.

''பேச்சு அப்புறம். முதலில் பரீதாவின் மீதிருந்து உன் அழுக்குக் கையை





(பத்து ரூபாயை மணியார்டர் பண்ண வந்த எழுதப் படிக்கத் தெரியாதவரிடம்) "இந்த நோட்டு செல்லாது, வேறு நோட்டுக் கொடுங்க"

"பரவாயில்லைங்க. இதையே அனுப்பிடுங்கோ, என் மச்சானுக்கு, இது போன வாரம் அவன் தந்ததுதான்"

எடு. ஒரே ஒரு நிமிஷம்தான் உனக்கு அவகாசம் தருவேன். உன் தந்திரங்களை எல்லாம் என்னிடம் காட்டாதே: விடு அவளை" என்றது பிரடெரிக்.

"ஓ. அப்படியா? அவளை விட உன் உடம்பு நன்றாகக் கொழுத்துத்தான் இருக்கிறது. உன்னையே இன்றைக்கு என் இரையாக்கிக் கொள்கிறேன்" என்று கொக்கரித்த எலி, பரிதாவை விட்டு விட்டு பிரடெரிக் மீது பாய்ந்தது.

பிரெடரிக் பூமியில் நன்றாகக் காலை ஊன்றிக் கொண்டு ஊசியை நீட்டிக் கொண்டு நின்றது.

பாய்ந்து வந்த எலி, ஊசி மீது வந்து இடி போல மோதிற்று. ஊசியின் முனை எலியின் நெஞ்சிலே பாய்ந்து ஆழமாகச் சென்றது.

அடுத்த கணம் அது துடிதுடித்துக் கொண்டு விழுந்து இறந்தது.

"ஹோ!" என்று சந்தோஷக் கூச்சல் எங்கும் ஒலித்தது. பிராணிகள் எல்லாம் "பிரடெரிக்குக்கு வெற்றி! பிரடெரிக்குக்கு வெற்றி!' என்று எகிறிக் குதித்தன.

"மாவீரன் பிரடெரிக் வாழ்க! வாழ்க!" என்ற கோஷம் விண்ணைப் பிளந்தது.

பயத்தால் ஒரு மூலையில் நடுங்கிக் கொண்டு நின்றிருந்த பரிதா ஓடியே வந்து பிரடெரிக்கைக் கட்டிக் கொண்டு ஒரு முத்தமே கொடுத்து விட்டது!

பிரடெரிக், பரிதாவை நட்புறவுடனும் ஆனந்தமாகவும் பார்த்தது. 'நிச்சயமாக இவள் பெரிய அழகிதான் என்று நினைத்தது அது.

எல்லாப் பிராணிகளும் பிரடெரிக்கை வந்து சூழ்ந்து கொண்டு விட்டன. "நீ நம் ஊருக்குப் பெரிய சேவை செய்து விட்டாய். கிராமத்தின் பெரிய எதிரியை மாய்த்து விட்டாய்" என்று பாராட்டின.

அவைகளில் எதுவுமே பிரடெரிக்கின் கிழட்டு அசிங்க முகத்தை ஒரு பொருட்டாகவே கருதவில்லை.

'எவ்வளவு நல்லவன் பிரடெரிக். அவன் இருக்கிற வரையில் நம் ஊருக்கு ஒரு குறையும் இல்லை' என்று அவை நினைத்தன. 'இவ்வளவு நல்ல பிரடெரிக்கை ஒதுக்கி வைத்தோமே!! என்று வெட்கப்படவும் செய்தன.

பிரடெரிக் எல்லோருக்கும் கை கூப்பி நன்றி தெரிவித்து விட்டுத் தன் வீட்டை நோக்கிப் போயிற்று.

அதன் மனசில் இப்போது பரிதாவின் நினைவே அதிகமாக இருந்தது. பரிதாவை அது இப்போது உளமார நேசித்தது. அதைத் திருமணம் செய்து கொள்ள விரும்பியது. ஆனால், அதை வெளியிட அதற்குத் துணிவுதான் வரவில்லை. இந்தக் கிழட்டு அசிங்க மூஞ்சியுடன் போய், சாதாரண ஒரு பெண்ணைக் கூட, 'என்னை மணக்க உனக்குச் சம்மதமா?' என்று கேட்க முடியாதே! பரிதா எப்பேர்ப்பட்ட பேரழகி!

பிரடெரிக், அன்றொரு நாள் வின்னிக் கிழவியிடம் அப்படி நடந்து கொண்டதை நினைத்துப் பெரிதும் வருந்தியது. 'நான் அவளிடம் அத்தனை முரட்டுத்தனமாக நடந்து கொண்டிருக்கக் கூடாது'. அதனால்தானே அவள் என்னை இப்படி ஆகும்படி சபித்தாள்? அவள் சபிக்காமல் இருந்திருந்தால், நான் எவ்வளவு அழகான இளைஞனாக இருந்திருப்பேன்? தைரியமாகப் போய் பரிதாவிடமே 'என்னை மணந்து



கொள்கிறாயா?' என்று கேட்டிருக்க முடியுமே! எல்லாம் நாசமாகி விட்டதே! என்று வருந்தியது அது.

'நான் ஆரம்பத்திலிருந்தே அன்பும் தயையுமாக எல்லோரிடமும் இருந்திருந்தால், இந்த கதி வந்திருக்குமா?' என்று அழுதது பிரடெரிக்.

இப்போது பிரடெரிக்தான் அந்தக் கிராமத்தின் பெரிய 'ஹீரோ!'. அதை வந்து பார்க்காதவர்களே இல்லை.

எல்லாப் பிராணிகளும், அதன் அசிங்கத் தோற்றத்தையும் மறந்து அதனுடன் சிநேகமாக இருந்தன. இது பிரடெரிக்கை ஆனந்தத்தில் ஆழ்த்தினாலும், அதன் மனசில் ஒரு குறை இருக்கத்தான் செய்தது.

இந்த அசிங்கம் பிடித்த கிழ முகம் என்னை விட்டு நீங்கி நான் பழைய படி அழகான இளைஞனாக ஆவேனா?' என்று ஏங்கியது அது.


''அதற்கு என்ன வழி!''

பிரடெரிக்குக்குச் சதா இதே சிந்தனைதான்.

'எல்லோரும் என்னிடம் அன்பு செலுத்துகிறார்களே. அந்தக் கிழவியின்னிடமும் செலுத்த முடியாதா?' என்று வாய் விட்டுப் புலம்பியது. 'அது அவள் என்னிடம் அன்பு காட்டினால் உடனே எனக்குப் பழைய வடிவம் வந்து விடுமே!'

பிரடெரிக் கைகளைப் பின்னால் கட்டிக் கொண்டு, எப்போதும் இதே யோசனையுடன் உலாவிக் கொண்டே இருந்தது.

கடைசியில், ''இந்தப் பெரிய கிராமத்தையே என் அன்பினால் மாற்றிய நான், அதே அன்பு வழியை உபயோ



கித்து வின்னிக் கிழவியையும் மாற்ற முடியாதா? நிச்சயமாக முடியும்'' என்று தீர்மானம் செய்தது.

இப்படி நினைத்ததும், வின்னிக் கிழவியின் மீது அதற்கு இருந்த வெறுப்பும் கோபமும் முற்றிலும் மறைந்து விட்டன.

''பாவம் கிழவி — அவள் எனக்கு என்ன கெடுதல் செய்தாள்? நான் முரட்டுத்தனமாக அவளைச் சீண்டினேன். அவள் சபித்து விட்டாள். பிசகு என் மீதுதானே!'' என்று எண்ணியது பிரடெரிக்.

'அவளுக்கும் உதவி செய்ய வேண்டிய தருணம் வரும்; அப்போது கட்டாயம் செய்வேன்' என்று முடிவு செய்தது.

பிரடெரிக் அந்த சந்தர்ப்பத்திற்காக அதிக காலம் காத்திருக்க வேண்டியிருக்கவில்லை.

சீக்கிரத்திலேயே வின்னிக் கிழவியின் மந்திர ஜாலக் கழி உடைந்து விட்டது; அவள் நோய்வாய்ப் பட்டுக் கிடக்கிறாள் என்ற சேதி வந்தது.

அந்த மந்திரக் கழி இருந்தால்தான் அவளால் உயிர் வாழ முடியும். அதை அவள் அத்தனை விலை மதிக்க முடியாத பொக்கிஷமாகக் கருதி வந்தாள். இப்போது அவளுக்கு ஒரு புது மந்திரக் கழி தேவை. நீர்க் கோரைப் பூக்களின் இழைகள் இருந்தால் அவள் அதைச் செய்து கொண்டு விடுவாள். ஆனால், அவள்தான் எழுந்திருக்க முடியாமல் கிடக்கிறாளே...!


குழந்தை டாக்டர்

''என்ன இருந்தாலும் அந்தக் குழந்தை டாக்டர் இப்படி இருக்கக் கூடாது...''

''எப்படி...?''

''யாராவது பீஸ் தராமல் போய்விட்டால் உட்கார்ந்து அழ ஆரம்பித்து விடுகிறார்...!''

— ஏ. ஆர். வீரராகவன்.



பிரடெரிக் உடனே அவளுக்கு உதவி செய்யக் கிளம்பி விட்டது. கரையோரமாக இருந்த நாணல், நீர்க் கோரைப் பூக்களின் மெல்லிய இழைகளைக் கவனமாகச் சேகரிக்க ஆரம்பித்தது. கோரைகளைக் கிழித்து நாராகச் செய்தது. பிறகு எல்லாவற்றையும் பின்னி எடுத்துக் கொண்டது.

அதைப் பின்பக்கமாக மறைத்துக் கொண்டு பிரடெரிக், வின்னிக் கிழவியின் முன் போய்ப் பணிவுடன் நின்றது.

வின்னிக் கிழவிக்கு, பிரடெரிக் அடியோடு மாறின புது ஆள் என்பது தெரியாது. ரொம்ப நாளாகவே அவள் படுக்கையில்தானே கிடக்கிறாள்!

''ஓ, நீயா! மண்டை கர்வம் பிடித்த தவளையே, எங்கே வந்தாய்? என்ன வேண்டும் உனக்கு?'' என்று கோபத்துடன் கேட்டாள் கிழவி.

''அம்மா, உங்களைப் பார்த்து விட்டுப் போகலாம் என்றுதான் வந்தேன். உங்களைப் பார்த்த பின்னாவது எனக்கு நல்ல அதிர்ஷ்டம் ஏற்படலாமல்லவா?'' என்றது பிரடெரிக்.

கிழவி இதைக் கேட்டு மகிழ்ச்சி அடையவில்லை. அவள் முகம் மேலும் கடுமையாகவே செய்தது.


''மேடம்'' என்று மரியாதையும் அன்புமாக அழைத்தது பிரடெரிக். ''இதோ, பாருங்கள். இதை உங்களிடம் கொடுத்து விட்டுப் போகத்தான் வந்தேன்'' என்று கோரைப் பின்னலைக் காட்டியது.

''ஆஹா!'' என்று துள்ளி எழுந்து உட்கார்ந்தாள் கிழவி. அதைப் பார்த்ததும், ''இதுதான் எனக்கு இப்போது மிகவும் தேவை. நல்ல சமயத்தில் கொண்டு வந்தாய்'' என்றாள். அவள் முகம் மலர்ந்தது. பிரியத்துடன் பிரடெரிக்கைப் பார்த்தாள்.

''நீ எவ்வளவு மாறி விட்டாய், பிரடெரிக்! என்னால் நம்பவே முடியவில்லை'' என்றாள்.

''எல்லாம் உங்கள் தயவால்தான் மேடம்''

''ஹா! எவ்வளவு நல்லவனாக ஆகி விட்டாய்'' என்றாள் கிழவி. ''இனியும் நீ கஷ்டப்படலாகாது. நீ



பட்டணத்து ஆசாமி: ''என் பையன் 'கராத்தே'யிலே...'கறுப்பு பெல்ட்' வாங்கியிருக்கான்...!''

கிராமத்து ஆள்: ''அட, இது என்னங்க பெரிய்ய விஷயம்...? நம்ம பையன் எங்க ஊர்க் கடையிலேயே — 'கறுப்பு பெல்ட்' வாங்கிட்டானுங்க...!''

— வி. சுந்தரராமன்.

கற்றுக் கொள்ள வேண்டிய பாடத்தைக் கற்றுக் கொண்டு விட்டாய்''

வின்னி எழுந்து நின்று பாம்பு போன்ற நகங்கள் நீண்ட தன் விரல்களை ஆகாசத்தில் சுழற்றினாள்.

''டெப்ரா — கா — அப்ரா'' என்றாள்.

அடுத்த கணம் பிரடெரிக் பழைய படி அழகான இளைஞனாக ஆகி விட்டது! ''தாங்க் யூ மேடம்'' என்றது.

பிரடெரிக் தன் ஏரிக் கிராமத்திற்குத் திரும்பி வந்த போது, அதைப் பார்த்த எல்லா நீர்வாழ் பிராணிகளும் ஆச்சர்யத்துடன் நின்று விட்டன.

''பிரடெரிக்! இது நீதானா?'' என்று அவை சந்தோஷத்துடன் கூவின. ''எப்படி நிகழ்ந்தது இந்த அதிசயம், பிரடெரிக்?'' என்று தலைக்குத் தலை கேட்டன.

''எல்லாம் அன்பு செய்த அற்புதம்'' என்றது பிரடெரிக்.

''ஆமாம், ஆமாம்'' என்று பிராணிகள் கத்தின.

''எல்லோரும் இந்த அற்புதத்தை வந்து பாருங்கள்'' என்று ஊராரைக் கூவி அழைத்தன.

''அன்பினால் கொடிய மனம் படைத்த மந்திரவாதக் கிழவியையே வெற்றி கொண்டு விட்ட மாவீரன் பிரடெரிக்கை வந்து பாருங்கள்.''

ஊர் முழுவதும் இதைக் கேட்டதும் அங்கே, பிரடெரிக் வீட்டு வாசலில் வந்து கூடி விட்டது.

பிரடெரிக் எல்லோரையும் ஒரு தடவை சுற்றிப் பார்த்தது. அந்தக் கூட்டத்தில் அது தேடின ஜீவன் கடைசியாக, ஓர் ஓரமாக நின்றிருந்தது. அதன் கண்களில் பெருமிதம் பொங்கி வழிந்து கொண்டிருந்தது.''

பிரடெரிக் நேராக அதனிடம் சென்றது. ''பரீதா'' என்றது. பரிதா நிமிர்ந்து பார்த்தது.

''நீ என்னை மணந்து கொள்வாயா, பரீதா'' என்று தயக்கத்துடன் கேட்டது.

''நிச்சயமாய் பிரடெரிக்'' என்று குரலை உயர்த்தி மகிழ்ச்சியோடு சொல்லிற்று பரீதா. ''உன்னைத் தவிர என் மனசிலே யார் எப்போது இருந்தார்கள்'' என்ற பரீதா, பிரடெரிக்கை கட்டிக் கொண்டு அழகாக முத்தமிட்டது.

''அடுத்த வாரம் இவர்கள் இருவருக்கும் நம் கிராமத்திலே திருமணம்'' என்று அறிவித்தாள் பரீதாவின் அம்மா.

''பிரடெரிக் வாழ்க! பரீதா வாழ்க!'' என்று வில்லி ஏரிக் கிராமத்து இளைஞர்கள் எல்லாம் கோஷமிட்டார்கள்.

''இப்போதே உங்களை வாழ்த்துகிறோம்'' என்று சொன்ன பெரிய பிராணிகள் பெரிய குரலில் வாழ்த்துப் பாடலை கோஷ்டியாகப் பாடி வாழ்த்தின.

திருமணத்தன்று கிழவி வின்னி கூட அழகான ஒரு பூக்கூடையை மணமக்களுக்குப் பரிசாகக் கொடுத்தாள். 'எல்லையில்லா அன்பு' என்ற வாசகம் அதில் பொறித்திருந்தது.

பிரடெரிக் – பரீதா தம்பதிகளுக்கு பிற்காலத்தில் பல குழந்தைகள் பிறந்தன. எல்லாக் குழந்தைகளுக்கும் அப்பா தன் கதையை விஸ்தாரமாகச் சொல்லிற்று. 'அன்பு, பிறருக்கு எப்போதும் உதவி' என்கிற மகத்தான மந்திரங்களை அவை கற்றுக் கொண்டன.

அவைகளின் வாழ்க்கையில் சந்தோஷமும் வெற்றிகளுமே நிறைந்திருந்தன என்று சொல்லவும் வேண்டுமோ?



ஆர். விஸ்வநாதன் (10,620)



ஜெ. சீதா (18,355)



ஆர். கோபிநாதன் (10,732)

உறுப்பினர் வரைந்த ஓவியங்கள்



பெ. பிரகாஷ் (19,465)



ஆர். குருநாதன் (8,407)

சார்தபால்

திருஷ்டி சுற்றிப் போடுக!

* 'விஷக்கடிகளுக்கு முதல் உதவி' எழுதிய டாக்டர் கு. கணேசன் அவர்களுக்கு நன்றி. மிகவும் பயனுள்ள டாக்டர் பக்கங்களை நான் பைண்ட் செய்து வைத்துள்ளேன்.

— இரா. செந்தில்குமார் (10544), அம்பல்.

* விஷ ஜந்துகளைப் பார்த்தால் கூட இனி பயம் வராது.

— எல். ராஜா, குத்தாலம்.

* 'ஒற்றுமைக்கு ஓர் இரட்டையர்' எனும் கதை ஒற்றுமையின் அவசியத்தைத் தெளிவாக வலியுறுத்துகிறது. இது போன்ற கதைகளைத்தான் எங்கள் நண்பனான கோகுலத்திடமிருந்து எதிர்பார்க்கிறோம்.

— எஸ். பி. ரமேஷ், அம்மையார் குப்பம்.

* 'உழைப்பாளி ஹஸனும் அதிர்ஷ்ட தேவதையும்' கதை கோகுலமான இமய மலைக்கு ஓர் எவரெஸ்ட் சிகரம் போல் அமைந்திருக்கிறது.

— எஸ். ஆனந்தி, பெரணமல்லூர்.

* நம் பாரதப் பிரதமர்களின் கதைகளைத் தெரிந்து கொள்ள ஆர்வமாக இருந்த எங்களுக்கு திரு. ஜானகி மணாளன் அளித்த கட்டுரை தேன் போன்று சுவையாக இருந்தது.

— ரெ. வினோத்குமார் (10672), ஸ்ரீரங்கம்.

* விரைவில் திரு. ஜானகி மணாளன் அவர்கள் நம் தமிழக முதல்வர்களின் கதையை எழுதுவார் என எதிர்பார்க்கலாமா?

— ப. கணேஷ் (14478), சங்ககிரி மேற்கு.

* 'கோயில் (கோழி) காணிக்கை' சிறுகதை அருமையாக இருந்தது.

— அம்மாபேட்டை கிருஷ்ண ப்ரியா, தஞ்சாவூர்.

* 'பல்வலி பறந்தது!' போன்ற பயனுள்ள கதைகளைத் தொடர்ந்து வெளியிடுங்கள்.

— கே. சங்கர், குத்தாலம்.

* ஜேம்ஸ் சிம்ஸன் பற்றிய செய்தியும், அவரது படமும் குழந்தைகளுக்கு மிகவும் பயன்தரும் என்பதில் ஐயமில்லை.

— எஸ். நாதன் பாபு, சென்னை — 4.

* மாதந்தோறும் மெருகு ஏறும் கோகுலத்திற்கு திருஷ்டி சுற்றித்தான் போட வேண்டும்.

— என். பாபு (1707), வேலூர் — 1.

* 'மணி ஓசை' கதையில் வரும் ராஜன், சுந்தர் போன்ற சிறுவர்கள் வீட்டுக்கு வீடு இருந்தால் நாட்டுக்கு நன்மை.

— ஆர். நமசிவாயம், மயிலாடுதுறை.

* தாங்கள் கோகுலத்தில் வெளியிடும் தலைவர்கள் படங்களில் முஸ்லிம் தலைவர்கள் படங்களையும் வெயிட்டால், எங்களைப் போன்ற முஸ்லிம் வாசகர்களுக்குப் பயனுடையதாக இருக்குமே! வெயிடுவீர்களா?

— க. முகம்மது ஜமீல், பொதக்குடி.

(இந்து, முஸ்லிம், கிறிஸ்தவர் என்ற வேற்றுமை உணர்வு எங்களுக்கு என்றுமே இல்லை. ஒவ்வொரு தலைவரும் பிறந்த மாதம் எது என்று பார்த்து, அந்த மாதத்தில் அவரது படத்தையும் குறிப்பையும் வெளியிடுகிறோம். டாக்டர் ஜாகிர் உசேன், செய்குத் தம்பிப் பாவலர் போன்றவர்களின் படங்களை ஏற்கெனவே வெளியிட்டிருக்கிறோமே!

— ஆசிரியர்.)

* த. கி. இராமசாமி அவர்கள் எழுதிய 'சிங்கப்பூர் சைக்கிள்' பல மாணவர்களுக்கு நல்ல பாடம்.

— என். பி. மாசிலாமணி (14383), நாட்டான்வலசு.

* அறிவியல் சம்பந்தமாகத் தமிழில் வெளிவரும் மாத இதழ்கள் இன்னும் இரண்டு உள்ளன. ஒன்று, கோவையிலிருந்து டாக்டர் திருமதி இராசாம்பாள் தேவதாஸை நிர்வாக ஆசிரியராக கொண்டு வெளிவரும் 'விஞ்ஞானச் சுடர்', மற்றொன்று புதுவையிலிருந்து முற்றிலும் குழந்தைகளுக்காகவே வெளிவரும் 'துளிர்'.

— மு. கா. நெடுமாறன் (660), காவேரிப் பட்டணம்.

* 'இளம் விஞ்ஞானி' என்ற அறிவியல் இதழ் ஒன்றும் தமிழில் வெளிவருகிறது.

— த. இராஜசேகரன், குறிஞ்சிப்பாடி.

* சென்னையிலிருந்து தென்மொழிப் புத்தக டிரஸ்ட் வெளியிடும் 'யுனெஸ்கோ கூரியர்' மாத இதழைக் குறிப்பிட மறந்துவிட்டீர்களே!

— வெ. இராமலிங்கம், வல்லம்.



திப்பிலி ராஜாவின் திலிம்பிக்ஸ்

"ஸ்வாமி! குல்லாய் போடாமல் குளிரில் எங்கே புறப்பட்டு விட்டீர்கள்?" — எனப் பணிவுடன் கேட்டார் திப்பிலி ராணி!

"போகும் பொழுதே கேட்டுத் தொலைத்தாயா? உருப்பட்ட மாதிரி தான்," — என்று கோபித்தார் திப்பிலி ராஜா.

"போகும் பொழுதுதானே இப்படிக் கேட்க முடியும்? வரும் பொழுது — எங்கிருந்து வருகிறீர்கள்? என்றுதானே கேட்க வேண்டும்? முதல் மந்திரி கேட்டால் என்ன சொல்வது?"

"அய்யோ! அவருக்குப் பயந்து தானே ஓடுகிறேன்?"

"எங்கே?"

"சித்திரை திலிம்பிக்ஸ் போட்டியில்."

"சித்திரைப் போட்டிக்கு மார்கழியில் பயிற்சியா?"

"இது போன சித்திரையில் நடக்க வேண்டியது. சரி! நேரம் வீணாகிறது. கம்பளிப் போர்வையை எடு. குரங்குக் குல்லாயைக் கொடு."

தை பிறந்தது. திலிம்பிக்ஸ் போட்டிகள் தொடங்கின. தோட்டி முதல் தொண்டைமான் வரை, ஆண்டி முதல் அரசன் வரை அதில் கலந்து கொள்ளலாம். எனவே — எல்லாப் போட்டிகளிலும் திப்பிலி ராஜா கலந்து கொள்வார் — என விளையாட்டு மந்திரி பல வண்ணச் சுவரொட்டிகளை மரங்களில் கட்டி வைத்தார். அவற்றைப் பார்த்த மந்திகள் மயங்கின; பறவைகள் பயந்தோடி விட்டன.

மலையுச்சித் திடலில் போட்டிகள் தொடங்கின. முதலில் 100 செ. மீ. நடைப் பந்தயம். தொடக்கக் கோட்டில் தமக்குப் பக்கத்தில் நின்று கொண்டிருந்த வீரர்களைப் பார்த்து ராஜா முறைத்தார். அவர்கள் நடுங்கினர். குளிரா? பயமா? அரண்மனைப் பயில்வான் ஒரு தட்டைக் கல்லின் மீது ஒரு 'கேப்' வெடியை வைத்து, ஒரு குண்டுக் கல்லை அதன் மேல் போட்டார். 'டுப்.'

ராஜா 'குடுகுடு'வென உருண்டு

நடந்தார். சிறிது தூரம் நடந்தவுடன் அக்கம்பக்கம் பார்த்தார். பிற நடையர்கள் வளைந்து வளைந்து. நடந்து. கொண்டிருந்தனர். காரணம், அவர்களுக்குப் போடப்பட்டிருந்த சுண்ணாம்புக் கோடுகள் வளைந்திருந்தன. ஆனால், ராஜாவுக்குப் போடப்பட்டிருந்த கோடுகள் நேராக இருந்தன. தான் நேர்மையான பாதையில் செல்வதாக மகிழ்ந்த ராஜா, வேகமாக நடந்தார். மூச்சு முட்டியது. உடனே, இரு நடுவர்கள் வெள்ளை நாடாவைக் குறுக்காகப் பிடித்துக் கொண்டு ராஜாவை நோக்கி வந்தனர். நாடா, ராஜாவின் தொப்பையில் பட்டு அறுந்தது. 'பளிர் — பளிர்' எனக் காமிராக்கள் மின்னின. கையொலி இடித்தது. ஆனந்த மழை பொழிந்தது, ராணியின் கண்களில்.

'அடுத்தது ஹாக்கி. 'ஒலிம்பிக்கில் நாட்டின் தரம் குறைந்துவிட்டது. எனவே, திலிம்பிக்கில் ராஜாவே ஆடிக் காட்டப் போகிறார்' என்று அறிவிப்பர் அலறினார்.

ஆட்டம்தொடங்கியது. ஒருநிமிடம் தான் பந்து அங்கும் இங்கும் ஓடியது. ராஜா மறித்தவுடன், பந்து அவர் மட்டையில் ஒட்டிக் கொண்டது. எதிராளியினர் என்ன முயன்றும், பந்து கிடைக்கவில்லை. ராஜா பந்தை விளாசினார். அது கோலுக்குள் நுழைந்தது. கோல் கம்பங்களுக்கிடையில் இருந்த ஒரு காந்தக் கோட்டினைத் தாண்டியதும், கம்பங்களே விசிலடித்தன. ராஜா, மட்டையைத் தரையில் தட்டினார். பந்து 'விர்'ரென்று உருண்டு வந்து ராஜாவின் மட்டையில் ஒட்டிக்கொண்டது. மீண்டும் ஒரு கோல். விசில். பந்து கோலுக்குள் நுழைந்து வட்டமடித்து ராஜாவின் மட்டைக்கே மீண்டும் திரும்பியது. 'அது ஹாக்கி பந்தா? ஆஸ்திரேலியன் பூமராங்கா?' என மக்கள் மருண்டனர். நல்ல வேளையாக ராஜாவின் கை சுளுக்கிக் கொண்டது. ஆட்டமும் முடிந்தது.

இரு போட்டிகளில் வென்ற ராஜா, மூன்றாவதிலும் வென்றால், 'திப்பிலி சக்ரா' பதக்கம் அவருக்கே! அடுத்து ஓர் உள்ளூர் ஆட்டம் — 'சடுகுடு'. ஆஸ்ட்ரோ டர்ஃப் திடலில் செவ்வகமான எலக்ட்ரானிக் அரங்கமொன்று அமைக்கப்பட்டிருந்தது. நடுவில் வெள்ளை எலக்ட்ரானிக் கோடு. அதன் இருபுறமும் ஒரு மீட்டர் தூரத்தில் பச்சைக் கோடுகள். 'குடுசடு' — எனத் 'தம்' பிடித்துச் செல்லும் வீரன், வெள்ளைக் கோட்டைத் தாண்டிச் சென்று, பச்சைக் கோட்டை மிதித்துவிட்டுத் திரும்ப வேண்டும் என்பது திலிம்பிக்ஸ் விதி. ராஜா அணியும், கூஜா அணியும் பயங்கரமாக மோதின. சமமான புள்ளிகள். கடைசியில் களத்தில் இறங்கிய ராஜா —

குடு சடு, குடு சடு, குடு சடு,
நான்தான் வீரன்
நல்ல முத்துப் பேரன்
வெள்ளிப் பிரம்பெடுத்து
விளையாட வந்தேண்டா!
வந்தேண்டா! வந்தேண்டா!

எனப் படுபயங்கரமாகத் தம்பிடித்துக் கொண்டே துள்ளி ஓடினார். ஆனால், அவர் வெள்ளை நடுக்கோட்டையே தாண்ட முடியவில்லை. அந்த அளவுக்குக் கூஜா அணியினர் நெருங்கி நின்று அவரைப் பிடித்துப் போடத் தயாராயிருந்தனர். 'தாண்டாவிட்டால் தண்டனை' — என்று நடுவர்




படித்தபடி

"என்ன? என்னாலதான் உனக்கு இந்த விபத்து நடந்துதா...! எப்படி...?"

"நீங்கள்தானே சார் 'படித்தபடி நட' என்று சொன்னீர்கள்... அதனால்தான் நான் ரோட்டில் செல்லும் போது புத்தகத்தை படித்துக் கொண்டே நடந்தேன்... அப்போதுதானே கார் என் மீது மோதியது....?"

— ஏ. ஆர். வீரராகவன்.



எந்திர மனிதன்

எந்திர மனிதன் ரோபோ நான்
என்னை நீங்கள் அறிவீரோ?

எத்தனை அரிய பணிகளையும்
எளிதாய் நொடியில் செய்திடுவேன்!

மந்திரம், மாயம், இதில் இல்லை.
மனிதன் செய்த தந்திரம்தான்!

சொல்லிக் கொடுத்த செயல் மட்டும்
செய்வேன், சிறிதும் பிழை இன்றி!

சொந்த மாகச் சிறுபணியும்
செய்திட என்னால் முடியாது!

சிந்தனை யுடனும் செயலாற்ற
எந்நாள் என்னைச் செய்வாரோ?

நச்சரித்தார். வேறு வழியின்றி ராஜா தாண்டினார். ஆனாலும், அவர் பச்சைக் கோட்டை மிதிக்க முடியவில்லை. எதிரணியினர் இடம் கொடுக்கவில்லை. 'தம்' போகும் தருணத்தில், ராஜா ஒரு காலை 'லேசாக' நீட்டினார். என்ன விநோதம்? பச்சை எலக்ட்ரானிக் கோடு நகர்ந்து வந்து அவர் காலைப் பணிவுடன் தொட்டது. அதைக் கண்டு ராஜா மயங்கிய தருணத்தில், கூஜா அணியினர் அவரைப் பாய்ந்து பிடித்தனர். கீழே விழுந்துவிட்ட ராஜா, நடுக்கோட்டைத் தொட முயன்றார். அதற்குள் அவர் 'தம்' போய்விட்டது. ஆனால், அதை நடுவர் கண்டு கொள்ளாததால், மீண்டும் ராஜா, 'குடு சடு'— என இரண்டாவது 'தம்' பிடித்துப் பாடத் தொடங்கினார். எனினும், அவர் கூஜா அணியின் குரங்குப் பிடியிலிருந்து மீளவே முடியவில்லை. கடைசியாக ஒரு 'தம்' பிடித்துப் புரண்ட ராஜா, கை நீட்டினார். என்ன ஆச்சரியம்—வெள்ளை எலக்ட்ரானிக் கோடு நகர்ந்து வந்து, அவர் கையைத் தொட்டது. நடுவர் விசிலடித்து, ராஜா அணி வென்று விட்டதாக அறிவித்தார். ஆட்டம் குளோஸ்.

கடைசியாக ஒரு சர்வதேச விளையாட்டு. 'பூவா தலையா'வில் வென்ற ராஜா, பந்தினை வீசினார். அது ஹெட் ஸ்பின்' ஆகி, 'விக்கெட் கீப்பரின் தலைக்கு மேலே பறந்தது. உடனே நடுவர் 'ஏதோ நினைவாக 'கோல்' என்று கூவினார். ரசிகர்கள் குழம்பினர். ஹாக்கிக் கோல் கம்பங்களுக்கிடையில் விக்கெட்டுகள் நடப்பட்டு இருந்ததால், நடுவர் வாய் தவறிக் கோல் எனக் கூவி விட்டார்.

எதிரணித் தலைவர் அப்பீல் செய்ய ஓடினார். யாரிடம் அப்பீல் செய்வது? ஒலிம்பிக்ஸ் விதிகளின்படி ராஜாவிடம்தான் அப்பீல் செய்ய வேண்டும்.

அதற்குள் ராஜா அடுத்த பந்தினை வீசிவிட்டார். அது நடுவர் காலில் பட்டுக் கோலுக்குள் புகுந்து விட்டது. எதிரணியின் அப்பீலுக்கு முடிவு தெரியாததால், அதுவும் 'கோல்' என்று நடுவர் அறிவித்தார்.

ராஜா மூன்றாம் முறை வீசிய பந்து, மட்டையனின் தொப்பியில் பட்டுக் கோலுக்குள் சென்றது. "ராஜாவின் அருமையான ஹாட்—ட்ரிக்"— என வர்ணனையாளர் குதித்தார். தொலைக்காட்சிக் காணிகள் குழம்பி

மண்டையைப் பிய்த்துக் கொண்டன. வானொலி நேயர்கள் அதைக் கேட்டு மயங்கி முடியைப் பிய்த்துக் கொண்டனர்.

பரிசளிப்பு விழா — தொடர்ந்தது. ராஜாவின் தலைமையில். பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர்களுக்குக் கம்மர்கட், கடலை உருண்டை முதலான அரிய பரிசுகளை ராஜா வாரி வழங்கினார். கடைசியாகக் கோப்பைகள், பதக்கங்கள் முதலான எளிய பரிசுகளே ராஜாவுக்கு எஞ்சியிருந்தன. அவருக்கு யார் பரிசளிப்பது? தானே ஒரு கையால் கொடுத்து, மறு கையால் வாங்கிக் கொள்வதென ராஜா முடிவு செய்தார்.

100 செ. மீ. நடைப்பந்தயம் — முதல் பரிசு — திப்பிலி ராஜா — என அறிவிக்கப்பட்டது. மக்கள் மகிழ்ச்சியுடன் கைதட்டினர். ஆனால் ஒருவன் மட்டும் கர்வத்துடன் கால் தட்டினான். ஹாக்கிப் பந்தயத்திற்குக் கோப்பை. கிரிக்கெட்டில் மூன்று கோல் போட்டு 'ஹாட் — ட்ரிக்' செய்து உலக சாதனை நிகழ்த்தியதற்கு வெள்ளிப் பதக்கம்—எனப் பரிசுகளை ராஜா வாங்கிக் குவித்தார். ஒவ்வொரு முறையும் மக்கள் கைதட்டிய பொழுது, அந்த ஒருவன் மட்டும் கால் தட்டினான். கடைசிப் பரிசினைத் தமக்குத் தாமே கொடுத்து வாங்கிக் கொண்ட பிறகு ராஜா, தம் கைகளைத் தட்டினார். அப்பொழுதும் அவன் கால் தட்டினான். அதைக் கண்டு வெகுண்ட ராஜா,

"கட்டிப் போடுங்கள் அந்தக் கால் தட்டியை!" என்று கட்டளையிட்டார். பத்து வீரர்கள் பாய்ந்து சென்று, அவனை மேடைக்கு இழுத்து வந்தனர்.

"யார் நீ?" — என்று மிரட்டினார் ராஜா.

கால்தட்டி மிரளாமல் திமிறினான். அப்பொழுது அவன் தலைப்பாகை விழுந்தது.

"அடேடே! இது காணாமல் போன நம் இளவரசி அல்லவா?" — என வியந்தார் மந்திரி.

"இளவரசியா? காணாமல் போனாளா? ஏன்? எப்படி?" — என ராஜா தன் மறதி மண்டையைத் தட



விக் கொண்டே கேட்டார்.

''இது என்ன அசட்டுக் கேள்வி? இளவரசி என்றால் காணாமல் போவது தானே ராஜ மரபு? அப்பொழுது தானே கண்டுபிடிப்பவருக்குப் பாதி ராஜ்யம் கொடுத்து, அவளையும் தலையில் கட்ட முடியும்!'' — என விளக்கிய ராணி, ஓடி வந்து,

''இளவரசி! வருக! வருக! கால் தட்டல் எந் நாட்டுப் பழக்கமோ?'' எனக் கேட்டாள்.

''காலாஹாரிப் பாலைவனப் பழக்கம். பாலைத் தலைவன் ஏதாவது தவறு செய்யும் பொழுது, மக்கள் கால் தட்டுவார்கள்'' — என இளவரசி விளக்கினாள்.

''நானென்ன தவறு செய்தேன்? சித்திரைத் திலிம்பிக்ஸை தையில் நடத்தியது தவறா? அதில் நானும் கலந்து கொண்டு மக்களை உற்சாகப் படுத்தியது தவறா?''

''இல்லை! ஆடிய அழகும், தேடிய பரிசும்தான் தவறு. நடைப் பந்தயத்தில் நாடா உங்களை நாடி வந்தது. ஹாக்கி மட்டையில் காந்தம். பந்தினுள் இரும்புப் பொடி. குடுசடுவிலும் எலக்ட்ரானிக் கோட்டினை நகர்த்திக் குளறுபடி செய்தீர்கள். கசமுசா நாட்டுக் கால் பந்துப் போட்டியில் விக்கெட்டுகள் வீழ்த்தப்படுவதையும், வழவழா நாட்டு வாலிபாலில் ரன்கள் எண்ணப்படுவதையும் நான் பார்த்திருக்கின்றேன். ஆனால் கிரிக்கெட்டில் கோல் போட்டுப் பரிசு வாங்குவது எந்த நாட்டிலும் இல்லாத கோல்மால்''

''ஆட்ட அவசரத்தில் அதையெல்லாம் நான் கவனிக்கவில்லை. நீ கவனித்தது நன்று. ஆனால் அரண்மனை ரகசியங்களை அம்பலமாக்கியது, எதிர்கால ராணிக்கு இசைவானதல்ல. காணாமல் போன உன்னைக் கண்டுபிடிப்பவர்க்குப் பாதி நாடு பரிசளிப்பதாகப் பறையறிவித்தது உண்மை. நான்தான் உன்னை மேடைக்கு இழுத்து வரச் சொன்னதால், பரிசு எனக்கே! இதில் எதும் தவறில்லையே!''

''இல்லை! ஆனால் உங்கள் திலிம்பிக்ஸ் 'தில்லு முல்லு'களுக்கு....?''

''யாரைப் பொறுப்பாக்கலாம்?''

''விளையாட்டு மந்திரியை!''

''ஆமாம்! அதுதான் சரி! மந்திரி — நீ — எந்திரி! உன் விளையாட்டு வினையாகி விட்டது. உன்னை இக்கணமே வேலையிலிருந்து நீக்குகிறேன்'' — என்று ராஜா மேடையிலேயே முழங்கினார். அவரது வீரத்தைப் பாராட்டி எல்லோரும் கைதட்டினர். இளவரசி கால் தட்டவில்லை.

ஆடிய களைப்புத் தீர, அன்று மாலை ராஜாவுக்கு மசாஜ். தைலாபிஷேகம். அவர் தலையில் தாளம் போட்டார் ஒரு தவிலர்; முதுகில் தனி ஆவர்த்தனம் வாசித்தார் ஒரு மிருதங்கர். கராத்தேயர் இருவர் கை கால்களை மசாஜினர். அதையெல்லாம் ராஜா ஆனந்தமாக அனுபவித்துக் கொண்டிருந்தார். அதைத் தெரிந்து கொண்டு அங்குச் சென்ற விளையாட்டு மந்திரி மெதுவாகத் தலையை நீட்டி,

''ராஜா! திலிம்பிக்ஸ் தில்லுமுல்லுகளுக்கு நான் பொறுப்பல்ல. நான் வெறும் அம்பு'' — என்றார்.

''இதென்ன வம்பு. யார் வில்?''

''வில் அல்ல! வில்லி — மகாராணியார்தான். நாட்டில் பஞ்சம் அதிகமாகி விடவே உங்கள் புகழ் கொஞ்சம்

'பம்பு மரம்' (Pump Tree) என்று கேள்விப்பட்டிருக்கிறீர்களா? மிக உயரமாக வளரக் கூடிய யூகலிப்டஸ் (Eucalyptus) மரம்தான் இவ்வாறு அழைக்கப்படுகிறது. பூமியிலிருந்து அதிக அளவு நீரை உறிஞ்சும் ஆற்றல் கொண்டுள்ளதால், இம்மரத்தை பம்பு மரம் என்கிறார்கள். யூகலிப்டஸ் மரம் 130 மீட்டர் உயரம் வரை வளரக் கூடியது.



குறைந்து விட்டதால்....''

''புரிகிறது. மகாராணி வானவில். அதை நான் நிமிர்த்த முடியாது. சரி! கவலை வேண்டாம். கடுகூர் கவர்னர் கலகநாதர் மேல் ஊழல் புகார்கள் குவிந்து விட்டன. அடுத்த மாதத் தலைப்புச் செய்திக்காக அவரை நான் வேலை நீக்கம் செய்யப் போகிறேன். கவர்னர் வேலை உமக்கே.''

இதைக் கேட்ட ஆனந்தத்தில் குழம்பி விட்ட மந்திரி,

''பனங்காய்த் தலையில் குருவியை வைக்கிறீர்கள்! அரச கட்டளையை மீற முடியுமா? என்றாலும் அந்தப் பதவி அடுத்த மாதம் தானே வரும்? எனக்குத் தெரிந்த ஒருவருக்கு, ஏதாவது மந்திரி பதவி கொடுத்தால் நான் எப்படியோ பிழைத்துக் கொள்வேன் — இம் மாதம்'' என வேண்டினார்.

''தெரிந்தவர் என்றால் — எந்த வகையில்?''

''என் மனைவியின் அப்பாவின் சம்சாரத்தின் கடைசிப் பையன்''

''சரி! சரி! அவனுக்கு என்ன வேலை தெரியும்?''

''வேலை தெரியாது. விளையாடத் தெரியும். கோலி—கில்லி—பம்பரம் எனும் முப்பெரும் ஆட்டங்களில் அவன்தான் திப்பிலி நாட்டுச் சூப்பர் ஜீனியர் சாம்பியன் அவனை விளையாட்டு மந்திரியாக்கினால், பழங்கால உள்நாட்டு விளையாட்டுகள் உயர்வுக்கு உழைப்பான்.''

''சே! அதிலும் ஊழல் வந்து விடும். கோலியை மாற்றியாடுவதே கோல்மால் என்று எங்கள் பாட்டி சொல்லியிருக்கிறார். இனி, இளவரசி மீண்டும் காணாமல் போகும் வரை வி. மந்திரியே கிடையாது!''

''அப்படியென்றால், அடுத்த ஆண்டு ஒலிம்பிக்ஸ் போட்டிகளை நடத்தப் போவது யார்? கவரெட்டி அடிப்பது யார்? கோப்பைகள் கொடுப்பது யார்? பதக்கம் பார்ப்பது யார்? யார்? யார்? யார்?''

''மந்திரி! மனம் கலங்காதே! மக்கள் இன்றைய நிகழ்ச்சிகளை ஓரிரு மாதங்களில் மறந்து விடுவார்கள். பிறகு 'ஆட்டத் துறை' — எனப் புதியதோர் துறையை உருவாக்குவேன்.''

''அதற்கு யார் மந்திரி?''

''கடுகூர் கவர்னர்தான்''

மிருதங்கர் ராஜாவின் முதுகில் விளக்கெண்ணெய் தேய்த்துச் சாப்புத் தாளம் போட்டார். மந்திரி மகிழ்ச்சிக் கடல் மீது நடந்தார்: கரையேறியதும் தேரில் ஏறிப் பறந்தார்.

விடுமுறையில்


விடுமுறை தன்னை கழித்திடவே
விரும்பிச் சென்னை சென்றேனே
கோகுலம் அச்சகம் போனேனே
குழந்தைக் கவிஞரைப் பார்த்தேனே.

கதைகள், கவிதைகள் யாவையுமே
கட்டுக் கட்டாய் இருந்தனவே
கதைகள் எழுதுதல் எப்படியோ?
கவிதைகள் எழுதுதல் எப்படியோ?

சித்திரம் வரைவது எப்படியோ?
தெரிவிப் பீர்கள் என்றேனே
கதைகள் எழுதுவ தென்றாலே
காப்பி அடித்து எழுதாதே

கவிதை எழுதுவது என்றாலே
கவிதைகள் நிறையப் படித்திடணும்
சித்திரம் வரைவது என்றாலே
'இண்டியன் இங்க்'கில் வரைந்திடணும்

என்றே அறிவுரை பலகூறி
என்னை அன்புடன் அனுப்பினரே



எஸ்.கண்ணகி



மாயமோதிரம்
படக்கதை: எஸ்.கே. இராமானுஜம் (ராஜு)
சர்க்கஸ் கோமாளி ஒருவன் ஒரு நாள் மிகவும் வருத்தமாக உட்கார்ந்து கொண்டிருந்தான்.
அப்பொழுது ஒரு தேவதை... அவன் முன் வந்து தோன்றியது.
ஏன் வருத்தமாக இருக்கிறாய்?
தேவதையிடம் கோமாளி தன் மனக் கவலையைக் கூறினான்.
உடனே அந்த தேவதை கோமாளிக்கு ஒரு மந்திர மோதிரத்தைக் கொடுத்தது.
"நீ... எதைக் கேட்டாலும் இம் மோதிரம் உனக்கு மட்டும் கொடுக்கும். மற்றவர் யார் அணிந்தாலும் பிச்சைக்காரர்களாகி விடுவார்கள்!"
தினமும்... கோமாளி மந்திர மோதிரத்தின் மூலம் நிறைய பல விதப் பழங்களையும், பல இனிப்புப் பண்டங்களையும் வரவழைத்து, குழந்தைகளுக்குக் கொடுத்து, தானும் உண்டு, மனம் மகிழ்ந்து வாழ்ந்தான்.
குழந்தைகள் விரும்பும் விளையாட்டுப் பொருள்களையும் வரவழைத்துக் கொடுப்பான்.
ஒரு நாள்.. ஒரு பணக்காரரின் பொல்லாத மகன், மோதிரத்தை கோமாளியிடமிருந்து திருடிக் கொண்டு ஓடி விட்டான்.
என்னுடைய மாய மோதிரம் எங்கே?


வழக்கம் போல் குழந்தைகள் கோமாளியிடம் வந்து தின்பண்- டங்களைக் கேட்- டனர்.
இனி... நீங்கள் விரும்பிக் கேட்பதை என்னால் கொடுக்க இயலாது.
தன்னை நாடி வரும் சிறு குழந்தைகளை ஏமாற்றி விட்டோமே.. என்று கதறி அழுதான்.
கோமாளி தன் சம்பளப் பணத்தைக் குழந்தைகளின் சந்தோஷத்திற்கு செலவு செய்யத் தொடங்கினான்.
"அப்பா! இது ஒரு அதிசய மோதிரம்! நான் இதை ஒரு கோமாளியிடமிருந்து திருடிக் கொண்டு வந்தேன்.
பேராசை கொண்ட அப் பணக்காரர் அம் மந்திர மோதிரத்தை உடனே வாங்கி, கையில் அணிந்து கொண்டு ஆனந்தமாகச் சிரித்தார்...
அவ்வளவு தான்... அடுத்த வினாடியே! அவருடைய பணங்களும், பங்களாவும் மறைந்து விட்டன! அதனால் அப் பணக்காரர் மிகவும் ஏழ்மை- யான நிலைக்கு மாறி விட்டார்.
தான் ஏழ்மை நிலையை அடைந் ததைக் குறித்து அப் பேராசைப் பணக்காரர் ஓ... வென்று வாய் விட்டு கதறி அழுதார்.
பணக்காரரின் மகனும், தான் செய்த தவற்றை உணர்ந்து... திருடிய மோதி ரத்தை அக் கோமாளியிடம் கொடுத்து விட்டு, மன்னிப்புக் கேட்டான்.

கேளுங்கள் சொல்லுகிறோம்

* குதிரையின் கண்கள் இரண்டுக்கும் கண் மூடி போட்டு வண்டியில் ஓட்டுகிறார்களே, எதற்காக?

— என். சேதுராம், கடலூர்.



குதிரை மிகவும் பயந்த சுபாவமுடையது. அதனால், பக்கத்துப் பார்வையிருந்தால், எதையாவது பார்த்துப் பயந்து வழி தவறி ஓடலாம்; அல்லது வண்டியைக் கவிழ்த்துவிடலாம். அதனால்தான், அந்தப் பக்கம் இந்தப் பக்கம் பார்க்காமல் நேராக அது செல்ல வேண்டும் என்பதற்காகவே கண்மூடி போடுகிறார்கள்.

* காந்தித் தாத்தாவுக்கு மிகவும் பிடித்தமான பாட்டு எது?

— ஆர். ராஜாத்தி, மதுரை — 2.

'ரகுபதி ராகவ ராஜாராம்' என்ற பாட்டும், 'வைஷ்ணவ ஜனதோ' என்ற பாட்டும் காந்தித் தாத்தாவுக்கு மிகவும் பிடித்தமானவை.

* பிச்சைக்காரர்கள், 'அம்மா தாயே, பிச்சை போடு' என்றுதானே கேட்கிறார்கள்? ஏன் 'அப்பா, ஐயா, பிச்சை போடு' என்று கேட்பதில்லை?

— சி. வேதாசலம், சிங்கப்பெருமாள் கோயில்.

சோறு அல்லது அரிசி கேட்கும் போது தான் 'அம்மா தாயே' என்கிறார்கள். காசு கேட்கும் போது, 'ஐயா சாமி' என்கிறார்களல்லவா? யாரிடம் எதைக் கேட்பது என்று தெரிந்துதான் கேட்கிறார்கள்.

* எங்கள் ஊரிலுள்ள பொது நூலகத்தில் (மதுரை —20) சிறுவர்களுக்கான 'கோகுலம்', 'அம்புலி மாமா' முதலிய பத்திரிகைகள் இருந்தும், 15 வயதான சிறுவர்களைப் படிக்க அனுமதிக்க மறுக்கிறார்களே, இது நியாயமா?

— ச. கிருஷ்ணன், மதுரை — 10.

நியாயமில்லைதான். வீட்டுக்கு எடுத்துச் செல்வதென்றால், அதற்குச் சில விதிமுறைகள் உண்டு. அங்கேயே இருந்து எந்தப் பத்திரிகையையும், எந்தப் புத்தகத்தையும் படிக்கலாம். மறுக்க மாட்டார்கள், மறுக்கக் கூடாது.

* நம் தேசியப் பறவையான மயில் ஆசியாவில் மட்டும்தான் உண்டா! ஐரோப்பாவிலும் வசிக்கிறதா?

— தே. கருணாகரன், சென்னை — 10.

இந்தியா, இலங்கை, பர்மா ஆகிய இடங்களில்தான் மயில்கள் சுயேச்சையாக வாழ்கின்றன. ஆனாலும், நம் இந்தியாதான் மயில்கள் செழிப்பாக வாழ்வதற்கு மிகவும் ஏற்ற இடம் என்கிறார்கள். ஐரோப்பிய நாடுகளில், மயில்களை இங்கிருந்துதான் கொண்டு சென்று வளர்த்து வருகிறார்கள். மயில்களின் அழகிலே மயங்காதவர் உண்டோ?

* சாரநாத் மிகவும் புண்ணிய ஸ்தலம் என்கிறார்களே, அது எங்கு இருக்கிறது? எதனால் அதற்கு மிகவும் முக்கியத்துவம் தரப்படுகிறது?

— கோ. காந்தி, மணச்சநல்லூர்.

உத்தரப் பிரதேசத்தில் காசி நகருக்கு அருகில் உள்ளது சாரநாத். புத்தர் தோற்றுவித்தாரே, பௌத்த மதம் அதை முதல் முதலாக அவர் இங்குதான் பரப்பினார். இங்குதான் அசோகர் கல் தூண் ஒன்றை நிறுவியிருக்கிறார். அந்தத் தூணின் உச்சியில் நான்கு திசைகளையும் பார்த்து நிற்கும் நான்கு சிங்கங்கள் கம்பீரமாக நிற்கின்றன. நம் நாடு சுதந்தரம் பெற்ற பிறகு அந்தச் சிங்கப் போதிகையையே நாட்டின் சின்னமாகப்பெற்றுக் கொண்டிருக்கிறது.


* ஜன்னலில் உள்ள இரும்புக் கம்பி, இரும்புப் பெட்டி முதலியவற்றில் துருப் பிடித்து விடுகிறதே, எதனால்?

— கே. கோமளா, சென்னை — 17.

இரும்பு, எஃகு இவற்றால் செய்யப்பட்ட பொருள்களில் ஈரக் காற்று படப்பட அவை துருப்பிடித்து விடுகின்றன. காற்றிலுள்ள ஆக்ஸிஜனும், ஈரமும்தான் துரு ஏறுவதற்கு முக்கிய காரணங்கள். வர்ணம் பூசினால் துருப் பிடிக்காது.

* உலகிலே அதிகமான மக்களால் பேசப் படும் மொழி ஆங்கிலமா, சீனமா?

— தே. குருசாமி, கோவிலூர்.



சுமார் 70 கோடி மக்கள் சீன மொழி பேசுகிறார்கள். ஆனால், ஆங்கிலம் பேசுவோரின் எண்ணிக்கை சுமார் 30 கோடி தான்.

* குளிர்சாதனப் பெட்டியைக் கண்டு பிடித்தவர் யார்? எப்போது?

— வி. குமணன், மதுரை — 2.

1850—ல் அமெரிக்காவைச் சேர்ந்த ஜேம்ஸ் ஹாரிசனும் அலெக்சாண்டர் கேட்லினும் கண்டுபிடித்தனர்.

* குழல்களை மரத்தால் செய்கிறார்கள்; உலோகத்தாலும் செய்கிறார்கள். எது மேலானது?

— கே. சீனிவாசன், வந்தவாசி.

மரத்திலும் சந்தனமரம், கருங்காலி மரம், மூங்கில் ஆகியவற்றில் குழல் செய்கிறார்கள். ஆனாலும் மூங்கிலால் செய்யப்பட்ட குழல்தான் இனிய ஒலியைத் தரும்.

* குளவிகளால் நமக்கு நன்மையா? தீமையா?

— பி. குந்தவை, திருக்கழுக்குன்றம்.

இரண்டும்தான். பழங்களைக் குடைந்து சேதம் உண்டாக்குவதால் அவை தீமை செய்கின்றன. ஈ, காலரா போன்ற நோய்களைப் பரப்பும் பூச்சிகளையும் பயிர்களை நாசமாக்கும் கா[illegible]ப் பூச்சிகளையும் பிடித்துத் தின்பதால், நன்மை செய்கின்றன.

* 'பரங்கி மலை' என்கிறார்களே அதற்கு அப்படிப் பெயர் வரக் காரணம்?

— கி. சரவணன், கருங்காலி குப்பம்.

சென்னைக்கு 16—ஆம் நூற்றாண்டில் வந்த போர்ச்சுகீசியர்களில் பலர் சென்னைக்கு அருகிலுள்ள மலையில் வாழ்ந்து வந்தார்கள். அவர்களைத் தமிழக மக்கள் பரங்கியர் என்றே அழைத்தார்கள். அதனால், அந்த மலைக்குப் 'பரங்கி மலை' என்ற பெயர் ஏற்பட்டது.

*** முஸ்லிம்கள் கொண்டாடும் 'ரம்சான்' பண்டிகை எப்படி வந்தது?**

— மா.ச. மோகன், முசிறி — 11.

குர்ஆனின் ஒரு பகுதி நபிகள் நாயகத்துக்குக் கடவுளின் தூதராகிய ஜிப்ரேல் என்பவரால் தெரிவிக்கப்பட்டது. இப்படி அவர் தெரிவித்த இரண்டாம் ஆண்டிலிருந்தே அந்த மாதம் முழுவதும் விரதமிருந்து கடவுளை வணங்க வேண்டும் என்று ஏற்பாடாகியது. அந்த மாதத்தை ரம்சான் மாதம் அல்லது ரமதான் மாதம் என்று அழைத்து விரதம் இருந்து வருகிறார்கள்.

*** ஸ்ரீ ஆண்டாள் நாச்சியாரின் திருப்பாவையைப் பற்றிச் சில வரிகள்...?**

— த. இராஜசேகரன், குறிஞ்சிப்பாடி.

"கடவுளைக் காண வேண்டும். கண்டு அவர் உள்ளம் மகிழத் தொண்டு செய்ய வேண்டும்" என்ற ஆண்டாளின் ஆர்வத்தால் பாடப் பெற்றதுதான் 'திருப்பாவை.' முப்பது பாசுரங்கள் கொண்ட இதை 'உபநிடதசாரம்' என்றும் சொல்லுவார்கள். மார்கழிப் பௌர்ணமியன்றுதான் திருப்பாவையை ஆண்டாள் பாடினார் என்று கூறப்படுகிறது.

*** ஆமையின் உணவு என்ன?**

— ஜெ. மணிகண்டன், வையச்சேரி.

ஆமையின் உணவு பெரும்பாலும் பாசி முதலிய தாவரங்கள்தான். சில புழு, மீன், நத்தை, அழுகிய பொருள்கள் முதலியவற்றைத் தின்னும்.



டாக்டர் பக்கம்

நீரில் மூழ்கியவருக்கு முதல் உதவி

— டாக்டர் கு. கணேசன்

அன்புக் குழந்தைகளே!

உங்களைப் போன்ற குழந்தைகளைக் கவரக் கூடிய விளையாட்டுகளுள் நீச்சலும் ஒன்றல்லவா? நீங்கள் நீந்துவதால் உங்கள் உடல் தசைகள் வலிமை பெறுகின்றன. நரம்புகள் உற்சாகமடைந்து நன்கு செயல்படுகின்றன. இரத்த ஓட்டம் அதிகரித்து, இரத்தம் மிக விரைவில் சுத்தமாகிறது. ஆக, நீங்கள் விரும்பி விளையாடும் நீச்சலினால் உங்களுக்கு அநேக நன்மைகள் விளைகின்றன. அதனால் நீங்கள் நீந்தி விளையாடுவதில் தவறில்லைதான்.

ஆனால், அவ்வாறு நீங்கள் நீர் நிலைகளில் நீந்தி விளையாடும்போது உங்களுக்கு எந்தவித ஆபத்தும் வந்து விடக் கூடாது என்பதே என் பிரார்த்தனை. என்றாலும், சில சமயங்களில் எதிர்பாராத வகையில் சில குழந்தைகளுக்கு ஆபத்து வந்து விடுவதைக் காண்கிறீர்கள், இல்லையா?

நீந்தத் தெரியாத குழந்தைகள் நீந்த வேண்டும் என்ற ஆசையில் உங்களுடன் வந்திருப்பார்கள். அவர்கள் தவறுதலாக நீரில் விழுந்து மூழ்கி விடுவார்கள். சில சமயங்களில் நீந்தத் தெரிந்த குழந்தைகளே, தங்கள் சக்திக்கு அப்பாற்பட்ட தொலைவிற்கு நீந்திச் சென்று விட்டு, பின்னர் கரைக்குத் திரும்ப முடியாமல் தவிப்பார்கள். அச்சமயங்களிலும் குழந்தைகள் நீரில் மூழ்கி விடுகிறார்கள். கடலில் குளித்துக் கொண்டிருப்பீர்கள். திடீரென்று வரும் பெரிய அலையொன்று உங்களைக் கடலுக்குள் இழுத்துச் சென்றுவிடும். அந்த மாதிரி ஆறுகளில் சுழல் உள்ள இடங்களில் குளித்தால், அது தண்ணீருக்குள் இழுத்துச் சென்று மூழ்கடித்துவிடும்.

இம்மாதிரியான விபத்துக்கள் சகஜமாக நடந்து வருவதை நீங்கள் அறிவீர்கள். நீரில் மூழ்கிவிடும் குழந்தைகளை உடனுக்குடன் காப்பாற்றி, தகுந்த சிகிச்சை முறைகளை மேற்கொள்ளாவிட்டால், பாதிக்கப்பட்ட குழந்தையின் உயிருக்கே ஆபத்து வந்துவிடும்.

அது எப்படி என்பதை இங்கே சொல்கிறேன் —

நம் உடலில் உள்ள சுவாச உறுப்புக்களில் மிக முக்கியமானவை நுரையீரல்கள் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். அந்த நுரையீரல்களில்தான் அசுத்த இரத்தம் சுத்த இரத்தமாக மாறுகிறது. அதாவது நம் உடலுக்குத் தேவையான ஆக்ஸிஜனை உள்ளே எடுத்துக்கொண்டு, உடலின் கழிவுப் பொருளான கார்பன் — டை — ஆக்ஸைடை வெளியேற்றுகிறது. இத்தகைய முக்கிய பணி செய்யும் நுரையீரல்களின் சிற்றறைகளில் காற்றுக்கு மட்டுமே இடமுண்டு. மற்ற எந்தப் பொருட்கள் உட்சென்றாலும் அது காற்று உட்செல்வதைத் தடுப்பதாக அமையும். இதனால் இரத்தம் சுத்தமடைவது தடைப்படும். இதன் விளைவாக இதயம், மூளை போன்ற உடல் உறுப்புக்கள் சீர்கெடும். சுவாசம் நிற்கும். மயக்கம் வரும். பின்னர் மரணம் வரும்.

நீரில் மூழ்குபவர்களில் பெரும்

பாலோர் என்ன செய்கிறார்கள், தெரியுமா? பயத்தினாலும், என்ன செய்வது என்று அறியாத நிலையினாலும் நீருக்குள் மூழ்கியதும் வாய் வழியாக அதிகமாகத் தண்ணீரைக் குடிப்பார்கள். அல்லது மூழ்கிக் கொண்டே மூச்சையும் இழுத்து விடுவார்கள். இதனால், மூச்சுக் குழல் வழியாகத் தண்ணீர் நுரையீரலுக்குள் புகுந்து விடும். இதன் விளைவாக நுரையீரல்களில் 'வாயு மாற்றம்' நடைபெறுவது தடைப்படும். சுவாசம் நிற்கும்; மயக்கம் வரும்.

இம்மாதிரிச் சமயங்களில் தண்ணீரில் மூழ்கியவரை உடனுக்குடன் காப்பாற்ற முயற்சி செய்ய வேண்டும். தண்ணீரில் மூழ்குபவரை எப்படிக் காப்பாற்றுவது என்று யோசிக்கிறீர்களா? இதோ அதற்கும் சில யோசனைகளைச் சொல்கிறேன், கேளுங்கள் :—

— தண்ணீரில் மூழ்குபவருக்குப் பக்கத்தில் மிதக்கக் கூடிய பொருள்களான மரக்கட்டை, காற்றுள்ள ட்யூப், பெரிய பலூன், புட்பால், வாலிபால் பந்துகள் போன்றவற்றை எறிய வேண்டும். இவைகளைப் பற்றிக் கொண்டு தண்ணீரில் மூழ்குபவர் கரைக்கு வந்து விடலாம்.

— அல்லது நீளமான கயிற்றின் ஒரு முனையை நீங்கள் பிடித்துக் கொண்டு, மறுமுனையை அவரிடம் எறிந்து பிடித்துக் கொள்ளச் செய்து, கயிற்றை இழுத்து மூழ்குபவரைக் காப்பாற்றலாம்.

— நீரில் மூழ்கிக் கொண்டிருப்பவர் உங்களுக்கு அருகில் இருந்தால், உங்கள் சட்டைத் துணியின் ஒரு முனையை அவரிடம் கொடுத்து மறுமுனையை நீங்கள் இழுத்துக் காப்பாற்றலாம்.

— தண்ணீரில் மூழ்குபவரைக் காப்பாற்றும் போது, ஒரு விஷயத்தை உங்கள் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். அதாவது காப்பாற்றுபவர் நீரில் மூழ்குபவரின் மிக அருகில் செல்லக்கூடாது. ஏனென்றால், மூழ்குபவர் பயத்தாலும், எதையாவது பற்றிக் கொண்டு வெளியே வந்து விட வேண்டும் என்ற ஆசையினாலும், காப்பாற்றும் நபரையே தண்ணீருக்குள் இழுத்து மூழ்கிவிடச் செய்யும் அபாயம் உண்டு! எனவே தண்ணீரில் மூழ்குபவரைக் காப்பாற்றத் தேர்ச்சியும் வேண்டும்!

சரி குழந்தைகளே! உங்கள் திறமையைப் பயன்படுத்தி, தண்ணீரில் மூழ்கியவரைக் காப்பாற்றி, கரைக்குக் கொண்டு வந்து விட்டீர்கள். அதற்குப் பிறகு என்ன செய்வீர்கள்?

யோசிக்கிறீர்கள் அல்லவா?

இதோ அதற்கும் சில யோசனைகள் —

— தண்ணீரில் மூழ்கியவருக்கு சுவாசம் இருக்கிறதா என்பதையும், நாடித் துடிப்பு இயங்குகிறதா என்பதையும் முதலில் பார்த்துக் கொள்ள வேண்டும். சுவாசம் நின்றிருந்தால் அவருக்குச் 'செயற்கை சுவாசம்' (Artificial Respiration) ஊட்ட வேண்டும். அதை எப்படிச் செய்வது என்பதையும் உங்களுக்குச் சொல்லுகிறேன் —

— நீரில் மூழ்கியவரை மல்லாக்கப் படுக்க வைக்க வேண்டும். அவரது கழுத்துக்கு அடியில் முதல் உதவி செய்பவரது ஒரு கையைக் கொடுத்து மறு கையால் முன் நெற்றியில் வைத்து அழுத்தி, தலையைச் சற்று சாய்த்தாற் போல் வைத்துக் கொள்ள வேண்டும்.





— பற்களுக்கிடையே மரக்கட்டையைக் கொடுத்து வாயைத் திறந்தபடி வைக்க வேண்டும். மூக்கிலும் வாயிலும், மண், பாசி போன்றவை இருந்தால் உடனே அகற்றிவிட வேண்டும். வாயினுள் ஏதேனும் சிக்கிக் கொண்டிருப்பதாகத் தெரிந்தால் பக்கவாட்டில் அவரைப் படுக்க வைத்து விரல்களின் துணியைச் சுற்றிக் கொண்டு வாயைத் துளாவி எடுக்க வேண்டும்.

— பாதிக்கப்பட்டவரை மீண்டும் மல்லாக்கப் படுக்க வைத்துக் கொண்டு, அவரது வாயில் முதல் உதவி செய்பவரின் வாயை வைத்துப் பலமாக ஊத வேண்டும். வாயினால் ஊத விரும்பாதவர்கள் ஒரு சிறு குழாயை உபயோகித்து ஊதலாம். இவ்வாறு ஊதும் போது பாதிக்கப்பட்டவரின் மூக்கை அழுத்திப் பிடித்துக் கொள்ள வேண்டும். அப்போது தான் உள்ளே ஊதும் காற்று மூக்கின் வழியே வெளியே சென்று விடாமல், நேராக நுரையீரல்களுக்குள் செல்லும். இந்தச் செயற்கைக் காற்று நுரையீரல்களுக்குள் சென்றதும் நுரையீரல் விரிவடையும். இதனால் மார்பு உயரும். பின்பு ஊதுபவர் வாயை எடுத்துக் கொள்ள வேண்டும். இப்போது மார்பு சுருங்கி நுரையீரல்களிலிருந்து காற்று வெளியேறும். மீண்டும் முன்பு போலவே வாயால் ஊத வேண்டும். இவ்வாறு நிமிடத்திற்கு 12 முறை ஊத வேண்டும். குழந்தையாக இருந்தால் நிமிடத்திற்கு 30 முறை மூக்கிலும், வாயிலும் மாற்றி மாற்றி ஊத வேண்டும். இவ்வாறு செயற்கை முறையில் நாம் சுவாசம் அளித்தால், நுரையீரல் விரிந்து சுருங்க ஆரம்பித்து இயல்பான சுவாசம் வந்துவிடும்.

— சுவாசத்திற்கு வழி செய்யும் அதே நேரத்தில் இரத்த ஓட்டத்திற்கும் வழி செய்ய வேண்டியது அவசியம். அதற்குக் கழுத்தில் கைவைத்து நாடித்துடிப்பு இருக்கிறதா என்பதைக் கவனிக்க வேண்டும். நாடித் துடிப்பு இருந்தால் தொடர்ந்து செயற்கை சுவாசம் ஊட்ட வேண்டும். நாடித் துடிப்பு குறைவாகவோ, அல்லது இல்லாமலோ இருந்தால் மார்பெலும்பின் மேற்புறம் உள்ளங்கையை வைத்து அழுத்த வேண்டும். இதனால் இதயம் இயங்க ஆரம்பிக்கும். இரத்த ஓட்டம் செயல்பட ஆரம்பிக்கும். நாடித் துடிப்பு வந்துவிடும்.

— பொதுவாக, இதயத்தை இயங்கச் செய்வது, செயற்கை சுவாசம் அளிப்பது — ஆகிய இரண்டு செயல்களுமே ஒரே நேரத்தில் செய்ய வேண்டிய நிலை உண்டாகும். அதற்கு முதல் உதவி அளிப்பவர் ஒருவர் மட்டுமே இருந்தால் இரண்டு முறை வாயால் ஊதி செயற்கை சுவாசம் அளித்துவிட்டு, 15 முறை இதயத்தைப் பலமாக அழுத்த வேண்டும். முதல் உதவி செய்வதற்கு இருவர் இருந்தால், ஒருவர் இதயத்தை அழுத்த வேண்டும். மற்றவர் செயற்கை சுவாசம் கொடுக்க வேண்டும். இம்முறையை இதயத் துடிப்பும் சுவாசமும் இயல்பாக வருகிற வரைக்கும் முயற்சி செய்யலாம்.

— கிராமங்களில் மாட்டு வண்டியைக் கவிழ்த்து, அதன் சக்கரத்தின் மேல் தண்ணீரில் மூழ்கியவரைப் படுக்க வைத்து, சக்கரத்தை வேகமாகச் சுழற்றுவார்கள். இது மிகுந்த பயன்தரக் கூடிய முதல் உதவி முறை. இதனால், நுரையீரலில் நுழைந்திருக்கும் தண்ணீர் வெளியேறுவது

மட்டுமில்லாமல், சுவாசமும் இதயத் துடிப்பும் மிக விரைவில் வந்துவிடும். இந்த முதல் உதவிக்கு நீங்கள் உடனே பெரியவர்களின் உதவியை நாட வேண்டும்.

— அடுத்தபடியாக சிலர் நீரில் மூழ்கும் போது அதிகமாகத் தண்ணீரைக் குடித்து விடுவார்கள். இதனால், வயிறு வீங்கிச் சுவாசிப்பதற்கு இடைஞ்சலாக இருக்கும். இதைத் தவிர்க்க, நீரில் மூழ்கியவரைக் குப்புறப் படுக்க வைத்து, தலையைப் பக்கவாட்டில் வைத்துக் கொண்டு, முதுகையும் வயிற்றையும் அமுக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் வயிற்றில் அடைபட்டுள்ள தண்ணீர் வாய் வழியாக வெளியேறிவிடும். இதனால் சுவாசம் விரைவில் வந்திட வழிவகுக்கலாம்.

— நீங்கள் செய்யும் முதலுதவி முறைகளினால் பாதிக்கப்பட்டவர் சுயநினைவு அடைந்து விட்டாலும், உங்கள் சேவைப் பணி இத்துடன் முடிந்து விடவில்லை. அந்நபருக்குத் தகுந்த முறையில் மருத்துவச் சிகிச்சை அளிப்பதற்கு விரைவில் ஏற்பாடு செய்யவேண்டும். ஏனென்றால், நுரையீரலில் புகுந்த நீரில் நச்சுப் பொருட்கள் இருந்திருக்கலாம். அவை நுரையீரலை அரித்திருக்கக் கூடும். சில சமயம் தொற்று நோய்க் கிருமிகள் புகுந்திருக்கலாம். அவையும் நுரையீரலைப் பாதிக்கும். அது மட்டுமல்லாமல் சுவாசம் தடைப்பட்டிருக்கும் போது ஆக்ஸிஜன் கிடைக்காமல் உடம்பின் மற்ற உறுப்புக்களான இதயம், மூளை, சிறுநீரகம், கல்லீரல் போன்றவை பாதிக்கப்பட்டிருக்கலாம். இவற்றையெல்லாம் கவனித்து, பாதிக்கப்பட்ட நபருக்கு முழுமையாகக் குணம் கிடைக்க மருத்துவரால் தான் சிகிச்சை செய்ய இயலும். எனவே, மருத்துவமனையில் சேர்த்துச் சில நாட்களுக்கு மருத்துவர் கண்காணிப்பில் இருக்க வேண்டியது மிக மிக அவசியம்.


ஆக, குழந்தைகளே! தண்ணீரில் மூழ்குபவருக்கு முதல் உதவி செய்வதற்கு வேகமும், விவேகமும் அவசியம் என்பதை இப்போது நீங்கள் உணர்ந்திருப்பீர்கள், இல்லையா?

அந்த வேகமும் விவேகமும் உங்களுக்கு நிறைய இருக்கிறது என்று நம்புகிறேன். அதை நல்ல விதத்தில் செயலாக்கி, ஆபத்து வரும் நபருக்கு நிச்சயம் உதவுவீர்கள் என்றும் நம்புகிறேன்.

என் நம்பிக்கை வீண் போகாதல்லவா?

நாவலாசிரியர் ஹெமிங்வே

தோற்றம்: 21-7-1899 மறைவு: 2-7-1961



பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிட்டவர்: வி.முரளி. ஆசிரியர்: டெ. ராஜேந்திரன்.

நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை—600 032. போன்: 4 3154 3, 4 34 157.

ஆறு மாதச் சந்தா: உள்நாடு: ரூ. 18/-; வெளி நாடு: கப்பல் தபால் ரூ. 60/-; விமானத் தபால்: ரூ. 135/-.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 36/-; வெளி நாடு: கப்பல் தபால் ரூ. 120/-; விமானத் தபால் ரூ. 270/-.



ஜூலியஸ் சீசர்

தோற்றம்: 12-7-கி.மு. 102 மறைவு: கி.மு. 44

Registered No. TN MS (S) 281
Registered as a Newspaper in Sri Lanka

